
# தமிழரசு




1-10-1972 40 காசு



# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்







செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.


ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.

LT-3506



# காவலர்க்குப் பரிசளிப்பு! கடமைக்குப் பெருஞ்சிறப்பு!

மாநிலக் காவல் துறைத் தலைமை அதிகாரி அவர்களே! உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களே! தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! காவல் துறை நண்பர்களே, பெரியோர்களே, அரசு அலுவலர்களே, தாய்மார்களே!

1969-ஆம் ஆண்டு முதல் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இந்நன்னாளில் முதல் அமைச்சர் பதக்கம் என்ற பெயரில் காவல் துறையில் நீண்ட நாள் நற்பணி ஆற்றிய அதிகாரிகளுக்கும், வீரச்செயல் விளைத்திட்ட அதிகாரிகளுக்கும் பதக்கம் வழங்குதல், பொற்கிழி அளித்தல் எனும் புதிய முடிவினையேற்று, 69, 70, 71, 72, 73 ஆகிய இந்த ஆண்டுகளில் இன்றோடு ஐந்தாவது தடவையாக இந்த விழா நடைபெறுகிறதென்று நான் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

காவல் துறையினர் எந்த அளவுக்குத் தங்களுடைய கடமைகளை ஆற்றிட வேண்டுமென்பதைப் பொது மக்கள் நன்கு அறிவார்கள். காவல் துறை நண்பர்கள் சில நேரங்களில் தங்களுடைய உயிரையும் பணயமாக வைத்துத் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பொறுப்பினை நிறைவேற்ற வேண்டிய அளவுக்கு ஆளாகிறார்கள். இந்தியாவிலேயே உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு, மிகுந்த அமைதியோடும், சட்டம் ஒழுங்கு நல்ல அளவுக்குக் காப்பாற்றப்படும் என்ற அளவுக்கும் இன்றைக்கு விளங்குவதற்கு மிக முக்கியமான காரணங்களில் காவல்துறை நண்பர்களுடைய ஒத்துழைப்பும் ஒன்றாகும். குறிப்பாக நம்முடைய மாநிலக் காவல் துறைத் தலைமை அதிகாரி நண்பர் திரு. அருள் அவர்கள் மிகச் சிறந்த நிர்வாகத்தைத் தமிழகத்திலே நடத்தி வருகிறார்கள் என்பதை அனைவரும் அறிவீர்கள். அவர்கள் இந்த அரசின் கொள்கையறிந்து, இந்த அரசின் குணமறிந்து தன்னுடைய பணியை வெகு நல்ல முறையில், பாராட்டத் தக்க வகையில் நிறைவேற்றி வருகிறார் என்பது மாத்திரமல்ல- தமிழின்பால் இந்த அரசுக்குள்ள ஆர்வத்தை அறிந்து தன்னுடைய பேச்சைத் தமிழிலேயே நிகழ்த்தியிருக்கிறார் என்பதும் சிறப்புக்குரிய அம்சமாகும். அவர்களால் பொது மேடையில் தமிழில் சரளமாகப் பேசவியலாதுஎன்றாலும் தமிழிலே பற்றுக் கொண்ட முதலமைச்சருக்கு முன்னால் தமிழிலே பேசுவதற்கு --- அதற்கு அவர் எத்தனை நாள் பயிற்சி எடுத்துக் கொண்டாரோ தெரியாது-நன்றாகவே பேச வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகத் தமிழிலே பேசியிருக்கிறார். தமிழகத்தில் தமிழ் முக்கியமாகக் கருதப்படுகிற மொழிதான் என்பதற்கு, நேற்றைய தினம் பத்திரிகைகளில் வெளிவந்த 'நீதிமன்றத் தீர்ப்பு'' என்ற ஒரு செய்தியைக் கூறலாம். ஒரு பதுக்கல்காரரர் -- அரிசி வியாபாரி--அவரைக் கைது செய்வதற்கான உத்தரவை ஆங்கிலத்தில் அடித்த காரணத்தால் அது சரியாகப் புரிந்து கொள்ளப்படாமல் அவர் கைது செய்யப்பட்டார்.

ஆகவே அது புரிகின்ற தமிழில் அடித்து இருக்க வேண்டுமென்று கூறி, நீதி மன்றத்தில் விடுதலை அளிக்கப்பட்டு இருக்கிறார். உயர்நீதி மன்றத்தில் கூடத் தமிழ் எந்த அளவுக்கு உபயோகப் படுத்தப்படுகிறது, --பயன்படுத்தப்படுகிறது என்பதும், தமிழை வளர்ப்பதற்கான பாதுகாப்பு முயற்சிகள் எந்த அளவு நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

அன்பர்களே!

காவல் துறையினருக்கு ஊதியத்திலும் வேறு பல வசதி வாய்ப்புக்களிலும் என்னென்ன உதவிகளை வழங்கலாம் என்று ஆராய்வதற்கு 69-ம் ஆண்டு போலீஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் சிபாரிசுகள், ஏறத்தாழ 130 சிபாரிசுகளில், கிட்டத்தட்ட 120 சிபாரிசுகளைத் தமிழக அரசு சிலவற்றை முழுமையாகவும், சிலவற்றில் சில திருத்தங்களோடும் ஏற்றுக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தி வருகிற




தென்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். இங்கே நம்முடைய காவல் துறைத் தலைமை அதிகாரி அவர்கள் என்னைக் குறிப்பிட்டுப் பேசும்போது, 'காமதேனுவைப் பற்றிச் சொல்கிறார்கள், கண்டதில்லை. ஆனால் இங்கே நமது முதல் அமைச்சர் வடிவத்தில் அந்தக் காமதேனுவைக்காண்கிறோம்.' என்று புகழுரை தந்தார்கள். அப்படி அவர்கள் புகழும் போதே அடுத்து, தொடர்ந்து ஏதோ கோரிக்கைகள் வருகின்றன என்பதைப் புரிந்து கொண்டேன். நான் உள்ளபடியே காமதேனுவாக இருந்தால் நீங்கள் கேட்டதையெல்லாம் கொடுக்கலாம். அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் மிகுந்த தொல்லைக் கிடையே பணியாற்றுகிற காவல்துறையினரின் நண்பர்களுக்கு என்னால் இயன்றதைச் செய்ய வேண்டுமென்ற இதயம் படைத்தவன் என்ற காரணத்தால் போலீஸ் கமிஷனின் பரிந்துரைகளை மட்டுமல்லாமல் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில், இந்தப் பதக்கம், பரிசளிப்பு நிகழ்ச்சியில் ஒன்றிரண்டு கோரிக்கைகளைக் காவல்துறை சார்பாக வெளியிடுவதும்— முடிந்தவற்றை அந்த மேடையிலேயே நிறைவேற்றித் தருவதும் ஒரு மரபாக இருக்கிறது.

அந்த வகையில் இன்றைக்கு அவர்கள் இரண்டு கோரிக்கைகளை எனக்கு முன்னால் வைத்தார்கள். அவற்றில் முதல் கோரிக்கை காவல்துறையில் உள்ள காவலர்கள், தலைமைக் காவலர்கள், அவர்கள் பத்தாண்டுக் காலம் நற்பணி புரிந்து இருப்பார்களேயானால் அவர்களுக்கு ஊதிய உயர்வு ஒரு ரூபாய் என்றும், 15 ஆண்டுக் காலம் தலைமைக் காவலராகப் பணி புரிந்திருந்தால் ஒன்றரை ரூபாய் என்றும், 20 ஆண்டுக் காலம் காவலராகவோ, தலைமைக் காவலராகவோ பணியாற்றியிருந்தால் ஊதிய உயர்வு 2 ரூபாய் என்றும், ஒரு ஊதிய உயர்வை இப்போது 4000 பேருக்குத்தான் அளிப்பது என்று உச்ச வரம்பு செய்யப்பட்டிருக்கிறது. அந்த உச்ச வரம்பைத் தளர்த்தி அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எந்தனையோ காரியங்களுக்கு உச்ச வரம்பு தேவைப்படுகிறது. ஆனால் இது போன்ற காரணங்களுக்கு உச்ச வரம்பு தேவையில்லை என்பது எனது எண்ணம்.

ஐ. ஜி. அருள் அவர்களின் இந்தக் கோரிக்கையை இதே இடத்தில் அறிஞர் அண்ணா பிறந்த இந்த நன்னாளில் ஏற்றுக்கொள்கிறேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்து, அப்படிப் பயனடையக் கூடியவர்களால் காவல்துறை மேலும் பயனடையும் என்ற நம்பிக்கையோடு, உங்களது அடுத்த கோரிக்கையும் விரைவில் பரிசீலிக்கப்படும் என்று எடுத்துக் கூறி, கேட்டதையெல்லாம் கொடுத்து விட்டால் அடிக்கடி காமதேனு என்று என்னைக் கூறிக் கேட்டுக் கொண்டேயிருப்பீர்கள் என்ற என் கடந்த கால அனுபவங்கள் காரணமாக அவைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும் என்று கூறி, மேலும் ஒன்றை ஏற்றுக் கொண்டு அவற்றை அரசின் பரிசீலனைக்கு வைக்கிறேன் என்று குறிப்பிட்டு, அருமையாகப் பணியாற்றிய காவல் துறையினருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்!

தஞ்சையில் 15-9-73 அன்று நடைபெற்ற "காவல் துறையினருக்கு முதலமைச்சர் விருது வழங்கும் விழா''வில் முதல்வர் கலைஞர் ஆற்றிய சிறப்புரை:



## முதல்வர் காவல் விருது பெற்றவர் விபரம்.

**துணிவுடமைச் செயலுக்காக வீரப் பதக்கம் பெற்றோர்**

திரு. செ. சு. ஆறுமுகம்,
காவல்துறை உதவிக் கமிஷனர்,
சட்டம், ஒழுங்கு, மத்தியச் சரகம்,
சென்னை.

திரு. பெ. வேங்கட ராமானுஜம் ரெட்டி,
ரிசர்வ் இன்ஸ்பெக்டர், மதுரை.

திரு. அ. ராஜகோபாலன்,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
ஆயத் தீர்வைத் துறை.

திரு. சி. எஸ். திரிலோகசந்திரன்,
ஆய்வாளர், சென்னை நகரக் காவல்துறை.

திரு. தே. ராமசாமி, தீயணைப்பாளர்.

**தன்னிகரற்ற பணிக்காகச் சிறப்புப் பதக்கம் பெற்றோர்.**

திரு. ஜே. எ. சாமுவேல்,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
செங்கற்பட்டு--கிழக்கு.

திரு. ஹ. தீ. துக்காராம்,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
காவல்துறை உதவிக் கமிஷனர்,
சட்டம், ஒழுங்குப் பிரிவு, மேற்குச் சரகம்,
சென்னை.

திரு. சி. அ. குப்புசாமி,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
நாமக்கல், சேலம் மாவட்டம்.

திரு. தி. ர. ராமானுஜம்,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
ஆராய்ச்சி நிலையம், குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை.

திரு. எம். ஏ. ராதாகிருஷ்ணன்,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 4-வது பிரிவு, கோவைப்புதூர்.

திரு. வி. ரா. கணபதி,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
சிறப்புப் பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை,
சென்னை.

திரு. ஜெ. இரா. ஸ்ரீராமுலு,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை,
சென்னை.

திரு. சி. பிரம்மானந்தம்,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
உணவுப் பொருள் கடத்தல் குற்றங்கள் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை,
சென்னை-4.

திரு. வி. என். சீனிவாச ராவ்,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
சென்னை மாநகரம்.

திரு. ம. செ. பார்த்தசாரதி,
காவல்துறை பதிவு இன்ஸ்பெக்டர்,
தமிழ்நாடு சிறப்புக் காவல்படை 3-வது படைப் பிரிவு, மணிமுத்தாறு.

திரு. பரனூர் வேதகிரி,
காவல்துறை ஆய்வாளர்,
இலஞ்ச ஒழிப்பு, ஒழுக்கக் கண்காணிப்புத் துறை, வட ஆர்க்காடு பிரிவு.

திரு. மா. வேங்கடாசலம்,
காவல்துறை இன்ஸ்பெக்டர், சென்னை மாநகரம்.

திரு. தே. இ. சார்லஸ்லி,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
பரங்கிமலை.

திரு. இஸ்மாயில் கான்பைலம்,
காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்,
தஞ்சாவூர்--மேற்கு.

திரு. கி. வேணுகோபால்,
காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்,
திருச்சிராப்பள்ளி.

திரு. வி. சின்னத்தேவர்,
காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்,
மதுரை வடக்கு மாவட்டம்.

திரு. கு. தங்கப்பன்,
ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்,
இராமநாதபுரம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி,
தலைமைக் காவலர், செங்கற்பட்டு கிழக்கு.


திரு. இராமலிங்கம்,
தலைமைக் காவலர், சிறப்புப் பிரிவு,
குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை.

திரு. கோபால பணிக்கர்,
தலைமைக் காவலர், நீலகிரி

திரு. மு. மீனாட்சி நாயுடு,
தலைமைக் காவலர்,
ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவு,
உயர்நீதி மன்றம், மதுரைப் பிரிவு.

திரு. குப்புசாமி ராஜு,
தலைமைத் தியணைப்பாளர்,
சென்னை மாநகர்க் கோட்டம்.

திரு. வீர ராகவன்,
ரயில்வே காவல்துறை
திருச்சிராப்பள்ளி.
































# பாம்பன் கடல் மீதினிலே பாலம் அமைப்போம்...!

இராமேசுவரம் செல்லும் பயணிகள் புகைவண்டிப் பாதையில்தான் செல்ல முடியும் என்ற நிலை பல்லாண்டுக் காலமாக இருந்து வருகிறது. அந்நியர் ஆட்சியின்போது பாம்பன் கடலில் புகைவண்டிப் பாலம் போடப்பட்டதும்—கடலில் கப்பல் வரும்போது அந்தப் பாலம், கப்பலுக்கு வழி விட்டு வருவதும் உலகறிந்த வரலாற்றுச் செய்தி.

இராமேசுவரத்தையும் மண்டபத்தையும் தரை வழியில் இணைக்க வேண்டும் என்றும் அதற்காக ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு நீண்ட நாட்களாக முயன்று வந்தது. இந்த அரும் பெரும் திட்டத்துக்கு—மைய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்து விட்டது.

கடந்த 19—9—73 அன்று இந்த இணைப்புப் பாலத்துக்கு அடிக்கல் நாட்டும் விழா இனிது நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை தாங்க இருந்த முதல்வர் கலைஞர் அவர்கள், உடல் நலக் குறைவின் காரணமாக, விழாவில் பங்கு கொள்ள இயலவில்லை. அதனால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்க, மைய அரசின் கப்பல்—போக்குவரத்து அமைச்சர் ராஜ்பகதூர் அவர்கள் வரவேற்புரை ஆற்ற, இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அடிக்கல் நாட்டினர்கள். அப்போது நிகழ்த்திய உரையில், அவர் குறிப்பிட்டார்:

''இந்தப் பாலத்தின் மூலம் இந்தப் பகுதி மக்களுக்குப் புது வாழ்வு கிடைக்கும் என்று நம்புகிறேன். பாலத்தின் மூலம் எப்படி இரு பகுதிகள் இணைகின்றனவோ, அது போல் நாம் சமுதாயங்களை ஒன்றாக இணைக்க வேண்டும்!''

விழாவில் கலந்து கொள்ள முடியாததால் முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தி அனுப்பினர்கள் :

''நீரில் பிரிக்கப்பட்ட இராமேசுவரம் தீவை, மண்டபத்துடன் இணைக்கும் மகத்தான திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் தலைமை ஏற்கக் கிடைத்த வாய்ப்பைப் பெருமையாகக் கருதுகிறேன் என்றாலும் உடல்நிலை காரணமாக விழாவில் கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்.

''மண்டபம் — இராமேசுவரம் இரண்டையும் இணைக்கும் பாலம் ரூ. 5·5 கோடி செலவில் கட்டப்படவிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

''இந்தியாவில் மிக நீளமானதும் முதன்முதலில் கடல் மீது கட்டப்படுவதுமான இந்தப் பாலம்—இந்தியாவுக்கு—குறிப்பாக, தமிழ்நாட்டுக்குச் சிறப்பானதாகும். தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று, பாலம் அமைக்கும் முயற்சி மேற்கொண்ட ராஜ்பகதூருக்கும் அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்த பிரதமருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சென்னைப் பல்கலைக் கழகத்தில் நேரு நினைவுச் சொற்பொழிவு நடத்துவதற்காக வழங்கப் பெற்ற ரூ. 10 ஆயிரத்துக்குரிய காசோலையைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களிடம் தருகிறார் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி.

''பாலம், இரண்டு வேறு பகுதிகளில் இருக்கிற மக்களையும் — ஊர்களையும் ஒன்றுசேர்ப்பது மாத்திரமல்ல —பொருளாதார வளர்ச்சியில் மிகவும் முக்கிய இடம் பெறுவதும் ஆகும். இந்த வகையில் இந்தப் பாலத்தால் கிடைக்கும் பயன் மிகவும் பெரியது.

''வடக்கே, காசிக்கு உள்ள பெருமை தெற்கே இராமேசுவரத்துக்கும் உண்டு. இந்தப் புகழுக்குரிய பகுதியில் விழா நடப்பதும், அதில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்வதும் என்றென்றும் நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாகும்.

''நான், விழாவில் கலந்து கொள்ள முடியாமைக்கு மீண்டும் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்; பிரதமருக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.


—இவ்வாறு முதல்வர் கலைஞர், தாம் அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் கலைஞர் கூறியுள்ளபடி இந்தியாவுக்கு—அதிலும் குறிப்பாகத் தமிழகத்துக்கு— இந்தப் பாலம் புகழ் தேடித் தரும் என்பது உறுதி!



பாம்பன் பாலத்தின் மாதிரி வடிவத்தை இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி பார்வையிடுதல்.

# அருந்தமிழ்க் கவிஞர்கள் அண்ணலுக்குச் சூட்டிய பாமாலைகள் !



வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மாநீ வாழ்க ! வாழ்க !

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்
குடிமையி லுயர்வு, கல்வி
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்

—சுப்பிரமணிய பாரதியார்



காந்தியார் இறந்தார் என்று கழறினர் கலங்கிற் றுள்ளம் !
ஏய்ந்தஇம் முப்பா ணுண்டில் எழுந்தஅவ் வுணர்வின் ஊற்றால்
மாந்தரின் வறண்ட நெஞ்ச வயலெல்லாம் விளைச்சல் கண்டோம்!
வீழ்ந்தநாட் டெழுச்சி கண்டோம்! வையகம் வியக்கக் கண்டோம்!

இறந்தனர் காந்தி யாரென் றியம்பினர் எரிந்த துள்ளம் !
சிறந்தனர் எவரும் ஏத்தச் சிறந்தனர் ! நாம்சி றக்கப்
பிறந்தனர் ! வாழார் வாழும் பெருநெறி காணக் காட்டிப்
பறந்தனர் ; இசைமு ழக்கப் பறந்தது வானம் பாடி !


பாவேந்தர் பாரதிதாசன்.



மந்திரங்கள் ஏவாமல் மயங்க வைத்தான்
மாயங்கள் புரியாமல் மலைக்கச் செய்தான்
தந்திரங்கள் இல்லாமல் தலைவன் ஆனான்
தண்டனைகள் பேசாமல் தணியச் செய்தான்
அந்தரங்க ஒற்றரில்லா அரச னானான்
அண்ணலெங்கள் காந்திசெய்த அற்பு தங்கள்
எந்தவொரு சக்தியினால் இயன்ற தென்று
எல்லாரும் கூர்ந்தறிய எண்ண வேண்டும் !

— நாமக்கல் கவிஞர்


# வாளும் வள்ளுவரும்



பண்டைத் தமிழர்கள் போர்க்களம் சென்று, வீரம் விளைத்து, விழுப்புண் தாங்கி, வெற்றி சூடுவதைப் பெருமையாகக் கருதினர். புலவர் பொன்முடியார், ''வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடமை'' என்றும், ''ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளையின் கடமை'' என்றும் குறிப்பிட்டுப் போந்தார். பிறக்கும் குழந்தை இறந்து பிறந்தாலும் அல்லது சதைப் பிண்டமாக வெளிவந்தாலும் 'இவை வாள் வாய்ப்பட்டு இறந்தாலல்லது நலமின்று' எனக் கருதி அவற்றையும் வாளால் போழ்ந்து அடக்கம் செய்வது வழக்கமாக இருந்தது. அதியமான் நெடுமானஞ்சி தன் பகைவர்களை வென்று திரும்பிய காலை ஔவையார், உன்

''பெருந்தகையே! உன்னோடு பகைவர்கள் சண்டையிட்டு நின் வாள் பாய்ந்தமையால் சிதைந்து அழிந்தனர். அதனால் அவர்களுடைய சுற்றத்தார் கூடி வாளால் போழ்ந்து அடக்கம் செய்யும் சிறுமையில்லாது ஒழிந்தனர்'' என்றார். மார்பில் வாட்புண் பெருமை இழிவு என்ற நிலை அன்று இருந்து வந்தது. வீரர்களை என்றும் விட்டுப் பிரியாது உடன்மருவி உறைந்த பொருளாக வாள் இருந்தது. வாள் மறவ, வாள் மேம்படுந, வாள்வலத்த வாளின் வாழ்ந என்பன வீரர்களுடைய விளிப் பெயர்களாக விளங்கின. என்றும் சுற்றிக் கொண்டே இருக்கக் கூடிய ஒருவனை ''இவன் காலில் சக்கரத்தோடு பிறந்தவன்'' எனக் குறிப்பிடும் வழக்கமுண்டல்லவா? பிறக்கும் போதே காலுடன் சக்கரமும் சேர்ந்து பிறந்தது என்பது இதற்குப் பொருளாகாது. சுற்றித் திரியும் தன்மை சுற்றும் இயல்புடைய சக்கரத்தோடு இணைக்கப்பட்டு நயம்படப் பேசப்படுகிறது. இவ்வாறே, அன்றையத் தமிழர் வீரம் செறிந்தவர்களாய், வாளைவிட்டு எப்போதும் பிரியாதவர்களாய் இருந்தமையால் 'வாளொடு பிறந்தவர்கள்' என்று சொல்லும் சிறப்பைப் பெற்றனர்.

புறப்பொருள் வெண்பா மாலை,



சு.செல்லப்பன்



''கல்தோன்றி மண்தோன்ருக்
காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி''

எனத் தமிழ்க் குடியைப் பேசி மகிழ்கிறது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த வாளை உவமையாக்கி —சுட்டிக்காட்டி— வளம் மிக்க கருத்துக்கள் பலவற்றை வள்ளுவர் எடுத்தோதுகின்ருர்.

நமக்கு நண்பர்கள் உள்ளனர்; பகைவர்களும் இருக்கக் கூடும். சீரிய நண்பர்கள் வாய்த்து விட்டால் ஒருவனுக்கு அதை விட வேறு சிறப்புத் தேவையில்லை. நல்லவர்களுடைய நட்பு நாளும் வளரும். 'சேரிடம் அறிந்து சேர்' என்பது சான்ருேர் உரை. நட்புக் கொள்வதில் பெரு விழிப்பு வேண்டும். உள்ளத்தே பகைமை கொண்டு, முகம்நக நண்பர்கள் போல நடித்து வாழ்வாரும் உண்டு. இவர்கள் வெளிப்படத் தோன்றும் பகைவர்களை விட அஞ்சத் தக்கவர்கள்.

பகைவர்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒருசாரார் 'வாள்' போல வெளிப்படத் தோன்றி நிற்கும் பகைவர். பகைவர் என்று நாமறிதலாலும், அவர்களால் நேரிடக் கூடிய தீமைகளினின்று தற்காத்துக்கொள்ள முடியுமாதலாலும் அவர்களைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை.

மற்ருெரு சாரார் இருக்கிருர்களே, அவர்களுடைய செயல் மிகக் கொடுமையானது. அவர்களுக்குத் திருவள்ளுவர் சூட்டியுள்ள பெயர் 'கேள் போல் பகைவர்' என்பதாம். உறவினர் போல நடிப்பார்கள்; உள்ளத்தே பகையிருக்கும்; உயிரனையவர் என்று பறைசாற்றித் திரிவர்; வாய்ப்பு நேரும் போது நம் உயிர்க் கொல்லியாகவும் மாறுவர்; கைகூப்பி முகமன் பேசி எங்கும் முந்தி நிற்பர். எதுவரை? தாம் எதிர்பார்க்கும் ஆதாயம் கிட்டும் வரை! இவரோடு இருப்பதில் இனி நமக்குப் பயனில்லை என்று உணர்ந்தாலோ அல்லது தம் வஞ்சகத் தன்மையை அறியும்நிலை வந்துற்றது என்ருலோ அந்தக் கணமே பழகிய பாங்கையும் மறந்து பகைவர்களாகக் காட்டிக் கொள்வர். பகைமைத் தன்மையை நட்புப் புனைவு கொண்டு மறைத்து வாழும் இவர்கள் வெளிப்பட நிற்கும் பகைவர்களினும் அஞ்சத்தக்கவர். நண்பர்கள் போலவே நடித்து வந்து திடீரெனப் பகைவர்களாக மாறுவதால் தீமை பற்றிய முன்னறிவிப்புக்கு இடமின்றிப் போகிறது. எனவே இந்த உட்பகையே கொடிய பகையாகும். வெளிப்பட நிற்கும் பகைவர்கள் அறிய வேண்டியவர்கள்; உட்பகைவர்களோ அஞ்ச வேண்டியவர்கள். வள்ளுவர் குறிப்பிடுகிருர்:

'வாள்போல் பகைவரை
அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு''

உட்பகைவர்கள் அடுப்புத்தீ போல அடங்கி நடந்து, வாய்ப்பு நேரும் போது இருந்த வீட்டையே அழிக்கும் கொள்ளித் தீயாக மாறிவிடும் வஞ்சகர்கள். 'கேள் போல் பகைவர்'க்கு ஓர் அரிய எடுத்துக் காட்டாக, வடிவமாக, நாடகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் மனோன்மணீயம் நாடகத்தில் வரும் குடிலனை எடுத்துக் கொள்ளலாம்.

குடிலன், பாண்டிய மன்னன் சீவக வழுதியின் அமைச்சன். சூழ்ச்சியே உருவானவன். திறம்பட நடித்து யார் யார் மன்னனிடம் உண்மை அன்புடன் இருக்கிருர்களோ அவர்களை விடத் தன்னையே உண்மையானவன் என்று நம்பும்படிச் செய்தவன்; குலகுரு சுந்தர முனிவரைவிடத் தன்பால் அன்பும் மதிப்பும் கொள்ளுமளவுக்கு மன்னனை வயப்படுத்தியவன். உண்மையில்,

''.................குடிலனே
சூதே உருவாய்த் தோன்றினன்
அவன்தான்
ஓதுவ, உன்னுவ, செய்குவ,
யாவும்
தன்னலம் கருதி அன்றி
மன்னனைச்
சற்றும் எண்ணுன்; முற்றும்
சாலமா
நல்லவன் போலவே நடிப்பான்
பொல்லா
வஞ்சகன்''

அரசனே அவனைப் பெரிதும் நம்பி விட்டான். குடிலனின்றி யாதொரு செயலையும் அவன் செய்வதில்லை. வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணும் மன்னன் தன்னை அழிக்க நிழல் போல உடனுறையும் குடிலனின் சூழ்ச்சியை அறியாது

''குடிலா! உன்னைப்போல கூரிய
மதியோர்
கிடையார் கிடையார்...........





எனப் பாராட்டினான். 'என் உடல், பொருள், ஆவி, சுற்றம் அனைத்தும் நின்னுடையதேயன்றோ' என்று அவ்வஞ்சகன் பகன்ற மொழிகளை உண்மையென்று கருதி, ''ஆஆ! நமது பேறல்லவா இவனை நாம் அமைச்சனாகப் பெற்றது'' என்று பெருமிதத்தில் திளைத்தான். குடிலனோ தனிமையில் இருக்கும் போதெல்லாம்

''மன்னவன் நமது நிழலில்
மறைந்தான்
பிடித்தால் கற்றை விட்டாற்
கூளம்''

என்று ஏளனமாக மனத்துள்ளே எண்ணி வந்தான்.

மன்னன் மகள் மனோன்மணிக்குச் சேர மன்னன் புருடோத்தமனை ஏற்ற கணவன் என்றும், மணம் பேசி வர நடராசனைத் தூதாக அனுப்பலாமென்றும் குலகுரு கூறினார். குடிலன் மன்னனிடம் இனிக்கப் பேசி இத் திட்டத்தை மாற்றித் தன் மகன் பலதேவன் தூது செல்லும் நிலையை ஏற்படுத்தினான். பலதேவன் தூதால் சேர நாட்டுக்கும், பாண்டி நாட்டுக்கும் போர் மூண்டது. குடிலனும் இதையே எதிர்பார்த்தான். போரில் சீவக வழுதி தோற்க வேண்டும். சேரனிடம் நயந்து பேசிப் பாண்டி நாட்டு அரசுரிமையைத்தான் பெற்று விட வேண்டும். இது வஞ்சகன் குடிலனின் எண்ணம். முதல் நாள் போரில் சீவகன் தோற்றான். புறமுதுகிட்டோடவிரும்பாத மான வீரனாகிய வழுதி, மறுநாள் போரில் உயிர்விடத் துணிந்தான். சுந்தர முனிவர் தாயில்லாத பெண் மனோன்மணியின் ஆதரவற்ற நிலையைக் கூறி, மறுநாள் போருக்குச் செல்வதன் முன் அவளுக்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்றார். திருமண ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. அந்த வேளையில் குடிலன் எதிர்பாரா விதமாகச் சேர மன்னனை அவன் படை வீட்டருகே சந்தித்தான். தன் துரோக சிந்தையை அவனிடம் வெளிப்படுத்தினான். ''போரில் சீவகன் தோற்பது உறுதி! மன்னன் என்ற பெயரை எனக்குத் தந்தால் போதும். உன் அடி பணிந்து நீ இட்ட ஏவலைச் செய்து வருவேன்'' என்றான். துரோகத்தைத் தூள் தூளாக்க விழையும் உயர் உள்ளம் கொண்ட புருடோத்தமன், குடிலனை விலங்கிட்டுப் பாண்டியன் இருக்குமிடத்திற்குச் செலுத்தினான்.

பாண்டி மன்னன் அரண்மனையிலோ மண நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. குடிலன் அங்கில்லை. அதைக் கண்ட மன்னன், அவனைப் புகழ்ந்து பேசினான்! அதே நேரத்தில் அவன் தன்னை எதிரியிடம் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் அறியவில்லை. பாவம்! மன்னன் பேசினான்:

''அறிவுள்ள யார்தான் அவன் மதியைக் கண்டு வியக்காதிருக்க முடியும்!

உண்மைக்கு உறைவிடம்;
திண்மைக்கு அணிகலம்
சத்திய வித்து ; பக்திஉன்
மத்தன்;
ஆள்வினை தனக்காள் ;
கேள்விதன் கேள்வன்

இன்னும் சொல்வேன். இந்த நடுநிசியிலும் யான் அறியாது எனக்காக உழைக்கச் சென்றுள்ளான் பார்த்தீர்களா! நல்ல வேளை அவன் இங்கில்லை; இருந்தால் தன் புகழ் கேட்க விரும்ப மாட்டான்''. ஏமாற்றியவனுக்கு ஏமாந்தவன்சூட்டிய புகழாரம் இது.

அவ்வேளை புருடோத்தமன் குடிலனோடு அங்கு வந்து சேர்ந்தான். கனவில் கண்டு தான் காதலித்தவன் எதிரில் நிற்பதைக் கண்ட மனோன்மணி அவனுக்கு மாலை சூட்டினாள். புருடோத்தமன் வஞ்சனையாக நுழைந்து விட்டதாகப் பாண்டியன் கருதினான். வஞ்சகன் யார் என்பது புரியாமலேயே. புருடோத்தமனோ, அமைதியாக,

''மன்னவ! உன் அமைச்சனே சூதின் உருவம். இவனுடைய சூதும் துரோகமும் சொல்லி உன்னைத் தெருட்டவே இங்கு வந்தேன். வந்த இடத்தில் என் உயிர் மருந்து மனோன்மணியையும் பெற்றேன். இதோ போகின்றேன். விடை கொடு. விரும்பினால் நாளை போர்க்களத்தே சந்திப்போம்'' என்றான். சீவக மன்னன் குடிலனை நோக்கி ''உண்மையா? குடிலா! உரையாய்......'' என்றான். வஞ்சகன், முகம் கவிழ்ந்து நின்றான்.

'கேள்போல் பகைவர்க்கு' இக்குடிலனைவிட்ச் சரியான உருவாக வேறு எவர் இருக்க

முடியும்? குடிலர்கள் ஒன்றனை உணர வேண்டும். எவ்வளவு தான் வஞ்சனைகள் புரிந்தாலும், வெற்றி கிட்டுவது போல வெளிக்குத் தோன்றினாலும், சீவகவழுதிகளை ஏமாற்றி விட்டதாக மனப்பால் குடித்தாலும், அவர்களை அடக்கப் புருடோத்தமர்கள் தோன்றியே தீர்வர். இது திண்ணம். நீதியின் முன்னால் அவர்கள் தலைகவிழ்ந்து நின்றேயாக வேண்டும்.

மக்கள், முயற்சி உள்ளவர்களாக இருக்க வேண்டும். முயற்சி எல்லா வகையான வளங்களையும் சேர்க்கும். 'தீப்பந்தத்தைத் தலைகீழாகப் பிடித்தாலும் தீச்சுடர் எப்போதும் மேல் நோக்கியே இருப்பது போல' எத்தகைய இடையூறுகள் நேர்ந்தாலும் முயற்சியுடையோர் தளர்ச்சியடையார். எடுத்த செயலைத் தளர்வின்றிச் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர்களே பிறருக்கு உதவியாக இருக்க முடியும்; பொதுநலத் தொண்டாற்ற முடியும். பிறர்க்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருந்தால் போதாது. அதை நிறைவேற்றுவதற்கு ஓயாத உழைப்பும், மலை குலைந்தாலும் நிலைகுலையாத் தன்மையும் இருக்க வேண்டும். முயற்சி இல்லாதவன்—ஊக்கம் இல்லாதவன் பிறர்க்கு உதவியாக இருக்க முயல்வது பேடியின் கையில் இருக்கின்ற வாளைப் போன்றதாகும்.



**தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்.**
**(614)**

எண்ணுவது வேறு; செயலாற்றுவது வேறு; எண்ணமே செயலாகி விட முடியாது. எண்ணியதை எண்ணியாங்கு எய்த ஏற்ற செயற்றிறம் வேண்டும். வாள் வைத்திருப்பவனுக்கு அதை ஆள வேண்டிய ஆண்மை வேண்டும். ஆண்மையின்றேல் வாளிருந்தும் பயனில்லை. அதைப் போலவே முயற்சியில்லாதவன் பிறர்க்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தாலும் அதனால் பயனேதும் விளையப் போவதில்லை. கையில் வாளைத் தந்தால் கோழை அதைக் கண்டு அஞ்சுவான். ஊக்கமில்லாதவர்களைப் பொதுநலத் தொண்டு என்ற எண்ணமே கலக்குவதாகவும் அமைந்து விடக் கூடும்.

அவையிலே பேசுதல் ஓர் அரிய கலை. எல்லார்க்கும் கைவந்து விடக் கூடிய ஒன்று அன்று. பேசும் ஆற்றல் பெற்றிருந்தாலும் பேசும் பொருளைத் தெளிவுடன் விளக்குவது அரிய செயல். பொருளில் தெளிவு இருக்கலாம். ஆனால் கேட்போர் மனம் கொளப்பேசுதல் அருமை. நண்பர்கள் முன்னே அல்லது தனி உரையாடல்களில் பேசும் ஆற்றல் பெற்றோர் அவையில் பேச அச்சப்படுவதும் உண்டு. ''அவையஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வி பூத்தலிற் பூவாமை நன்று'' என்பார் நீதி நெறி விளக்க ஆசிரியர். திரிகடுகம் ஆசிரியரோ 'பல்லவையுள் அஞ்சுவான் கற்ற அருநூல் துஞ்சுமன் கண்ட கனா!'' என்பார். சிலர், கற்றறிந்தார் கூடியுள்ள அவையைக் காணும்போது அஞ்சி நாவினை அடக்கிக் கொள்வர். ஆனால் ஒன்றுமறியாதார் முன்னாலோ கடல் மடைத் திறப்பெனப் பொழிவர். இது, ''போர்க்களத்தில் படையைக் கண்டு அஞ்சிப் பின் வாங்குபவன், தன் வீட்டினுள்ளே இருந்து கொண்டு சட்டி பானைகளை நோக்கி அம்பு விடுகின்ற செயலைப் போன்றது'' என்கிறது பழமொழி.



அவையஞ்சாது, தெளிவாக, கொள்வோர் மனம் கொளக் கொடுக்கும் போது தான் சொல்லப்படும் செய்தி பெருமை பெற முடியும். அரிய செய்தியுங்கூட, சொல்வோர் திறமையற்றவராயின் பொலிவு பெறாது. போருக்கு அஞ்சுபவன் கையில் வாள் இருப்பதில் பயனில்லை. அது போன்றே அவைக்கு அஞ்சுபவன் அரிய நூல்களைக் கற்றிருந்தாலும் அதனால் பயன் எதுவும் விளையப் போவதில்லை.

**வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்**
**நுண்ணவை அஞ்சு பவர்க்கு.**
**(726)**

அவையினிடத்தில் அஞ்சுகின்றவன் கற்ற நூல், போர்க்களத்தே அஞ்சுகின்ற கோழையின் கையில் ஏந்திய கூரிய வாளைப் போன்றது.



**பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சு மவன்கற்ற நூல். (727)**

வாள், கூர்வாளாக, மட்டும் இருந்தால் போதாது; அது யார் வாள்? என்பதிலேதான் மதிப்பு அடங்கியுள்ளது. வாள்,

அதனை எடுத்து வீசும் ஆற்றல்
மறவன் கையிலிருக்கும் போது
பயனுடையதாக இருக்கும்.
பேடி கையில் இருக்கும்
போது பயன்படாது போவது
மட்டுமின்றித் தன் மதிப்பை
யும் இழக்கிறது. அறிவுச்செறி
வுடன் கூடிய நூலாக இருந்
தாலும் அதனைத் தக்காங்கு
எடுத்துக் கூறினாற்றான்
அந் நூலினாலாகிய பயனை
நாம் எய்த முடியும்.



நாள்கள் கழிவதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத நல்லவர்களும் நாட்டில் இருக்கக் காண்கிறோம். பொழுது போதவில்லையே' என்று எண்ணி ஏங்க வேண்டியது போலப் 'பொழுது போகவில்லையே' என்றுகுறைப்படும் புல்லறிவாளர்களையும் காணத்தான் செய்கிறோம். நாள்கள் என்ற தாள்களின் இணைப்பே வாழ்க்கைச் சுவடி. தாள் நீங்க நீங்கச் சுவடியின் அளவு குறைவது போல, நாள் கழியக் கழிய ஆயுளும் குறைகிறது என்ற எண்ணமே பலருக்குத் தோன்றுவதில்லை. கடிகாரம் அடிக்கின்ற ஒவ்வொரு மணியும்; 'உன் ஆயுளின் ஒரு பகுதி குறைந்துவிட்டது' என்ற அறிவிப்பு மணி என்பதை மறந்துவிடக் கூடாது. நாட்காட்டியில் நாள்தோறும் தாளைக் கிழிக்கும் போது ஏதோ வெற்றுத் தாளைக் கிழித்தெறிவது போன்ற உணர்வோடு செயல்படுகின்றோமே யொழியச் சிந்திப்பதில்லை. தாளைக் கிழிக்கும் முன் நன்றாகச் சிந்திக்க வேண்டும். 1-ம் நாள் உள்ள தாளை கிழிப்பதாகக் கொள்வோம். இந்த 1-ம் நாள் உள்ள தாளை இனிக் கிழிக்க நமக்கு வாய்ப்புண்டா? இருப்பது போலத் தோன்றும். செப்டம்பர் 1 என்றால்அடுத்து அக்டோபர் 1 வரப் போகிறதல்லவா? மேலே சிந்திக்கிறோம்; செப்டம்பர் 1-ஆம் நாள் உள்ள தாளை இனிக் காண முடியுமா? 1973 செப்டம்பர் 1 என்றால் 1974 செப்டம்பர் 1 வந்துதானே ஆக வேண்டும்? இன்னும் மேலே சென்று 1973 செப்டம்பர் 1-ஆம் நாள் உள்ள தாளை இனி நமக்குக் கிழிக்க வாய்ப்பு இருக்கின்றதா என்று நினைக்கும் போதுதான் சென்ற நாள் சென்றதுதான்; இனித் திரும்பாது என்பது புரிகிறது. ''நாள் என்பதை வெறும் தோற்றமாகக் கொள்ளாதே; உண்மையில் அது உன் உயிரை அறுக்கும் வாள் என்று அறிந்து கொள்'' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.



'' நாள்என ஒன்றுபோல்
காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப்
பெறின் '' (334)

பெரிய மரங்களைச் சவ்வாள் (இரம்பம்) கொண்டு அறுப்பதைப் பார்க்கின்றோம். வாளின் இரு பக்கங்களில் இருவர் அதைப் பற்றிக் கொண்டு முன்னும் பின்னுமாகத் தள்ளுகின்றனர். இழுக்கப்படும் வாளை நன்கு கவனித்தால் மரத்துக்கு வெளியேயுள்ள பகுதி நம் கண்களுக்குப் புலப்படும்; மரத்தினுள்ளே உள்ள போது வாள் கண்ணுக்குத் தெரியாது; கண்ணுக்குத் தெரியாது மரத்தினுள் மறைகின்ற அந்த வேளையில் அது மரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அறுத்து வந்து இறுதியில் சாய்த்தும் விடுகின்றது. இழுப்போர் இருவரும் இரவும், பகலுமானால் இரவும் பகலும் மாறிமாறி வர, நாள் என்ற சவ்வாள், உயிர் மரத்தைக் கொஞ்சம்கொஞ்சமாக ஈர்த்து இறுதியில் சாய்த்தும் விடுகின்றது.

வீட்டை இழந்தோமா? விலை கொடுத்து மீட்டுக் கொள்ளலாம். நாட்டை இழந்தோமா? அதைக் கூட இடைவிடாது போரிட்டுத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அரிய செல்வங்களை இழந்தோமா? உழைப்பினால் மீட்டுப் பெறலாம். ஆனால் நாளை இழந்து விட்டால் இழந்தது இழந்தது தான்; திரும்பப் பெற எந்த வழியும் இல்லை. இந்த உண்மையை நன்கறிந்தால் நாம் வாழ்நாட்களை வீண் நாட்களாகக் கழிப்போமா?








## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

# சேமிப்புப் பழக்கமே
# எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது., சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு


# அண்ணல் சீர் போற்றுவோம்!

மனசை ப. கீரன்



காவிரிப்பூம் பட்டி னத்தில் தாவியுயர் ஏற்காட்டில்,
ஓவியம்போல் ஒளிர்கோடைக் கானலிலே, இயற்கைதவழ்
குற்றாலம் எங்கெங்கும் குடிமக்கள் எல்லோரும்
அற்றையநாள் பெருமையுடன் இற்றையநாள் திறல்யாவும்
கலைமணக்க நுகர்ந்திருக்கக் கருத்தெல்லாம் கவர்ந்திழுக்கத்
தலைமையுறும் அலுவலர்கள் சால்புடனே வரவேற்கக்
கோவிலிலே திரண்டெல்லாம் கூடுதல்போல் இந்நாளில்
காவியங்கள் படைக்கவல்ல கருவூல நிகழ்ச்சியெலாம்
நடக்கின்ற நடப்புகளை நவிலுதற்கு நாவில்லை!
அடக்கவொண்ணு ஆர்வமுடன் குற்றால அருவியிலே
குடைந்தாடிக் குலவுதற்குக் குழந்தையென அணைந்திட்டேன்!
அடைந்தங்கே நெல்லையிலே பரவுகிற ஆற்றினையும்
நாற்புறமும் சூழுகிற நலமான பசும்பயிரும்,
ஆற்றெழுக்காய்ச் செந்தமிழில் உரைபயிலும் அருநிலையும்,
ஐம்புலனும் புளகமுற விம்மிதத்தில் ஆழ்கையிலே,
பைம்புனலே சிறுதுளியாய் விசும்பிருந்தே பரவுதலை
''மழைவந்த'' தென்றலே, மக்களெலாம் முறுவலித்துப்
''பிழையையா, சாரலன்றோ வந்த''தெனப் பேசலுற்றார்!
சிறுதுளியால் உடைநனையச் சிலகணத்தில் உலர்ந்துவிடும்!
வருகின்ற குற்றாலப் பருவமென மடுத்திடுவார்
குற்றால அருவியினைக் குறுகமிக விரைகையிலே
புற்றுக்குப் போகின்ற எறும்புகள்போல ஊர்கின்றார்!
அன்பாலே கண்டதுமே அரவணைத்தும் முதுகின்மேல்
என்புமிக நொந்திடவே இடித்திழுத்தும் மெல்லெனவே
பழகியுமே நட்பாடும் பலதிறத்தோர் பாங்கேபோல்
அழகொழுகும் ஐந்தருவி வெவ்வேறும் வேகத்தில்
பெருகுகின்ற நீரழகும் பிள்ளையென மழைநீரில்
துருதுருவென் றெல்லாரும் துள்ளமிக மகிழ்விக்கும்!
தேனிகர்த்த தமிழகத்தில், தெளிந்தோடும் காவிரியில்,
கரிகாலன் கட்டுவித்த கல்லணையில், நீர்பெருகும்
அணையிடையில் அருவியினை எதிர்த்தொருங்கு தூண்சார்பில்
அணைகின்ற மீன்களென அதிகம்பேர் நெருங்கிமிக
வானிருந்தே இழிவதேன வருகின்ற பேரருவி
நீரினிலே நீராடும் நிலைநம்மைக் கவர்ந்தீர்க்கும்!
வெகுளியினைப் பண்பாட்டால் மிதமாக்கும் தகவேபோல்,
மிகுவெள்ளம் பதமாக வியன்பாறை படிப்படியாய்
வெட்டுவித்து மாமல்லன் பாறையெழில் விளைத்ததுபோல்
தொட்டமைத்த தொல்லருவி துலங்குவதும் சொல்லாற்றேன்!
தன்னிறைவு பெற்றோங்க மன்னுகிற கைத்தொழில்கள்
பொன்னுகப் போற்றென்றார், காந்தியண்ணல் பொய்யில்லை!
மன்னுபுகழ் இயற்கையெழில் வாழிடங்கள் பலவற்றில்
மென்கலைகள் களியாட விழாவெடுக்கும் தமிழரசே
அண்ணலவர் அருள்நெஞ்சின் ஆர்வமெலாம் செயற்படுத்தும
உண்மைநெறி போற்றுவமே! கலைவளர்த்தே ஓங்குவமே!






# தமிழ்நாடு கடற்பொருள்கள் ஏற்றுமதி விவரம்

தமிழ்நாட்டுக் கடற்பொருள்களின் ஏற்றுமதி ஆண்டிற்காண்டு அதிகமாகி வருகின்றன. 1972-ஆம் ஆண்டில் மட்டும் 5·82 கோடி ரூபாய் மதிப்புள்ள 4,008·10 மெட்ரிக் டன் கடற்பொருள்கள் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. அவ்வாறு ஏற்றுமதி செய்யப் பட்டவைகளில் சில முக்கியமானவைகளைக் கீழே கொடுத்துள்ளோம்.

| ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் பெயர். (1) | ஏற்றுமதி செய்யப் பட்ட அளவு (மெட்ரிக் டன்). (2) | ஏற்றுமதி செய்யப் பட்ட அளவின் மதிப்பு (இலட்சம் ரூபாய்). (3) |
|---|---|---|
| உறைந்த எறுல்கள் ... | 359 | 91·40 |
| உறைந்த தவளைக் கால்கள். | 3 | 0·25 |
| உறைந்த செங்கெறுல்கள் | 4 | 1·18 |
| உலர்ந்த மீன்கள் ... | 2,891 | 60·52 |
| உலர்ந்த எறுல்கள் ... | 2 | 0·12 |
| சுறு பீலி ... ... | 88·4 | 14·73 |
| மீன் 'மாஸ்' ... ... | 28·8 | 3·00 |
| இதர இனங்கள் ... | 86·6 | 4·65 |

எனவே, அலைகடலும் நமது தமிழ்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதாக இருப்பதால், கடற்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது நமது கடமை.




'பிளாஸ்டிக்' அடையாளமிட்ட எறுல் கண்டுபிடித்துக் கொடுப்போருக்கு மூன்று ரூபாய் இனம்!

எறுல் வளர்ச்சி, அவைகளின் நடமாட்டம் ஆகியவற்றை ஆராய்வதற்காக மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், படத்தில் காட்டியுள்ளது போல் வண்ண 'பிளாஸ்டிக்' அடையாளம் இணைக்கப் பட்ட எறுல்களைப் பழவேற்காடு ஏரியிலும், சென்னையை அடுத்துள்ள கடலிலும் விட்டுள்ளது. 'பிளாஸ்டிக்' அடையாளமிட்ட எறுல்கள் கிடைத்தால், அவைகளைக் கொண்டு வந்து கீழ்க் கண்ட அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றில் கொடுத்துப் பிடிபட்ட இடம், தேதி ஆகியவைகளைத் தெரிவித்தால், ஒவ்வொரு அடையாளமிட்ட எறுலுக்கும் மூன்று ரூபாய் வீதம் அன்பளிப்புப் பெறலாம். எறுல் இல்லாமல், 'பிளாஸ்டிக்' அடையாளங்களை மட்டும் அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தாலும், ஒவ்வொரு 'பிளாஸ்டிக்' அடையாளத்திற்கும் ஒரு ரூபாய் வீதம் பெறலாம்.

'பிளாஸ்டிக்' அடையாளத்தை அஞ்சல் மூலம் அனுப்பும்போது கீழ்க்கண்ட விவரங்களையும் கொடுக்க வேண்டும்.

1. அனுப்புகின்றவரின் பெயர், முகவரி.
2. பிடிபட்ட இடம், தேதி.
3. பிடிப்பதற்குப் பயன்படுத்திய வலை.
4. எறுலின் நீளம் (அங்குலம் அல்லது சென்டிமீட்டரில்—படத்தில் கண்டவாறு அளந்து தெரிவிக்கவும்.)

அடையாளமிட்ட எறுல்கள் கொடுக்க வேண்டிய அல்லது அடையாளம் அனுப்ப வேண்டிய முகவரிகள்:

(1) மத்திய கடல்மீன் ஆராய்ச்சித் துணை நிலையம், 9, கமாண்டர்–இன்–சீப் சாலை, எழும்பூர், சென்னை-600008.

(2) மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையக் களப்பணி மையம். மாமல்லபுரம், செங்கற்பட்டு மாவட்டம்.

(3) மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலைய ஆய்வு மையம், மே/பா. மீன்துறை இயக்குநர், பாண்டிச்சேரி.

(4) மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலைய ஆய்வு மையம், 45, காசுக்கடைத் தெரு, கடலூர் ஓ. டி., தென் ஆர்க்காடு மாவட்டம்.

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் எறுல்கள் பற்றிய ஆராய்ச்சி வெற்றி பெற ஒத்துழைப்பு நல்கவேண்டியது குறிப்பாக மீனவப் பெருமக்களின் கடமையாகும்.

# உலகில் இரண்டு கிளிகள்

பிரச்சினைகள் மறைவதில்லை.

11

டி.என்.சுகி சுப்பிரமணிய

நமது வாழ்க்கை முன்னேற்றம் காண வேண்டுமானால் நமக்காக வாழ்ந்து காட்டியவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும் அல்லது நமக்காக வழிகாட்டியவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

டாக்டர் நர்மதை, வாழ்ந்து காட்டும் ராதையின் தியாக வாழ்வை உள்ளம் நெக்குற நெக்குற நினைந்து நினைந்து அவளைக் கண்ணாரக் கண்ட தெய்வமாக எண்ணினாள்.

டாக்டர் நர்மதை, வழியைக் காட்டிய பலருக்குள் தன் கணவன் மணிவாசகனையும், நர்சிங் ஹோம் தனிப்பட அமைத்துக் கொள்ள அனுமதி தந்த முதலாளி முத்தையாவையும் நினைத்துப் பார்த்துக் கொண்டாள். இருவருக்குமே தனது நன்றியைச் சொன்னதுடன் அவள் கௌரவப் பிரச்சினை இல்லாமல் தொழிற் திறமையால் புகழ்ச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் குவிக்க நினைத்தாள்.

வக்கீல் மணிவாசகன் தன் வாக்குச் சாதுர்யத்தாலும், உழைப்பாலும் தன் சட்ட ஞானத்தை நிலை நாட்டத் தொடங்கினான்.

கணவனுக்கும் மனைவிக்கும் வேறு வேறு வேலைகள்; அதுவும் கடினமான பொறுப்புள்ள வேலைகள். இதன் காரணத்தால் இவர்களுக்குச் சண்டையிடவோ சரசமாடவோ சிறிதே நேரம் கிடைத்தது.

வீடு பலம் பெறப் பணத்தைச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் இருவருக்கும் இருந்துவிட்ட காரணத்தால் அவர்கள் இருவரும் தத்தம் கௌரவப் பாய்ச்சலை ஒதுக்கிவிட்டு, ஒருவரை விட்டு ஒருவர் ஒதுங்கி வாழ்வது என்று கடைப் பிடித்தார்கள்.

இந்த ஏற்பாட்டில் விரிசல் வெடிப்பு எதுவும் வராமல் ராதை கவனித்துக் கொண்டாள். 'பாபு'வைத் தாயாகவும் தந்தையாகவும் நின்று வளர்க்கும் பொறுப்பையும் அவளே மேற்கொண்டாள்.

வீட்டுப் பொறுப்பையும் 'பாபு'வைக் கவனிக்கும் பொறுப்பையும் மேற்கொண்ட காரணத்தால் சட்டக் கல்லூரிக்கு அவள் போய் வந்தாலும் அவளுக்கும் படிப்புக்கும் தொந்தம் உண்டாகவில்லை.

ஒரு நாள் பஸ் ஸ்டாண்டில் ராதை நின்று கொண்டிருந்தாள். அவ்வழியே வந்த வக்கீல் ரோமியோ—அவன் மனைவி செண்பகம் இருவரும் பார்த்தனர்.

'ராதை! படிப்பு எப்படி இருக்கிறது?'

''என்னைப் பொறுத்தவரை கசப்பாக இருக்கிறது''

''என் கணவரைச் சொல்லித் தரும்படிக் கேட்டுக் கொள்ள அனுமதிப்பாயா?''

''நான் படித்து என்ன செய்யப் போகிறேன், செண்பகம்?''

''அன்றைக்கு உன் டாக்டர் அக்கா சொன்னாள்''

''என்ன?''

''வக்கீல் ராதை என்னும் பெயர்ப் பலகையைத் தன்வீட்டில் மாட்டாமல் விடப் போவதில்லை என்று என்னிடம் சொன்னாள்''.

''அவள் தொல்லைக்குப் பயந்துதான் நான் சட்டக் கல்லூரிக்கு வருகிறேன்; சட்டத்தைப் படிப்பதைவிடச்சாம்பார் வைப்பது ருசிகரமான விஷயம்! பெர்மிட் லைசென்ஸ் சட்டங்களைப் படிப்பதைவிட பாபுப் பையனைக் கொஞ்சிக் கொண்டிருப்பது இன்னும் சுவைதரும்!''

''வண்டிக்குள் ஏறிக் கொள்! உன்னை வீட்டில் கொண்டு போய் விடுகிறோம்'' என்றான் ரோமியோ.

''உன் அத்தான் கார் வாங்கி இருக்கிறாராமே!''

''அது அவரது கார். அதில் எவரும் ஓசிக்குச் சவாரி செய்யக்கூடாது. இது கரார்!''

''நீ கூடவா!''

''ஆமாம்!''

''அப்படியானால் நீதி மன்றத்துக்கு வரும் அவர், உன்னைச் சட்டக் கல்லூரியில் கொண்டு வந்து விடுவதில்லையா?''

''கொண்டுவந்து விடவும் மாட்டார்! நானும் வற்புறுத்த மாட்டேன். ஒரு நாள் டாக்டர் அக்காள் இதைச் சொல்லப் போய்.......... வம்பில் மாட்டிக் கொண்டாள்''.

''வக்கீல் மணிவாசகன் சுயகாரியப்புலி. அவன் தனக்குச் சமமாக எவரையும் நினைக்க மாட்டான். ஆதிமுதல் ஏமாந்து போன நீ, இன்று பஸ் ஸ்டாண்டில் நிற்கிறாய்! இன்னும் எங்கு போய் நிற்கப் போகிறாயோ? வண்டியில் ஏறிக் கொள்'' என்று ரோமியோ வற்புறுத்தினான்.

''வழக்கம்போல பஸ்ஸில் போகிறேன்''.



> தனது குழந்தை யுள்ளத்தை ஒரு போதும் இழக்காதவன்தான் சிறந்த மனிதன் என்று சொல்லப்படுகிறான்.
>
> —மென்சியஸ்

''ஒரு நாள் மட்டும் எங்களுடன் வா!'' என்று, செண்பகம் வலிந்து ஏற்றிக் கொண்டாள். கார், நீதி மன்றத்தைவிட்டு கடற்கரைச் சாலை வழியாக ஓடிக் கொண்டிருந்தது.

செண்பகம் ''வீட்டில் சமையலுக்கு ஆள் இருக்கிறதா?'' என்றாள்.

''சமையலுக்கு ஆள் இருக்கிறது. பாபுவைக் கவனிப்பதற்கென்று நர்சு ஒருத்தியை வக்கீல் ஏற்பாடு செய்திருக்கிறார்!''

''அடேயப்பா! அவனுக்கு வயது இரண்டு இருக்குமா?''

''இரண்டு முடியப் போகிறது!''

காலந்தான் எத்தனை வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது!

செண்பகத்தின் காதருகே குனிந்து ''உன் நிலைமை என்ன?'' என்று கேட்டாள்.

''நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். எனக்கு இவர் குழந்தை; அவருக்கு நான் குழந்தை''.

ராதை பண்புடன் பேச்சைத் தொடங்கியும், செண்பகம் பச்சையாகப் பதில் கூறி விட்டாள்!

ரோமியோவிற்கும் செண்பகத்திற்கும் தங்களுக்குக் குழந்தை இல்லையே என்ற ஏக்கமோ வருத்தமோ இல்லை! அவர்கள் இன்பமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

''ஒரு வாரத்திற்கு முன்பு உன் அப்பாவிடமிருந்து போன் வந்தது''

''என்ன சமாச்சாரம்? மறுபடியும் யார் மீதாவது காரை ஏற்றி விட்டாரா?'' என்று சிரித்தான் ரோமியோ.

''இல்லை! டாக்டர் நர்மதாவிடம் பேச வேண்டுமென்று சொன்னார்''

''என்ன பேச்சு நடந்தது?''

''செண்பகத்தை டாக்டர் நர்மதா சோதனை செய்ய வேண்டும் என்று பேசியதாகத் தெரியவந்தது''.

ரோமியோ சிரித்தான். ''என் மாமனாருக்குப் பேரனோ, பேத்தியோ பிறக்கவில்லையென்று கவலை! செண்பகம்! நீ டாக்டர் அம்மாவைப் போய்ப் பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''அப்பா வற்புறுத்தினார். நான் மறுத்துவிட்டேன்!''

''ராதையைப் பார்த்ததும் நம் காரில் ஏற்றிக் கொண்டதும் நல்லதாகப் போயிற்று. உன் அப்பாவுக்குரிய கவலையைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இன்று கிடைத்துவிட்டது!''

''குழந்தை இருப்பவர்கள் ஐயோ ஏன் இருக்கிறது என்று அலறுகிறார்கள். இல்லாதவர்கள், இல்லையே, அடடா இல்லையே என்று அங்கலாய்க்கிறார்கள். அப்படியென்ன நமக்கு வயசாகி விட்டதா?'' என்று கேட்டாள், செண்பகம்.

ரோமியோ, ''காலம் ஒவ்வொரு நாளும் நமது ஆயுளை விநாடிக்கு விநாடி விழுங்கிக் கொண்டிருக்கிறது. எனக்குக் கூட டாக்டர் ஒருவரைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் இப்போது உண்டாகிறது'' என்று சொன்னான். அத்துடன் நில்லாமல் ''ராதை! உனக்கு உங்கள் குடும்பத்தில் எத்தனை அக்கறையோ அத்தனை அக்கறை எங்கள் குடும்பத்திலும் இருக்கிறது! உனக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மனமாரச் சொன்னான். அவன் உள்ளத்துள் எங்கோ ஒளிந்து கொண்டிருந்த பிள்ளைப் பாசம் விசுவரூபம் எடுத்தது!

மூவரும் படித்தவர்களாக இருந்த காரணத்தால் பிள்ளையில்லாப் பிரச்சினையை வாய் விட்டுப் பேசிக் கொள்ள முடிந்தது.

''உன் அத்தான் வக்கீல் மணிவாசகன் முன்சீப்பு வேலைக்கோ, சர்க்கார் வக்கீலுக்கோ முயற்சி செய்வதாகக் கேள்விப் பட்டேனே!''

''அவர் மறுத்துவிட்டார். அவர் சுதந்திரப் பறவை. தனிப்பட்ட முறையில் வழக்காடினால் நிரம்பப் பணம் சம்பாதிக்கலாம். அரசாங்க ஊழியராக மாட்டிக் கொண்டால் வருமானம் குறைந்து போகும். இதற்கு அவர் பயப்படுகிறார்!''

''உயர் நீதிமன்றப் பதவி கிடைத்தால்?'' என்னும் கொக்கியுடன் நிறுத்தினான்.

''இந்த வயதில் இவருக்குக் கிடைக்குமா? நீதிபதிப் பதவி கிடைத்தால் அல்லவா, உயர் நீதி மன்றப் பதவிக்கு வர முடியும்!''

கார், ராஜா அண்ணாமலை புரத்திற்குள் திரும்பியது. வீட்டு வாசலில் இளம் நர்சு ஒருத்தி சின்னஞ்சிறு சைக்கிளில் பாபுவை உட்கார வைத்து விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.

''அம்மா!'' என்று ராதையைப் பார்த்து ஓடிவந்தான்.

''ரோஸி! இவர்கள் இருவருக்கும் காபி-டிபன் கொண்டு வரச் சொல்லு!''

''ஆகட்டும்'' என்றவள் போய்விட்டாள். பாபு தனக்குத் தெரிந்த ஆங்கிலம்—தமிழ் வார்த்தைகளைச் சொல்லி, வந்தவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தான். அந்த மழலைச் சொல், அந்த மலர்ச் சிரிப்பு, தத்தி நடக்கும் தளிர் நடை, பிஞ்சு விரல்கள், பேசும் கொஞ்சல் யாவும் சேர்ந்து செண்பகத்தின் உள்ளத்துள் பிள்ளைப் பேற்றின் பெருமையை நினைவு படுத்தின.

டாக்டர் நர்மதை அப்போதுதான் டாக்சியில் வந்து இறங்கினாள். எல்லோரையும் வரவேற்றாள். பாபுவை எடுத்துக் கொஞ்சினாள்.

''செண்பகம் உன் அப்பா சொன்னார்கள். நீ வரவே இல்லையே! என்றைக்கு வருகிறாய்?''

செண்பகம், ''அடுத்த வாரம் வருகிறேன்'' என்றாள்.

ரோமியோ தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அங்கே காபி-பலகாரம் யாவருக்கும் வந்தன. சின்னஞ்சிறு மேசையில் பாபுவுக்குத் தனியே டிபன்-காப்பி வைக்கப்பட்டிருந்தது.

''தனியாக இருந்து இவனுக்கு உண்ணத் தெரியுமா?''

''இவ்வாறு பழக்கப்படுத்த வேண்டுமென்று நர்சு ரோஸிக்கு உத்தரவு செய்திருக்கிறார் அவன் அப்பா'' என்றாள் நர்மதை.

''ஏன்?''



''இன்னும் இரண்டு மாதத்தில் இந்தக் குழந்தை படிக்கப் போகிறது; தனியே உதகையில் போய்த் தங்கப்போகிறது. அதற்குரிய பழக்கங்களை இப்போதே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்!'' என்று விளக்கினாள், ரோஸி.

டாக்டர் நர்மதையின் கண்ணில் நீர்முட்டியது. இன்னும் இரண்டு மாத காலத்தில் உயர்தரப்பள்ளியில் படிக்கக் குழந்தையைப் பிரிந்தாக வேண்டும். இது கணவனின் கட்டளை. இதனை அவள் எதிர்க்கவோ மறுக்கவோ கூடாது என்பதையும் அவள் அறிவாள்!

வக்கீல் ரோமியோ, ''மணிவாசகன் போக்கு எதிலும் அதிசயமாகவிருக்கிறது! இத்தனை பிஞ்சுக் குழந்தையைப் பிரிந்து எப்படி உங்கள் யாவராலும் இருக்க முடியும்?'' என்று கேட்டான்.

ரோஸி, ''இந்த மாதிரிக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்து அவர்களே வளர்த்துப் பாடமும் விளையாட்டும் சொல்லி வைக்கிறார்கள்! பணம்தான் நிரம்ப ஆகும்!'' என்றாள். பழகிய பாசத்தால் குழந்தையைப் பிரிவது அவளுக்கே கஷ்டமாகவிருந்தது.

ரோமியோ, ''கோழி தன் முட்டையை அடைகாக்க வொட்டாமல்'' இன்குபேட்டரில் வைத்து அடைகாக்கும் இயந்திர யுகத்தில் நாம் வாழுகிறோம். இதேபோன்று, பெற்றவர்கள் அருகாகச் சின்னஞ்சிறு குழந்தை நடமாடிக் கல்வி கற்பதைவிட, ஹாஸ்டலில் தங்கிப் படிப்பதும் விளையாடுவதும் இயந்திரக் கல்வியாக இருக்கும்! மணிவாசகன் அதிசயமான வக்கீல், அதிசயமான கணவன்! இப்போது அதிசயமான தகப்பனாகவும் மாறுகிறான்!'' என்று உள்ளம் திறந்து பேசிவிட்டு ராதையைப் பார்த்தான்.

டாக்டர் நர்மதை, ''ராதையினாலும் குழந்தை பாபு உதகைப் பள்ளிக்குப் போவதைத் தடுத்து நிறுத்த முடியாது'' என்று பேச்சை நிறுத்தினாள்.

''குழந்தை பிறந்த தினத்தன்று அவர் இக்குழந்தையை உதகைப் பள்ளியில் சேர்க்கக் கோவை வடிவேலு அவர்களிடம் சிபாரிசைப் பெற்றுவிட்டார்! அதாவது மூன்றாண்டுக்கு முன்னரே இக்குழந்தை அங்கே படிக்க வேண்டுமென்று ஏற்பாடு! இதனை மும்மூர்த்திகள் வந்தாலும் தடுக்க முடியாது!'' என்று ராதை விளக்கினாள்.

''மணிவாசகன் மனசு இரும்பா, இல்லை கல்லா? இச்சிறு குழந்தையைப் பிரிந்து இருக்க அவன் உள்ளம் சம்மதிக்கலாம். தாயும் ராதையும் எவ்வாறு இருப்பார்கள்?''

டாக்டர் நர்மதை, ''நாங்கள் இருக்க ஒப்புக் கொண்டோம்'' என்று சிரித்தாள். அது சிரிப்பன்று; நீறுபூத்த நெருப்பு.

வக்கீல் மணிவாசகன் சொந்தக் காரை ஓட்டிக் கொண்டு வந்து நின்றான்.

''வருக! வருக! எல்லோருக்கும் வணக்கம். டேய் பாபு! நீ எங்கே படிக்கப் போகிறாய் சொல்!''

''உதகைப் பள்ளிக்கு!'' என்று அவன் தட்டுத்தடுமாறிச் சொன்னான்.

வக்கீல் மணிவாசகன் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டான்.

காப்பி டிபன் சாப்பிட்ட நண்பர்கள் விடைபெற்றுப் போனார்கள். இயந்திரம் போன்று அவர்களை வழியனுப்பி விட்டு ''ரோஸி நீதான் இவனைக் கூட்டிக் கொண்டு போய்ப் பள்ளியில் சேர்க்க வேண்டும்'' என்று சொன்னார் வக்கீல்

''ஆகட்டும்!''

''உன் வேலையில் திருப்தியிருந்தால் டாக்டரம்மா தன் சொந்த நர்சிங் ஹோமில் உனக்கு வேலை தரலாம். அல்லது நீ வேறு இடத்தில் வேலைக்கு முயற்சி செய்யலாம்''.

அந்தச் சட்ட இயந்திரம் பேசிக் கொண்டே தன் அறைக்குள் போய்விட்டது.

ரோஸி விடை பெற்றுக் கொண்டு சிரித்த முகத்துடன் தனது வீடு திரும்பிக் கொண்டிருந்தாள்.

டாக்டர் நர்மதை பாபுவுடன் சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்தாள். ''ராதை! நீ முதல் வருடமே தேர்வு அடையவில்லை. அதற்காகக் கலங்க வேண்டாம். தொடர்ந்து படி. இன்று நர்சிங் ஹோமிற்கு வயதான கிழவர் ஒருவர் வந்தார். அவர் பி.ஏ. பி.எல்., தம் மனைவியை அழைத்து வந்தார். அவரிடம் உனக்கு 'டியூஷன்' சொல்லித் தர முடியுமா என்றும் கேட்டேன். அவர் ஒப்புதல் தந்தார்'' என்று நிறுத்தினாள்.

> ஒரு மனிதனின் அழகு அவனது உடலமைப்பில் இல்லை—அவனது குணநலத்தில்தான் இருக்கிறது.
>
> —காந்தியடிகள்

''எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நானே படித்து வெற்றி காண்பேன். இது உறுதி'' என்று அழுத்தமாகச் சொன்னாள்.

''நான்கூட ஒரு மோட்டார் வாங்கலாம் என்றிருக்கிறேன்''

''அத்தான் என்ன சொன்னார்?''

''கார் வாங்குவதும் ஓட்டுவதும் அதனைப் பராமரிப்பதும் அவரவர் சாமர்த்தியம். தனது காரை என் வேலைக்கு எதிர்பார்க்க வேண்டாமென்று சொல்லிவிட்டார்''

''நீ ஒரு காரை வாங்கினால் அவருக்கு எதிராக வாங்கிவிட்டதாகக் கூச்சல் போடமாட்டாரா?''

''அவர் கூச்சல் போடுவதில் நியாயம் இருக்கிறதோ இல்லையோ நான் கார் வாங்கப் போவதில் நியாயம் இருக்கிறது'' என்று சொல்லி முடித்தாள்.

அச்சமயம் அங்கு வந்த மணிவாசகன் ''ஏய் அசட்டு ராதை! உனக்கு உலகம் தெரியாது. இந்த ஏழை நாட்டில் தன் உயிருக்குப் பயந்து பணம் செலவழிக்கும் ஏழைகள் நிரம்பப் பேர் இருக்கிறார்கள். பணக்காரர்களும், தத்தம் உயிரைக் காப்பாற்ற நிரம்பப் பேர் இருக்கிறார்கள். எந்த முட்டாள் டாக்டரும் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதித்து விடலாம். புத்தி சாலியான உன் அக்காள் கார் வாங்குவதில் ஆச்சர்யம் இல்லை! என் காரை முந்திச் செல்லாமல் இருந்தால்அதுவே நான் செய்த பாக்கியம்'' என்று சொல்லிவிட்டு எவர் பதிலையும் எதிர் பாராமல்தன்னறைக்குள் போய் விட்டான்.

''அம்மா வாங்கும் காரில் நான் உதகைக்குப் போவேன்'' என்று பாபு சொன்னான்.

''நீ ரெயிலில் போகப் போகிறாய்! இது என் முடிவு'' என்ற பதில் அறைக்குள்ளிருந்து பளிச்சென வந்தது.

அந்தவீட்டிற்குள் அதிர்ஷ்டங்கள் ஆறுய்ப்பெருகின; ஆயினும் அர்ச்சனைகள் அன்புக் கரையை உடைக்கும் வண்ணம் அலை மோதிக் கொண்டிருந்தன. பெண்கள் இருவரும் வாய் திறக்கவில்லை.

## 12 முன்னாள் கைதிக்கு வேலையில்லை!

நான்காண்டு காலச் சிறை வாசத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய காரோட்டி சண்முகம் தன் குடிசை வீட்டில் வளத்தைக் காணவில்லை. வாளிப்பாக இருந்த மகள் கனகாம்பரத்தைக் கண்டான்.

''நான்தான் முதலாளிக்காக ஒரு பொய் சொன்னேன். உன் அம்மா எதற்காக ஒரு பொய் சொன்னாள்!''

''நீங்கள் எதற்காகச் சொன்னீர்களோ அதற்காகத் தான் அம்மாவும் தொடர்ந்து பொய் சொன்னாள்!''

''நான் முதலாளியைக் காப்பாற்றச் சொன்னேன். அவர் தரவிருந்த பணத்துக்கு ஆசை பட்டுச் சொல்லவில்லை!''

''அம்மாவும் அந்தப் பணத்தை வாங்கவில்லை! உங்கள் வாக்குப் பொய்யாகக் கூடாது என்பதற்காகச் சொன்னாள். அவள் மில்லுக்குப் போயிருக்கிறாள்''.

''மில்லில் வேலைதந்து நம்மை ஏமாற்றிவிட்டார் முதலாளி! எந்த முதலாளியும் இளிச்சவாயன் இல்லை. நமது குடும்பம் பாழ்பட்டு நொறுங்கிப் போய்விட்டது''

மில் வேலையை முடித்துக் கொண்டு அங்கே வந்தாள் அஞ்சலை. கணவனைக் கண்டதில் மகிழ்ச்சியும் இருந்தது. அதிர்ச்சியும் இருந்தது.

''நடந்தது நடந்துவிட்டது. என்னால் இனி வேலை பார்ப்பது கடினம். நீ தான் வேலை பார்த்துப் பணம் சேர்க்க வேண்டும்''

''முதலாளியிடம் கேட்டுப் பார்ப்பது தானே அஞ்சலை''

''நீ தான் அதைச் செய்ய வேண்டும். உனக்கு முதலாளி. நான் அவருக்கு ஊழியம் செய்யவில்லை; தியாகம் செய்யவில்லை. உன் வார்த்தையைப் பொய்யாக்கக் கூடாது என்பதற்காக நீயே காரையோட்டி விபத்தை உண்டாக்கினாய் என்றேன்!''

''என் செயலைக் காப்பாற்ற, என் சொல்லைக் காப்பாற்றத் தான் நீ பாடுபட்டாயா?''

''பிறகு என்ன?''

''இந்தப் பெண் கனகாம்பரத்திற்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டும். முதலாளியிடம் பணம் கேட்கப் போகிறேன்''

''அது உன் இஷ்டம்!''

இரண்டு நாள் கழித்து முதலாளி முத்தையாவின் மாளிகைக்குள் வந்து நின்றான், சண்முகம்.

''எப்போது விடுதலை பெற்றாய்?''

''இரண்டு நாள் ஆச்சு''

''உனக்கு என்ன வேண்டும்? நம்முடைய காருக்குப் புதிய காரோட்டி வைத்துவிட்டேன். அவனை நீக்க முடியாது. நல்ல இடமாக உனக்குச் சிபாரிசு செய்கிறேன். ஒப்புக் கொள்ளுவாயா?''

''என் மகள் கலியாணத்திற்கு எனக்குப் பண உதவி தேவை''

''நான் உதவி செய்தபோது நீ பணத்தை அலட்சியம் செய்தாய், உன் மனைவி அலட்சியம் செய்தாள். நான் பணம் தருகிற சமயம் தருவேன்; அல்லது மறுப்பேன். உன்மீது அனுதாபப் பட்டு வேலைக்கு நான் சிபாரிசு செய்கிறேன், நல்ல இடம்.''

''செய்யுங்கள். என் மகள் கலியாணம் உங்கள் தயவால் நடக்க வேண்டும்''

''உன் குடும்பம் என் உப்பைத் தின்றுதான் வளர்கிறது. டாக்டர் நர்மதா புதிய கார் வாங்கி இருக்கிறாள். அதற்கு டிரைவர் தேவை''

உடனே போனில் டாக்டர் நர்மதாவைக் கூப்பிட்டார்.

''ஹலோ, முதலாளி முத்தையா பேசுகிறேன்''

''குட்மார்னிங்! டாக்டர் நர்மதா''

''உங்கள் வண்டிக்கு டிரைவர் கிடைத்து விட்டானா?''

''இல்லை!''

''நான் ஒரு நபரை அனுப்புகிறேன். அனுபவம் உள்ளவன்''.

''அனுப்புங்கள்''

போனில் பேசிய பின்பு டாக்டர் நர்மதையின் வீட்டு முகவரியைக் கொடுத்தார் முத்தையா.

வந்து பார்த்தபோது வியர்த்து வெலவெலத்துப் போனான்.

டாக்டர் நர்மதை, ''நீ அஞ்சலையின் கணவன் தானே?'' என்று கேட்டாள். அவள் குரலில் பரிவும் பச்சாத்தாபமும் இருந்தது.

''ஆமாம் அம்மா. முதலாளி முத்தையா அனுப்பினார்''

அச்சமயம் தன்னறையை விட்டு வெளியே வந்த வக்கீல் மணிவாசகன் ''ஓ! நீ மாஜிக் கைதியல்லவா? உனக்கு இங்கு வேலையில்லை. ஆனாலும் சண்முகம், நீ நல்லவன். தியாகி; பணம் பெரிதில்லையென்று பேசும் ஞானி. டாக்டரம்மாவின் காரைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனாலும் என் முதலாளியை—அவர் பணத்தை அவமானப்படுத்தியவன் நீ! எனவே......''


''இல்லீங்க! அவர்தான் இங்கே வேலைக்கு அனுப்பி வைத்தார்''

''என் வீட்டிற்குள் அந்தக் கார் நிற்கும்வரை அதனை நீ ஓட்ட முடியாது. வேறு வீட்டுக்கு டாக்டரம்மாள் குடி



நினைவு—நாம் நம்மோடு எப்போதும் எடுத்துச் செல்லும் நாட்குறிப்பாகும்.
—ஆஸ்கார் ஒயில்டு

திருப்தி செய்யும் வடிவம், இடையருது சிபாரிசு செய்யும் கடிதம் போல.
— பேகன்




பிலிப்ஸ், HRC-16 எகானமி லான்டர்னை அறிமுகப் படுத்துகிறது. HPL 125 W MV லாம்புக்கேற்ற சிக்கனமான ஃபிட்டிங்.


சிறியதும், அதிக நடமாட்டமுமில்லாத தெருக்களில் இனி நீங்கள் செலவைப் பெருக்கும் லாம்ப் ஃபிட்டிங்குகளை உபயோகிக்கத்தேவையில்லை. HRC-16 உங்களுக்குத் தெருப்பாதுகாப்பை மலிவாகக் கிடைக்க வழி செய்கிறது.

HRC-16 ஒரு கச்சிதமான ஃபிட்டிங்காகும். இதன் உள்ளேயே பலாஸ்ட் யூனிட் மற்றும் தெருவை நோக்கி ஒளியைப் பாயவைக்கும் சிறந்த ரிஃப்லெக்டர் இவற்றின் இணைப்பு உள்ளது. இப்போதுள்ள தெரு விளக்கின் பிராக்கெட்களிலேயே இதை எளிதில் பொருத்தலாம்.

ஹை ட்ரான்ஸ்பேரென்ஸி மற்றும் அக்ரிலிக் கவருடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ HRC-16 கிடைக்கும்.

## சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
## பிலிப்ஸ் வாங்குங்கள்

PHILIPS



# பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
கல்கத்தா • பம்பாய் • புதுடில்லி • சென்னை

'யேறிப் போனால் நீ காரோட்டி யாக அங்கு போகலாம்''

ராதையும் செவி குளிரக் கேட்டாள். முதலாளி முத்தையாவுக்கு இருந்த இரும்பு நெஞ்சம் இளகிய மாதிரி தன் அத்தானுக்கு ஏன் இளகாமல் எஃகுபோல் உறுதியாக இருக்கிறது?

அல்லது டாக்டர் நர்மதாவுக்கு உதவும் நபர் காரோட்டி சண்முகமாக இருக்கக்கூடாதா?

இது என்ன புதிர்?—அவள் கேட்கவும் துணியவில்லை.

''வக்கீலய்யா! உங்கள் சட்ட ஞானத்தால் நான் நாலாண்டுச் சிறைச்சாலைக்குள் இருந்தேன். உங்கள் வீட்டுக் காரை ஓட்டாமல் நான் பிழைத்துக் கொள்ள முடியும்! என்னைப் போய் பெரிய விரோதியாக நினைத்தீர்களே, நீங்கள் வாழ்க! என்னையும் என் குடும்பத்தையும் குழந்தைகளையும் பிரித்த நீங்கள் என்றாவது இதன் பலனை அனுபவிப்பீர்கள்!''

''சாபம் கொடுத்துவிட்டுப் போகும் முனிவருக்குப் பயப்பட வேண்டாம். மாஜிக் கைதி! என்னால் சிறை சென்றவன். நம் குடும்பத்திற்கு எதிராக எதையும் செய்யும் துணிவு இவனுக்குப் பிறக்கும். கிரிமினல் வழக்கில் ஈடுபட்டவன் எத்தகைய செயலையும் செய்வான். டாக்டர் தன் காருக்கு எந்த டிரைவரையும் நியமிக்கலாம். இதே டிரைவர் வேண்டுமென்றால் இந்தக் காம்பவுண்டுக்குள் அவன் கால்படக் கூடாது!''

டாக்டர் நர்மதை ஆச்சரியப்படவில்லை. குற்றமற்ற அவனைச் சிறைச் சாலைக்கு அனுப்பியது யார்? இதை அவள் வாய் திறந்து கேட்கவில்லை. கணவனின் கண்ணியமான வாதத் திறமையைக் கலங்கிய கண்களுடன் கவனித்துக் கொண்டிருந்தாள்.

''வேறு டிரைவர் ஏற்பாடு செய்யலாம் அக்கா!''

''ஆமாம் ராதை! இதற்காக வேறு வீடு வாங்க முடியுமா?'' என்று நறுக்கென்று பதில் கூறினாள்.

''நீ வாங்காது போனால் நான் வாங்கிக் கொண்டு போகும் காலம் வரும்! என்று எச்சரிக்கை செய்தான்.

இது எச்சரிக்கையா? இல்லை அவள் வாழ்க்கை மீது எரியப்பட்ட தீப்பந்தமா? அவன் சிந்திக்கவில்லை. சொல்லைச் சிதறிவிட்டுப் போய்க்கொண்டிருந்தான்!

டாக்டர் நர்மதா, முதலாளி முத்தையாவிற்கு டெலிபோன் செய்தாள்.

''நான் நர்மதா பேசுகிறேன். மோட்டார் ஓட்டி சண்முகம் என் கார் ஓட்டியாக வருவது உங்கள் வக்கீலுக்குப் பிடிக்கவில்லை. அதனால் நான் உதவி செய்யும் நிலையில் இல்லை சார்''

முத்தையா, ''வக்கீல் ஏதாவது நல்ல காரணத்தினால் தடுத்திருப்பார். அதுவும் நல்லதுதான். சண்முகம் வேறு இடத்தைத் தேடிக் கொள்ளட்டும்'' என்றபடி போனை வைத்துவிட்டார்.

ராதை, ''நீங்களே காரை ஓட்டிச் சமாளிக்கலாம்!'' என்று ஆரம்பித்தாள்.

''நடுவீதியில் நின்றால் அதனை யார் ரிப்பேர் செய்வது, வேறு டிரைவர் இல்லாமல் தீராது!''

டெலிபோன் கிணுகிணுத்தது.

''ஹலோ டாக்டர் நர்மதா?'' என்றது ஒரு பெண் குரல்,

''ஆமாம்!'' என்றாள் நர்மதை.

''உதகையிலிருந்து டிரங்கால்'' என்றாள் டெலிபோன் இலாகா பெண்மணி.

''ஹலோ ....... யாரது பாபுவா?''

''ஆமாம்மா .... நல்லா படிக்கிறேன். இங்கே வசதியா இருக்குது, முதல் வகுப்பு பாஸ் செய்திட்டேன்! ராதாச் சித்திக்குச் சொல். அப்பாவுக்குச் சொல்''

''சொல்றேண்டா கண்ணு! உனக்கு எப்போது லீவு?''

''விடுமுறைக்கு நீயோ, சித்தியோ, அப்பாவோ உதகைக்கு வந்து என்னைக் கூட்டிப் போக வேண்டும்''

''அப்படியே செய்கிறேன்''

''நீ புதுக் கார் வாங்கி இருப்பதாகக் கடிதம் எழுதியிருந்தாயே!''

''வாங்கி இருக்கிறேன்''

''அதில் வாயேன் உதகைக்கு!''

''வருகிறேன்''

பிறகு ராதையும் பாபுவும் டெலிபோன் பேசினார்கள். அப்பா வீட்டில் இல்லாததால் போனை வைத்துவிட்டான் பாபு.

பாபு 'டிரங்கால்' பேசுவதைக் கண்டு ராதைக்கும் நர்மதைக்கும் பெருமை சொல்லி முடியாது.

*(வளரும்)*

# என்ன என்ன என்ன?

1. மொல கொலு கொலு
2. குட்டி அக்குலு
3. மெட்ட சன்னலு
4. பஸ்மாதி
5. தில்பசந்த்
6. சமுந்திர சோக்
7. ஹிராநகி
8. காமினி
9. கோவிந்த்போக்
10. கலாஜிரா
11. அம்பே மோஹர்
12. ஜிரே சால்
13. காலிகமோட்
14. சுதார்
15. நவாபிகோலம்
16. கோசுவிட்டு
17. சம்பாவி
18. மயிலா

இவை எல்லாம் என்ன தெரியுமா?

அடுத்த பக்கத்தைப் பாருங்கள்!

# அண்ணலின் வாழ்விலே...



**புலவர் தமிழ்ப்பித்தன்**

குசராத்தில் ஒரு கல்வி நிறுவனம் கிஷோர் என்பவர் அதன் நிருவாகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் சிறந்த காந்தியத் தொண்டர்.

ஒருநாள் மாணவிகள் சிலர் அவரை அணுகிச் சென்று, ''சில மாணவர்கள் எங்களிடம் குறும்பு செய்கிறார்கள்; அவர்களை என்ன செய்வது? எப்படித் தடுப்பது?'' என்று கேட்டார்கள்.

வினா பிறந்த மறு வினாடியே கிஷோர் பதிலளித்தார்:

''நீங்கள் காலணி அணிவதுண்டல்லவா? அவற்றைக் கழற்றித் தைரியமாக அவர்கள் கன்னத்தில் கொடுப்பது தானே!''

மாணவிகள் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை.

''அகிம்சைத் தொண்டரின் அறிவுரையா இது! இம்சை நிறைந்த செயலல்லவா இது!'' என்றெல்லாம் அந்த மாணவியர் எண்ணினர்.

''இது கொடுஞ் செயல்! அகிம்சை முறை ஏதாவது சொல்லுங்கள்'' என்றாள் ஒரு மாணவி.

''எனக்குத் தெரிந்த அகிம்சை முறை இதுதான். இது உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் காந்தியடிகளிடம் போய்க் கேளுங்கள். அவர் சரியான அறிவுரை கூறுவார்'' என்றார் கிஷோர்.

'அதுவும் சரிதான்' என்று எண்ணிய மாணவிகள் காந்தியடிகளிடம் சென்றார்கள். தாங்கள் கிஷோரிடம் கேட்டதையும் அவர் சொல்லிய மறுமொழியையும் காந்தியடிகளிடம் தெரிவித்தார்கள்.

உடனே காந்தியடிகள் தமது பதிலைத் தெரிவித்தார்:

''காலணியாலா அடிக்கச் சொன்னார் கிஷோர்? தவறு; மிகமிகத் தவறு: என்னைக் கேட்டால் கத்தியால் குத்திக் கொன்று போடுங்கள் என்பேன். கன்னிப் பெண்களிடம் தாறுமாறாக நடந்து கொள்பவர்களுக்கு இதுதான் தகுந்த தண்டனை! இதை நான் அகிம்சையாகவே மதிக்கிறேன். இதில் சிறிதும் இம்சையில்லை'' என்றார்.

காந்தியடிகளின் அகிம்சைக் கோட்பாட்டை அந்த மாணவியர் ஒருவாறு தெரிந்து கொண்டனர். மன மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார்கள்.

காந்தியடிகள் தமது ஆச்சிரமத்தில் இருந்தார். அமெரிக்க நாட்டிலிருந்து ஓர் இளம் மதப் பிரச்சாரகர் காந்தியடிகளைக் காண வந்திருந்தார். காந்தியடிகளும் அந்த மதப் பிரச்சாரகரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

மதப்பிரச்சாரகர் காந்தியடிகளிடம்,

''உங்கள் மதம் என்ன? எதிர்காலத்தில் இந்தியா எந்த மதத்தைத் தழுவி நிற்கும்?'' என்று கேட்டார்.

உடனே காந்தியடிகள், அறையில்படுத்திருந்த இரண்டு நோயாளிகளைச் சுட்டிக் காண்பித்து,

''தொண்டாற்றுவது என் மதம்; எதிர்காலத்தைப் பற்றி நான் அல்லற் படுவதில்லை'' என்றார்.

பாவம்! அந்த அமெரிக்க மதப் பிரச்சாரகர் பதில் பேசவே இல்லை.

காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் இருந்த சமயம், அப்போது அங்கே மலேரியாக் காய்ச்சல் பரவி இருந்தது. காந்தியடிகள் கவலைப்பட்டார். மற்றவர்களுக்கு வராமல் தடுப்பது எப்படி என்று மருத்துவரிடம் கேட்டார்.

''எல்லாரும் கொசு வலை கட்டிக் கொண்டுதான் தூங்க வேண்டும்'' என்றார் வைத்தியர்.

''எல்லாருக்கும் கொசுவலை எப்படித் தேடுவது? என் போன்ற ஏழைகள் என்ன செய்வது?'' காந்தியடிகள் கேட்டார்.

''உடலை நன்றாகப் போர்த்திக் கொண்டு முகத்தில் சிறிது மண்ணெண்ணெய் பூசிக் கொண்டால் கொசு வராது'' என்றார் வைத்தியர்.

வைத்தியர் சொன்ன எளிய முறையை ஆர்வத்துடன் பின்பற்றினார் காந்தியடிகள்.

## என்ன! என்ன! என்ன! விடை

இவை இந்தியாவின் வேறு மாநிலங்களில் பயிராகும் நெல் வகைகளே!

1, 2, 3 ஆந்திர மாநிலத்திலும், 4 உத்திரப் பிரதேசத்திலும், 5, 6, 7 மத்தியப் பிரதேசத்திலும், 8, 9, 10 வங்க மாநிலத்திலும், 11, 12, மராட்டியத்திலும், 13, 14, 15 ராஜஸ்தானத்திலும், 16, 17, 18 கேரளத்திலும் சாகுபடி செய்யப்படுகின்றன.

# கேளுங்கள் கொடுக்கப்படும்

**வினா:**—போர்டோ கலவை தயார் செய்வதாக இருந்தால் மயில் துத்தம், சுட்ட சுண்ணும்பு ஆகியவைகளை எந்த விகிதத்தில் கலந்தால் சரியான போர்டோ கலவையைப் பெற முடியும்? பயிர்களில் தோன்றும் பூஞ்சாள நோய்களைக் கட்டுப்படுத்த 1 ஏக்கர் நிலப்பரப்பில், எவ்வளவு கலவையை உபயோகப் படுத்த வேண்டும் என்பதையும் விளக்கமாகத் தெரிவிக்கும்படிப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—எம். மணி,
வேளாண்மைக் கண்காணி,
ப. ஆ. திட்டம்,
பொள்ளாச்சி,
கோவை மாவட்டம்.

**விடை:**—சரியான முறையில் 'போர்டோ' கலவை (Boardeaux mixture) தயாரிக்க $2\frac{1}{4}$ கிலோ மயில்துத்தம் (Copper Sulphate), $2\frac{1}{4}$ கிலோ சுட்ட சுண்ணும்பு (Lime), 225 லிட்டர் தண்ணீர், 2 பெரிய மண் பானைகள் அல்லது மரத்தொட்டிகள், 2 சிறிய மண் பாத்திரங்கள் ஆகியவைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் $2\frac{1}{4}$ கிலோ மயில்துத்தம் முழுவதையும் $112\frac{1}{2}$ லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்ய ஒரு சிறிய மண் பாத்திரத்தில் $112\frac{1}{2}$ லிட்டர் தண்ணீரிலிருந்து கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் மயில் துத்தம் முழுவதையும் நன்கு கலக்கிக் கரையச் செய்ய வேண்டும். பிறகு இக்கலவையை மீதியுள்ள தண்ணீரில் ஒரு பெரிய பானை அல்லது மரத்தொட்டியில் நன்கு கலக்கிக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது ஒரு சிறிய மண் பாத்திரத்தில் $2\frac{1}{4}$ கிலோ சுட்ட சுண்ணும்பில் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கலக்க வேண்டும். பிறகு ஒரு பானை அல்லது மரத்தொட்டியில் அக்கலவையை வடிகட்டி எடுத்து தனியாக $112\frac{1}{2}$ லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கிக்கொள்ள வேண்டும்.

மூன்றுவதாக மயில் துத்தக் கரைசலைத் தூக்கிச் சுண்ணும்பு நீர்க்கரைசலில் ஊற்றி, ஒரு குச்சியினுல் நன்கு கலக்க வேண்டும். இதுதான் 'போர்டோ' கலவை. இது சரியான கலவையா என்பதை அடுத்துச் சோதிக்க வேண்டும்.

நான்காவதாக 'போர்டோ' கலவையில் நன்ருகத் தீட்டப்பட்டு பளபளப்பாகவுள்ள ஒரு கத்தியை நனைத்துச் சோதனை செய்யவேண்டும். மயில் துத்தம் அதிகமாக இருக்குமானுல், கத்தியின் பளபளப்பான பகுதியில் செங்கற்பொடி போன்ற பொருள் படிந்திருக்கும். இவ்வாறு இருந்தால் இக்கலவைப் பயிருக்குத் தீங்கு விளைவிக்கும். எனவே இதைச் சரிசெய்ய வேண்டும்.

ஐந்தாவதாக மேலும் கொஞ்சம் சுட்ட சுண்ணும்பை முன்பு கூறியது போலவே தண்ணீரில் கலக்கிக்கொண்டு சுண்ணும்புக் கரைசலை மேற்கூறிய வகையில் கலவையில் ஊற்றிக் கலக்க வேண்டும்.

ஆறுவதாக மீண்டும் பளபளப்பான கத்தியை அக்கலவையில் நனைத்துப் பார்க்க வேண்டும். கத்தியின் பளபளப்பான பகுதியில் செங்கல் நிறப் பொடி படிந்திருக்காவிட்டால், அதுவே சரியான போர்டோ கலவையாகும்.



செங்கல் நிறப்பொடி படிந்திருக்குமானுல், மேலும் கொஞ்சம் சுண்ணும்புக் கரைசலைச் சேர்த்து, மீண்டும் கத்தியினுல் சோதிக்க வேண்டும். கத்தியில் செங்கல் நிறப் பொடி போன்ற பொருள் படியவில்லையானுல் அக்கலவை, சரியான நிலைக்கு வந்து விட்டதாகக் கொள்ளலாம். இவ்வாறு சரியான முறையில் கவனமாகத் தயாரிக்கப்பட்ட கலவையே சிறந்த 'போர்டோ' கலவையாகும்.



இவ்வாறு தயாரிக்கப்பட்ட 'போர்டோ' கலவையை ஏக்கருக்கு 225 லிட்டர் அளவில் தெளித்துப் பூஞ்சாள நோய்களைக் கட்டுப்படுத்தலாம். அந்தந்தப்பயிருக்கு ஏற்பவும், அவைகளின் வளர்ச்சிக்கும், அடர்த்திக்கும், நோயின் கடுமைக்கும் தக்கவாறு 'போர்டோ' கலவையின் அளவைக் கூட்டியோ அல்லது குறைத்தோ தெளிக்கலாம். இதுபற்றி முடிவு செய்ய, உங்கள் துணை வேளாண்மை அலுவலர் கூறும் அளவினை ஏற்றுக் கொள்ளுங்கள். (எச்சரிக்கை: 'போர்டோ' கலவை தயாரிக்க இரும்பு அல்லது தாமிரப் பாத்திரங்களைப் பயன்படுத்தக்கூடாது).

* * *

**வினா:**—நான் எனது வீட்டுத் தோட்டத்தில் வாழை பயிரிட விரும்புகிறேன். அதற்கு நல்ல உயர்ந்த வகை வாழைக் கன்றுகள் கிடைக்கும் இடம், பயிரிடும் காலம், முறை ஆகியவைகளை விளக்கமாக அறிவிக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

— இரா. அட்சயலிங்கம்,
கீவளூர், நாகப்பட்டினம்
வட்டம், தஞ்சாவூர்
மாவட்டம்.

**விடை:**—வாழைப்பழம் உற்பத்தி செய்வதற்காகவா அல்லது வாழைக்காய் உற்பத்தி செய்வதற்காகவா என்பதைத் தாங்கள் தெளிவாகக் கூறவில்லை. எனினும், வீட்டுத் தோட்டத்தில் வாழை பயிரிட விரும்புகின்றேன் என்று தாங்கள் கூறியுள்ளதால், சிறந்த வாழைக்காய் தரவல்ல சிறந்த ரகத்தைப் பற்றி மட்டும் கீழே குறிப்பிட்டுள்ளோம்.

வீட்டுத் தோட்டத்தில் 'மொந்தன்' என்ற வாழை ரகத்தைப் பயிரிடலாம். ஆனுல் அண்மையில் புதிதாக வந்துள்ள சமையலுக்கு ஏற்ற 'காஞ்சேலா' என்ற வாழையைப் பயிரிடுதல் மிகவும்

சிறந்தது, 'காஞ்ச்கேலா' வாழை, மொந்தன் வாழையைவிடச் சிறந்தது என்பதைப் பின்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

### காஞ்ச்கேலா ' வாழையின் சிறப்புப் பற்றிய அட்டவணை.

| விவரம். | மொந்தன். | காஞ்ச் கேலா. |
|---|---|---|
| ஒரு தாரின் எடை (கிலோ). | 16·5 | 31·00 |
| ஒரு தாரில் உள்ள சீப்புகள். | 6 | 9 |
| ஒரு தாரில் உள்ள காய்கள். | 67 | 110 |
| ஒரு காயின் நீளம் (செ.மீ.) | 19.9 | 25 |
| ஒரு காயின் சுற்றளவு (செ.மீ.). | 18·0 | 19·5 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து மொந்தன் ரகத்தைவிட, 'காஞ்ச்கேலா' ரகம் 2 மடங்கு மகசூல் அளிக்க வல்லது என்பது தெளிவாகிறது.

மொந்தன் காயைச் சமைத்தால் நார்ப்பொருள் கலந்த காய்கறிபோல் இருக்கும். 'காஞ்ச்கேலா' ரகக்காயைச் சமைத்தால், உருளைக்கிழங்குபோல் இருக்கும். இதற்குக் காரணம் 'காஞ்ச்கேலா' வாழைக்காயில் மாவுப் பொருள் மென்மையானதாக இருப்பதேயாகும்.

மேற்கூறிய காரணங்களால் தாங்கள், தங்கள் வீட்டுத் தோட்டத்தில் 'காஞ்ச்கேலா' ரக வாழையைப் பயிரிடுவதே சிறந்தது. இந்த ரகக் கன்றுகளைத் தஞ்சை மாவட்டம் ஆடுதுறையில் உள்ள வாழை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தங்கள் வீட்டுத் தோட்டத்தில் 'காஞ்ச்கேலா' அல்லது மொந்தன் ரகங்களை ஆடி-ஆவணி அல்லது கார்த்திகை-மாசி அல்லது பங்குனி-சித்திரை மாதங்களில் பயிரிடலாம். இந்த ரகக் கன்றுகளை 7 அடி × 7 அடி இடைவெளியில் நடவேண்டும். கன்றுகளை நட்ட 3-வது மாதத்திலும், 5-வது மாதத்திலும் கீழ்க் கண்ட அளவில் இரசாயன உரமிடவேண்டும்.

#### மூன்றாவது மாதத்தில் இடவேண்டிய உரஅளவு.

(ஒரு மரத்திற்கு)

| | | |
|---|---|---|
| தொழு எரு | — | 12 கிலோ |
| அமோனியம் சல்பேட் | — | 300 கிராம் |
| சூப்பர் பாஸ்பேட் | — | 250 கிராம் |
| மூரியேட் ஆப் பொட்டாஷ் | — | 310 கிராம் |
| கடலைப் பிண்ணாக்கு | — | 145 கிராம் |

மேற்கூறிய இரசாயன உரங்களும், பிண்ணாக்கும் கிடைக்கா விட்டால், 6 : 6 : 18 கலப்பு உரத்தில் ஒவ்வொரு மரத்திற்கும் 415 கிராம் இடலாம்.

#### ஐந்தாவது மாதத்தில் இடவேண்டிய உர அளவு.

| | | |
|---|---|---|
| தொழு எரு | — | 12 கிலோ |
| அமோனியம் சல்பேட் | — | 150 கிராம் |
| மூரியேட் ஆப் பொட்டாஷ் | — | 310 கிராம் |
| கடலைப் பிண்ணாக்கு | — | 140 கிராம் |

மேற்கூறப்பட்ட இரசாயன உரங்களும், பிண்ணாக்கும் கிடைக்கா விட்டால், 10 : 0 : 30 கலப்பு உரத்தில் ஒவ்வொரு மரத்திற்கும் 520 கிராம் இடலாம்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் விடவேண்டும். மற்ற காலங்களில் வீட்டுத் தோட்ட வாழைக்கு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் தண்ணீர் விடவேண்டும். பொதுவாக வீட்டுத் தோட்டத்தில் உள்ள வாழைகளில் பூச்சிகளும், நோய்களும் தோன்றுவதில்லை. அப்படித் தோன்றினால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களைக் கலந்தாலோசித்து அவர்கூறும் மருந்தைத் தெளியுங்கள்.



வினு:—நான் சிறிய அளவில் புருக்கள் வளர்த்து வருகின்றேன். யாதொரு செலவும் இல்லாமல் மாதம் 500 ரூபாய் புதையல் கிடைப்பதுபோல இலாபம் தருகிறது. இதன் குஞ்சுகளுக்கு மார்க்கெட்டில் கிராக்கி இருப்பதால், வியாபார ரீதியாக...... கோழிப் பண்ணையைப் போன்று விரிவாக "புருப் பண்ணை" அமைக்க விரும்புகின்றேன். இதற்கு எவ்வாறு செய்ய வேண்டும்? கோழிப் பண்ணைக்குச் சர்க்கார் கடன் கொடுப்பதுபோல் இதற்கும் கடன் வழங்குவார்களா? இதற்கு யாரை அணுக வேண்டும்? மேலும் உயர்ரக ஜாதிப் புருக்கள் எங்கு கிடைக்கும்? எந்த ரகப் புருக்கள் அதிக வருவாய் கொடுக்கும்? இவைகளுக்குத் தாங்கள் விரிவாகப் பதில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.


—து. முத்துவேல் முருகன்,
தேனி,
மதுரை மாவட்டம்.

விடை:—தங்களுக்குப் புருக்களின் மூலம் எந்தவிதச் செலவும் இன்றி புதையல் கிடைப்பது போல் மாதம் ரூபாய் 500 இலாபம் கிடைப்பது அறிந்து தங்கள் முயற்சியைப் பாராட்டுகின்ருேம். வியாபார ரீதியில் "புருப் பண்ணை" அமைக்கப் பின் கண்ட குறிப்புகள் தங்களுக்குப் பயனுடையதாக இருக்கும்.



புருக்களுக்கு மக்காச்சோளம், கோதுமை ஆகியவை கலந்த கலவை, 'பிஸ்கட்', போன்றவைகளைக் கொடுக்கலாம். பட்டாணிகளை உடைத்துப் புருக்களுக்குக் கொடுக்கலாம். புருக்கள் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் காலையில் தண்ணீர் பாத்திரத்தில் உள்ள தண்ணீரை மாற்றி, புதிய தண்ணீர் வைக்க வேண்டும். தீனி தின்ற பிறகு புருக்கள் தண்ணீர் குடிக்க விரும்பும். ஆனல் தீனி தின்பதற்கு முன்பு, தண்ணீர் குடிக்கச் செய்யும் பழக்கத்தைப் புருக்களுக்கு ஏற்படுத்துதல் சிறந்தது.

புருக்கள் தின்ற தீனி நன்கு செறிக்கவும், புரு முட்டையின் ஓடு வலுவடையவும், பழைய சுண்ணும்புச் சாந்து, பழைய செங்கற்கள், கரித்தூள், நத்தை ஓட்டுத் தூள் ஆகியவைகள் கலந்த கலவையில் சிறிது கொடுப்பதும் சிறந்தது. புருக்களுக்குச் சிறிது உப்பு கொடுப்பதும் சிறந்தது. மேற்கூறிய கலவைகளுடன் சிறிது கல் உப்பைக் கலந்துவிடலாம்.





புதிதாகப் புருக்களை வளர்க்க ஆரம்பிக்கும் பொழுது ஏறத்தாழ 15 நாட்களுக்குப் புருக்களைக் கூட்டிலேயே அடைத்து வைத்திருந்து, தானியம், தண்ணீர் ஆகியவைகளை அளித்து பழக்கப்படுத்த வேண்டும். ஆனல் அவைகள் பறக்கவும், நடக்கவும் போதிய இடமும், வெளிச்சமும் போதிய வெப்பமும் உள்ள இடத்திலேயே அடைக்க வேண்டும்.

புருக்கள் நலமாக இருக்க அதன் கூடுகள் வெப்பத்திஞல் தாக்கப்படாமலும், மழைத் தண்ணீரால் பாதிக்கப்படாமலும் அமைக்கப்பட வேண்டும். புருக்களைப் பூனை பிடித்துவிடுமாதலின், புருக்கூண்டுகளை பூனை ஏருதவாறு கம்பத்தின் மேலே அமைப்பது சிறந்தது. புருக்கூண்டின் வாசல் கிழக்கு நோக்கியோ அல்லது மேற்கு நோக்கியோ அமைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் புருக்களுக்கு அதிக அளவு சூரிய வெளிச்சம் கிடைக்கும்; வாடைக் காற்றிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கும்.

புருக் கூண்டில் ஒவ்வொரு புருவுக்கும் குறைந்தது 9 அங்குல நீளம், 9 அங்குல அகலம், 9 அங்குல உயரம் உள்ள தனித்தனி அறை இருப்பது அவசியம். ஒன்றின் அறையில் மற்ருெரு புரு இருட்டுத் தனமாகப் புகுந்து கொள்ளும் தன்மையுடையதாக இருப்பதால், ஒவ்வொரு புருவுக்கும் தனித்தனி அறை இருப்பது இன்றியமையாததாகும். ஆனல் புருக்களை இணை இணையாகத் தங்கவிடுவதற்கு ஏற்ற வகையில் இரண்டு அறைகள் இணைந்தாற்போலும், ஓர் அறையிலிருந்து மற்ருென்றிற்குச் செல்வதற்கு ஏற்ருற்போலும் அமைப்பது சிறந்தது.



புருக்கூண்டினைத் தூய்மைப்படுத்துவதற்கு வசதியாக அடிப்பாகத்தில் மணல் அல்லது மரத்தூளைப் பரப்பி

வைக்க வேண்டும். புருக்கள் தண்ணீரில் குளிக்கப் பெரிதும் விரும்பும். எனவே, 4 அங்குல ஆழம் உள்ள உலோகத் தட்டில் தண்ணீர் நிரப்பி வைக்க வேண்டும்.

இத்தண்ணீர்த் தட்டை 3 அடி உயரத்தில் வைத்துத் தண்ணீர் நிரப்ப வேண்டும். புருக்கள் குளித்த பிறகு, தண்ணீரை வடித்து விட்டு, தேவையான பொழுது மட்டும் தண்ணீர் நிரப்பவேண்டும்.

புருக்கள் நலமாக இருக்கப் புருக் கூண்டையும், தீனி தின்னும் மேடையையும், நாள்தோறும் தூய்மைப்படுத்த வேண்டும். மணலில் படிந்துள்ள எச்சங்களைக் கூட்டி வெளியே எடுத்துவிட வேண்டும்.

புருக்கள் 7 முதல் 9 மாத வயதையடையும் பொழுது கலவியில் ஈடுபடும். கலவியில் ஈடுபட்ட பிறகு ஆண் புரு, பெண் புருவைத் துரத்தித் தலையில் கொத்தும். இதற்காகக் கவலைப்பட வேண்டாம்! அவைகளைப் பிரிக்க வேண்டாம்! இது புருக்களிடம் உள்ள பழக்கம்! புருக்கள் பொதுவாகக் கூட்டில் 2 முட்டை இடும். புருக் குஞ்சு 2 வார வயது அடைவதற்குள், மீண்டும் புரு முட்டையிடத் துவங்கி விடும். புருக்களுக்கு நோய் தோன்றினால், அருகில் உள்ள கால்நடை மருத்துவ மனைக்குக் கொண்டுபோய் சிகிச்சை செய்ய வேண்டும்.

மேற்கூறிய முறையில் புருப் பண்ணையை அமைத்து நடத்தினால் பெரும் இலாபம் தரக்கூடியதாக இருக்கும்.

புருப் பண்ணை நம் நாட்டில் பிரபலமடையாததால், இதுவரை புருப் பண்ணைகளுக்கு அரசாங்கம் கடன் கொடுக்கவில்லை. ஆனால் தங்களுடைய புருப் பண்ணை இலாபகரமாக நடக்கிறது என்பதை அறிந்தால், 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா' அல்லது 'பாங்க் ஆப் பரோடா' கடன் கொடுக்க முன்வரக்கூடும். எனவே அந்த வங்கி அலுவலர்களைக் கலந்தாலோசியுங்கள்.

நமது நாட்டில் புருப்பண்ணை மிகவும் சொற்பம். தனிப்பட்ட சிலரே சிறு அளவில் புருப் பண்ணை அமைத்துள்ளனர். உயர்ரகப் புருக்கள் பற்றி ஆதாரபூர்வமான தகவல்கள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. உயர்ரகப் புருக்களை உருவாக்கும் ஆராய்ச்சியும் இந்தியாவில் இதுவரை நடைபெறவில்லை. எனவே, உயர்ரகப் புருக்கள் எங்கு கிடைக்கும், எந்த ரகம் அதிக வருவாய் தரும் என்று கூறமுடியாத நிலையில் உள்ளோம். ஆனால், 'மாடப்புரு' எனப்படும் கோவில்களில் வளரக் கூடிய புரு அதிக வருவாய் தரக் கூடியது. அவைகளைத் தாங்கள் வளர்க்கலாம்.





வினா:—ஒருவருடைய பெயரை மாற்றம் செய்ய வேண்டுமாயின் முறைப்படி யாருக்கு மனுச் செய்யவேண்டும்? அவருடைய முகவரியைத் தெரிவிக்கவும்.

—அ. ம. அண்ணாதுரை,
புளியம்பட்டி,
அருப்புக் கோட்டை.
முகவை மாவட்டம்,

விடை:—ஒருவருடைய பெயரை மாற்றம் செய்யவேண்டுமானால், அதற்கெனத் தனியே உள்ள மனுவையும், அறிக்கையையும் பூர்த்தி செய்து, அதில் பொறுப்பான ஒருவரிடமிருந்து சாட்சிக் கையெழுத்து வாங்கி அனுப்ப வேண்டும். வயதுக்கு வராத சிறுவர்களின் பெயரை மாற்றப் பெற்றோர் அல்லது காப்பாளர் அறிக்கையில் கையொப்பமிட வேண்டும். இந்த மாநிலத்தைச்சேர்ந்தவர்களிடமிருந்து மட்டுமே பெயர் மாற்றம் செய்வதற்கான அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும். பெயர் மாற்றம் செய்வதற்குக் கட்டணமாக 6-00 ரூபாயும், அரசினர் பதிவிதழ் (Gezette) கட்டணமாக 1-00 ரூபாயும் ஆக மொத்தம் 7-00 ரூபாயை அஞ்சல் ஆணையாக (Postal Order) மனுவுடன் அனுப்பவேண்டும். பெயர் மாற்றம் செய்வதற்கான காரணத்தையும் அறிக்கையில் தெரிவிக்க வேண்டும்.



பெயர் மாற்றம் செய்து கொள்ள விரும்புகின்றவர் சென்னையில் உள்ளவராக இருந்தால், பெயர் மாற்றம் செய்து கொள்வதற்கு சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் அவர்களிடமிருந்தும், வேறு இடத்தில் உள்ளவராக இருப்பின் துணை மாநிலக் காவல் துறைத் தலைமை அலுவலர், குற்றப் புலனாய்வுப் பகுதி, சென்னை அவர்களிடமிருந்தும் அனுமதி பெற்று அனுப்ப வேண்டும். பெண்கள் தங்கள் குமரிப் பெயரை மணமான பெயராக மாற்றிக் கொள்ளவும், தங்கள் பெயருடன் கணவனுடைய பெயரின் முதல் எழுத்தையோ அல்லது கணவனுடைய பெயரையோ சேர்த்துக் கொள்ளவும் மேற்கூறிய அனுமதி தேவை இல்லை.

பெயர் மாற்றம் செய்வதற்கான மனுவையும், அறிக்கையையும் பெறப் பின்கண்ட முகவரிக்கு எழுதவும்.

''இயக்குநர்,
எழுதுபொருள் அச்சுத்துறை.
அரசினர் அச்சகம்,
சென்னை-600001.

ஆர். எம்

# மானுவாரி கருங்கண்ணிப் பருத்தி மகசூல் பெருகிட

தமிழ்நாட்டில் பருத்தி பயிரிடப்படும் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ 46 சத அளவுப் பரப்பில் கருங்கண்ணிப் பருத்தி, சாகுபடி செய்யப் பட்டுவருகிறது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 3·77 இலட்சம் ஏக்கரில் கருங் கண்ணிப் பருத்தி பயிரிடப்படு கிறது. கருங்கண்ணிப்பருத்தி குறைந்த அளவு மகசூலே கொடுப்பதாக இருப்பதாலும், பருத்தி சாகு படியாகும் மொத்தப் பரப்பில் பெரும் பகுதியில் கருங்கண்ணிப் பருத்தியையே மாஞ வாரியாகச் சாகுபடி செய்வ தாலும், குறிப்பாகத் தமிழ் நாட்டின் தென் மாவட்ட உழவர் பெருமக்கள் தங்கள் வாழ்க்கை வசதிக்குக் கருங்கண் ணிப் பருத்தியையே நம்பி இருப்பதாலும், தமிழ் நாட்டில் கருங்கண்ணிப் பருத்தி உற்பத்தியைப் பெருக்கு வது மிகமிக இன்றியமையாத தாக உள்ளது. ஏதேனும் ஓர் ஆண்டில் கருங்கண்ணிப் பருத்தியின் மகசூல் குறைந்து விடுமாஞல், தென் மாவட்ட உழவர் பெருமக்களின் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே தான், கருங்கண்ணிப் பருத்தி யின் மகசூலைப் பெருக்குவதற் கான வழிமுறைகளைக் கடமை யுணர்வுடன், ''தமிழரசு'' இதழ் இங்கே படைத்துள்ளது.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப் பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கரிசல் மண்ணில் (Black soil) மாஞ வாரியாகப் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப் பகுதிகளில், 195 நாட்கள் வயதுடையதும், ஏக்கருக்குச் சராசரியாக 1·5 குவிண்டால் மகசூல் தரக்கூடியதுமான 'கே—7' என்னும் கருங்கண் ணிப் பருத்தியைப் பயிரிடுமாறு தமிழ்நாடு வேளாண்மைத் துறை பரிந்துரைக்கிறது.

**கரிசல் மண்ணிற்கேற்ற புதிய பருத்தி!**

'கே—7' என்ற கருங்கண்ணிப் பருத்தியைவிட அதிக மகசூல் தரவல்ல 'கே-8' என்ற பருத்தி ரகம் கோவில்பட்டியில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்த ரகம் தமிழகமெங்கும் உள்ள கரிசல் நிலங்களுக்கு ஏற்றது. இந்த ரகம் ஏக்கருக்கு 2 குவிண்டால் பருத்தி மகசூல் அளிக்க வல்லது. இப்புதிய ரகத்தின் இழை நீளம் 27 மில்லி மீட்டர்.

'கே. 8' என்னும் பருத்தி ரகத்தைக் கொண்டு 40—ஆம் எண் நூல் நூற்கமுடியும். இந்தியாவில் இதுவரை வெளி யிடப்பட்டுள்ள நாட்டுப் பருத்தி ரகங்களில் 'கே. 8' ரகமே மிகவும் சிறந்தது. இப் புதிய ரகம் 'கே. 7' ரகத்தைக் காட்டிலும் ஏக்கருக்குக் குறைந் தது 35 ரூபாய் அதிக இலாபம் தருகிறது. இந்த ரகத்தைத் தமிழ் நாட்டிலுள்ள மாஞவாரி கரிசல் நிலங்கள் முழுவதும் பயிரிட்டால், தமிழ்நாட் டிற்கு 58 இலட்சம் ரூபாய் அதிக வருவாய் கிடைக்கக் கூடும்!

தற்பொழுது 'கே. 8' ரகப் பருத்தி விதைகள் பெருமள வில் உழவர்களுக்குக் கிடைக் காது. எனவே, இந்த ரகப் பருத்தி விதைகளை அடுத்து வரும் ஆண்டுகளில் பெருமள வில் வழங்கத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது. ஆகவே, கரிசல் நிலங்களில் 'கே. 7' அல்லது 'கே. 8' என்னும் பருத்தியைக் கீழ்க் கண்ட முறையில் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்ருேம்.

**சாகுபடிக் குறிப்புகள்.**

**விதைக்கும் பருவம்:—** அக்டோ பர் மாதம் முதல் 15 நாட் களில் விதைப்பது சிறந்தது.

**விதை அளவு:** ஏக்கருக்கு 6 கிலோ விதை வீதம் விதைக்க வேண்டும்.

**விதைப் பராமரிப்பு:—** ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செர சான்' மருந்து வீதம் கலந்து, 6 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். பிறகு மாட்டுச் சாணமும், செம்மண்ணும் 1:3 என்ற விகிதத்தில் கலந்த கலவையில் விதைகளைத் தேய்த்து விதைகளில் ஒட்டி யுள்ள பஞ்சுகளை அகற்றிவிட்டு நிழலில் உலர்த்த வேண்டும்.

**நிலம் தயாரித்தல்:—** பருவ மழை பெய்தவுடன் நாட்டுக் கலப்பையால் நிலத்தை 2 முறை உழவேண்டும். பிறகு 'குண்டகா' (Guntaka) என்னும் கலப்பையை உபயோகித்துக் கட்டிகளை உடைத்துச் சமப் படுத்த வேண்டும்.

**அடியுரமிடுதல்:—** கடைசி உழ வில் ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) போட வேண்டும். விதைப்பதற்குச் சற்று முன்னதாக ஏக்கருக்கு 16 கிலோ வீதம் தழைச்சத்து அளிக்க 80 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 36 கிலோ யூரியாவையும், 8 கிலோ மணிச்சத்து அளிக்க 50 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும் அடி யுரமாக இடவேண்டும்.

**கலப்புப் பயிர்:—** கருங்கண்ணிப் பருத்தியுடன், உளுந்தைக் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்தால், பருப்பு உற்பத்தி பெருகுவதுடன், உழவர் பெரு மக்களுக்குக் கூடுதல் வருவா யும் கிடைக்கும்! எனவே, 'கே. 7' பருத்தியுடன், 'கோ. 1' உளுந்தைக் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்ய வேண்டும் என்று பரிந்துரைக் கின்ருேம்.


**விதைத்தல்:**—'கொர்ரு' என்னும் கலப்பையையோ அல்லது விதைக் கலப்பையையோ பயன்படுத்தி விதைகளை வரிசை வரிசையாக விதைக்க வேண்டும். மூன்று வரிசைப் பருத்திக்கு ஒருவரிசை 'கோ. 1' உளுந்து வீதம் விதைக்க வேண்டும். பருத்தியை விதைக்கும் பொழுது வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

**பின்செய் நேர்த்தி:**—விதைத்த 21-ஆம் நாள் முதல் களை எடுப்பதுடன், செடிக்குச் செடி 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளி விட்டு, நெருக்கமாக உள்ள செடிகளை அகற்றி விட வேண்டும். பயிர்க் களைப்புச் செய்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம்—பூ பூப்பதற்கு முன்பு வரை—'தந்துலு' என்னும் கலப்பையால் இடையுழவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால், மண்ணில் வெடிப்பு ஏற்படுவதையும், மண்ணின் அடியில் உள்ள ஈரம் காய்ந்து விடுவதையும், களைகளால் பயிருக்கு ஏற்படும் சேதத்தையும் குறைத்திட இயலும். முக்கியமாக மண்ணின் ஈரத்தைப் பாதுகாக்கத் 'தந்துலு' மூலம் இடையுழவு செய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

விதைத்த 40 முதல் 42 நாட்களில் 2-வது முறையாக களை எடுக்க வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு:**—விதைத்த 1 மாதம் கழித்து 'கார்பரில்' கந்தகத்தூள் ஆகியவற்றைச் சமஅளவில் கலந்து, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். பிறகு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வீதம் 5 முறை மேற்கூறியவாறே மருந்து தூவ வேண்டும்.

**அறுவடை:**—நன்றாக வெடித்த பருத்தியை மட்டும் காலை வேளையில் எடுக்க வேண்டும். எடுத்த பருத்தியை நிழலில் உலர்த்த வேண்டும். பூச்சிகளால் தாக்கப்பட்டு நிறம் மாறிய பருத்திகளை நீக்கிவிட வேண்டும். பருத்தியை வகைப்படுத்தித் தரம் பிரித்துச் சேமித்து வைக்க வேண்டும். பருத்தியைத் தரையில் குவித்துச் சேமிக்கக் கூடாது. சாக்கு அல்லதுபாயின் மேல் குவித்துச் சேமிக்க வேண்டும்.



**அறுவடைக்குப் பின்:**—பருத்தி அறுவடை முடிந்த பிறகு, உடனடியாகப் பருத்திச் செடிகளைப் பிடுங்கிவிட வேண்டும். பிறகு உடனே நிலத்தை நாட்டுக் கலப்பையால் உழுது விட வேண்டும். இதனால் பூச்சிப் பூசணங்கள் பரவுவதைத் தடுக்க முடிவதுடன், மண் வெடிப்பதையும் தடுத்திட இயலும். பிறகு மாதம் ஒருமுறை வீதம் நாட்டுக் கலப்பையால் உழுது நிலம் வெடிப்பதைத் தவிர்க்கலாம்.

**பயிர்ச் சுழற்சி:**—ஆண்டு தோறும் தொடர்ந்து கருங்கண்ணிப் பருத்தியையே தங்கள் நிலத்தில் பல உழவர் பெருமக்கள் பயிரிட்டு வருகின்றனர். இதனால் நிலவளம் குன்றி, பருத்தி மகசூல் குறைந்து விடும். எனவே, கரிசல் மண் நிலங்களில் தகுந்த பயிர்ச் சுழற்சியை மேற்கொள்ள வேண்டும். கம்பு விதைத்து அறுவடையான பிறகு பருத்தி விதைத்தால், பருத்தியில் நல்ல மகசூல் பெறலாம். சோளம் விதைத்து அறுவடையான பிறகு பருத்தி விதைத்தால், பருத்தியின் மகசூல் மிகவும் குறைந்துவிடும். இதைச் 'சோளத்தீங்கு' (Cholam effect) என்று கூறப்படுகிறது. இத்தீங்கினைக் குறைக்க, சோளத்துடன் அவுரியை விதைக்க வேண்டும். அல்லது சோளம் அறுவடையான பிறகு விதைக்கப்படும் பருத்திக்கு ஏக்கருக்கு 60 கிலோ வீதம் சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும். கம்பு பயிரிட்ட பிறகு பருத்தி என்ற முறையில் **பயிரிடுதல் சிறந்தது. எனவே மானாவாரி கருங்கண்ணிப் பருத்தி பயிரிட விரும்புவோர், அதற்கு முந்திய பயிர் என்ன என்று அறிந்து, அதற்கேற்பப் பருத்தி பயிரிடுதல் சிறந்தது.**

**வருவாய்:**—மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு 'கே. 7' பருத்தி பயிரிட்டால், ஏக்கருக்குக் குறைந்தது 1·5 குவிண்டால் பருத்தி மகசூல் பெறலாம். இம்மகசூல் பெற ரூபாய் 175 செலவு செய்ய வேண்டியிருக்கும். 1·5 குவிண்டால் பருத்தியை ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் மூலம் விற்றால் ரூபாய் 375 வருவாய் பெறமுடியுமாதலின் சாகுபடிச் செலவு போக ஏக்கருக்குக் குறைந்தது 200 ரூபாய் நிகர இலாபம் பெற முடியும். உளுந்து மூலமும் மேலும் வருவாய் பெற இயலும்!

எனவே, கரிசல் மண் நிலங்களில் மானாவாரி கருங்கண்ணிப் பருத்தி பயிரிடும் உழவர் பெருமக்கள் அனைவரையும் மேற்கூறிய முறையில் 'கே. 7' அல்லது 'கே. 8' பருத்தி பயிரிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

'கே. 7' அல்லது 'கே. 8' பருத்தியுடன் 'கோ. 1' உளுந்தைக் கலப்புப் பயிராகப் பயிரிட மறந்துவிடாதீர்கள் என்றும் நினைவுபடுத்துகின்றோம். ஏனெனில் அவ்வாறு செய்வது உங்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் நன்மையளிக்கும்!

**ஆர். எம்.**

சிறுவர் பகுதி

# அழகு

புலவர் சி. துரைசுவாமி











குமரன்

அன்பிற் கழகு மன்னுயிர் காத்தல்
ஆற்றற் கழகு போற்ற விளங்கல்
இல்லோர்க் கழகு நல்லறம் விளைத்தல்
ஈட்டற் கழகு வாட்டம் தவிர்த்தல்
உடையோர்க் கழகு விடைபோல் விளங்கல்
ஊருக் கழகு பேர்வளம் ஓங்கல்
எளியோர்க் கழகு பழியற வாழ்தல்
ஏழ்மைக் கழகு ஊழ்வென் றுயர்தல்
ஐம்புலன் அழகு மெய்வகை உணர்தல்
ஒற்றுமைக் கழகு வெற்றி விளைத்தல்
ஓதற் கழகு தீதற் றுறைதல்
கலைஞர்க் கழகு நிலைப்புகழ் படைத்தல்
காதற் கழகு ஆதலில் பொருதல்
கிளைகட் கழகு நிழலாய்த் திகழ்தல்
கீழ்மைக் கழகு தாழ்வற உழைத்தல்
குடிகட் கழகு அடிமையில் லாதல்
கூடற் கழகு கோடா நட்பு
கெட்டோர்க் கழகு திட்டமிட் டுயர்தல்
கேட்டற் கழகு ஊட்டும் அறிவுரை
கைவாட் கழகு எய்பகை வெல்லல்
கொடுத்தற் கழகு அடுத்தது வேண்டேல்
கோயிற் கழகு தாய்வழி போற்றல்
சக்திக் கழகு தக்கது பயத்தல்
சான்றோர்க் கழகு ஆன்றோர் கடன்செயல்
சிந்தனைக் கழகு வித்தை விளைத்தல்
சீருக் கழகு பாருயர் ஆற்றல்
சுற்றத்திற் கழகு அற்றது போற்றல்
சூடற் கழகு வாடா மணமலர்
செய்தற் கழகு எய்பயன் வினையே
சேவைக் கழகு தீயவை ஒழித்தல்
சைகைக் கழகு மெய்நட மாடல்
சொல்லுக் கழகு நல்லவை போற்றல்
சோதிக் கழகு ஆதவன் மதியே
தந்தைக் கழகு தந்திடல் கல்வி
தாய்மைக் கழகு தூய்மை அளித்தல்
திடத்தோர்க் கழகு கடமை முடித்தல்
தீட்டற் கழகு பாட்டும் இசையும்
துறவுக் கழகு அறவினை காத்தல்
தூதுக் கழகு தீதற ஆற்றல்
தெளிந்தோர்க் கழகு வழிமுறை காட்டல்
தேடற் கழகு நாடகம் போற்றல்
தையலற் கழகு மெய்ந்நிலைக் கற்பு
தொழில்மிக் கழகு உழவினைப் போற்றல்
தோப்புக் கழகு மாத்தெங்கு கமுகு
பண்புக் கழகு எண்ணும் உயர்வு
பாட்டுக் கழகு நாட்டும் சிறப்பு
பிழையர்க் கழகு தோழமை இகழேல்
புத்திக் கழகு நத்திடல் உலகு
பூண்பதற் கழகு ஆண்மையில் அடக்கம்
பெண்ணுக் கழகு நண்ணும்நாற் குணங்கள்
பேணுதற் கழகு பூணுடை மானம்
பைந்தமிழ்க் கழகு பார்முத் தமிழே
பொறுமைக் கழகு சிறுமை பொறுத்தல்
போற்றற் கழகு ஏற்பது உலகம்
நடுதற் கழகு கெடுநிலை காத்தல்
நாட்டுக் கழகு வேட்டம் விளைத்தல்
நினைத்தற் கழகு எனைத்தெய் துதவி
நீதிக் கழகு நிறைகோல் தீர்ப்பு
நுண்மைக் கழகு உண்மை உணர்தல்
நூலுக் கழகு வாலறி வூட்டல்
நெறியோர்க் கழகு மறைபோல் விளங்கல்
நேர்மைக் கழகு பார்போற் றெழுகல்
நொந்தோர்க் கழகு சிந்தித் தாற்றல்
நோன்புக் கழகு சான்றோர் வழிபடல்
மக்கட் கழகு தக்கது பயத்தல்
மாண்புக் கழகு காண்பழி போக்கல்
மின்னுக் கழகு பொன்னும் மணியும்
மீட்டற் கழகு கேட்கவ் விசையாழ்
முடிகோற் கழகு குடிநலம் பேணல்
மூத்தோர்க் கழகு மூதுரை வழங்கல்
மெய்ம்மைக் கழகு செய்வகை காட்டல்
மேலோர்க் கழகன் னூலாய் விளங்கல்
மையற் கழகு வையகம் வாழ்த்தல்
மொழிதற் கழகு பிழையறப் பேசல்
மோதற் கழகு நீதிக் கவையில்
மௌனிக் கழகு மேவிடல் துறவு
யாவர்க் கழகு தூவழி நடத்தல்
வழங்குதற் கழகு உழல்பசி போக்கல்
வானோர்க் கழகு ஞானம்செய் தானம்
விழைதற் கழகு பழைமைபண் பாடு
வீட்டிற் கழகு மாட்சிமை இல்லாள்
வெறுத்தற் கழகு வினைதீண் டாமை
வேண்டற் கழகு விழுமியர் தொடர்பு
வையத்திற் கழகு செய்வன செய்முன்

# அண்ணலின் அமுத மொழிகள்

பெண்களின்நிலை உயரும்போது ஆண்களின் நிலையும் உயரும்; இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்.

ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் உள்ளத்தில் குடி கொண்டிருந்த பெரு விருப்பமாகும். இவ் விருப்பமே என்னை எப்போதும் ஏழைகளிடையில் போய்ச் சேர்த்தது. ஏழைகளுடன் கலந்து அவர்களில் ஒருவனாகும் ஆற்றலையும் எனக்குத் தந்தது.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையில் தொழில்படச் செய்வதே அறிவிற்கு உண்மையான வளர்ச்சி என்பது என் கருத்து. அறிவும் உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும் போது இதயத் தத்துவத்திற்கும் ஒரு விழிப்பு ஏற்பட வேண்டியது அவசியமாகும்.

உங்கள் எண்ணங்களை ஒருபோதும் ஒளித்து வைக்காதீர்கள். அவற்றை வெளியே சொல்வது கேவலமானது என்றால் அவற்றை எண்ணுவது இன்னும் கேவலமாகும்.

இந்தியாவிற்குத் தேவையானது ஒரே மாதிரியான நல்ல ஆடையல்ல; ஒரே மாதிரியான நல்ல இதயமே.

அன்பு என்பது ஒருபோதும் கேட்பதில்லை; எப்போதுமே கொடுக்கும்.

கள்ளங் கபடமற்ற இளமை என்பது விலை மதிக்க முடியாத ஒரு சொத்தாகும். இன்பம் என்று தவறாகக் கருதப்படும் ஒரு கண நேரக் கிளர்ச்சிக்காக அந்த விலை மதிப்பற்ற சொத்து ஊதாரித்தனமாக வாரி இறைத்து விடுவதற்கு ஏற்பட்டதல்ல.

குழந்தையின் உடற் பண்பையும் உயிர்ப் பண்பையும் வளர்க்கும் போது, இதயப் பண்பையும் வளர்த்து வந்தால்தான் உள்ளம் வளர்ச்சியடைய முடியும். இவை மூன்றையும் தனித்தனியே பிரிக்க முடியாது. ஒன்றாய் இயங்குவன அவை.

வறுமையில் அமிழ்ந்து கிடக்கும் மக்களுக்கு வாழ்வின் இன்றியமையாப் பொருட்கள் தாம் கண் கண்ட தெய்வம்! அதை வழிபடுவதற்கு வேளாண்மையே சரியான நெறி.

இசை எனக்கு அமைதியளிக்கிறது. ஏதாவதொன்றைப் பற்றி நான் பரபரப்படைந்திருக்கும் சமயத்தில் இன்னிசையானது உடனே எனது உள்ளத்திற்கு அமைதி தந்தது உண்டு; கோபத்தை வெல்வதற்கு இசை எனக்குப் பேருதவி தருகிறது.

சத்தியமே என் கடவுள்; அகிம்சையே அதைக் காணும் வழி.

கோழைகளின் அகிம்சையைவிட வீரர்களின் அகிம்சையே நமக்குத் தேவை. சத்தியத்திற்காக உயிரைக் கவராது, தம் உயிரையே கொடுப்பவர்கள்தான் வேண்டும்.

எதையும் கண்மூடித் தனமாக நம்புகிற மூட நம்பிக்கை என்னிடம் இல்லையென்றே நம்புகிறேன்.

உண்மையான அகிம்சை ஒருநாளும் எதிரியின் இதயத்தை மாற்றாமல் வீண் போவதில்லை என்றே நான் கருதுகிறேன். அது எதிரியின் இதயத்தை மாற்றாமல் போகுமானால் அந்த அளவிற்கு அது குறைபாடு உள்ளதேயாகும்.

மனிதனைப் பிடிக்கும் நோய்களிலெல்லாம் மிக மிகக் கொடியது—மோசமானது—அச்சம் என்னும் நோய்தான்.

என்னுடைய மதம் சிறைச்சாலைபோல மற்றவர்களை வெளியே ஒதுக்கும் மதமல்ல! அதன் வாசல் எப்போதும் திறந்தே கிடக்கும். கடவுள் படைப்பிலே மிகத் தாழ்ந்த உயிருக்கும் அங்கே இடமுண்டு; ஆனால் இறுமாப்பு; சாதித் திமிர்; மத விரோதம்; நிறத் திமிர் ஆகியவற்றிற்கு அங்கே இடமில்லை!



மக்களிடையே உண்டாகியிருக்கும் விழிப்பு உண்மையானதாகவும் மக்களிடம் முழுவதும் காணப்படுவதாகவும் இருந்தால் அவர்கள் தாங்கள் போற்றும் இலட்சியத்தை அடைந்தே தீருவார்கள். எவ்வித அடக்கு முறையும் அதைத் தடுத்துவிட முடியாது.

தாய்நாட்டின் சேவைக்காக, என் வாழ்வு அனைத்தையும் நான் அர்ப்பணித்திருக்கிறேன். இந்தச் சேவை இல்லாவிடில் என் வாழ்க்கையே எனக்குத் தாங்க முடியாத சுமையாகிவிடும்.

நடுத்தர வர்க்க மக்கள் பிழைப்பிற்காக அயல்நாடு செல்ல நேர்வது நாட்டு நலத்தின் சின்னமாகாது.

தூய்மையான இதயம் இல்லாத எந்த ஆணும் பெண்ணும் இறைவன் சந்நிதியை நெருங்கவே முடியாது.

குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டியது மிகவும் விரும்பத் தக்கதுதான். ஆனால் அமைதி ஒன்றே அதற்கு இறுதியான இலட்சியமாகிவிட முடியாது! மணவாழ்வின் நிலை என்பது கட்டுப்பாடான வாழ்வின் நிலை என்றே நான் கருதுகிறேன்.

உண்மையான அலங்காரம் என்பது உடல் முழுதும் உலோகத்தையும் கற்களையும் சுமந்து கொண்டிருப்பது அல்ல-இதயத்தைத் தூய்மைப்படுத்தி ஆத்மாவின் அழகைப் பெருக்கிக் கொள்வதேயாகும் என்பதைப் பெண்கள் உணரவேண்டும்.

எவ்வளவு பயங்கரமான இம்சையையும் எதிர்த்து நிற்பதற்கேற்ற சக்தி வாய்ந்த ஆயுதம் அகிம்சையைத் தவிர வேறு எதுவும் இல்லை.

தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி மனக்கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறது.

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண். 226, சென்னை-600001.

தந்தி: "அர்பாங்க்" தொலைபேசி எண்: 20367, 28068

*எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும்; விவசாயத் தொழிலுக்கும் உதவி செய்யும்.*

**வட்டி விகிதங்கள்**

(வருடத்திற்கு %)

| | |
|---|---|
| நடப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | வட்டி இல்லை. |
| சேமிப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | 4·00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது).

**காலாந்திர கணக்கு:**—ரூ. 1,000/-ம் அதற்கு மேலும்;

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ... ... ... ... | 2·75 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை ... ... ... ... | 3·25 |

**நிரந்தர கணக்கு:**—ரூ. 100/-ம் அதற்கு மேலும்:

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 6.00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய ... ... ... | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் ... ... ... ... ... ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000/-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேல் குறிப்பிட்டதைவிட $\frac{1}{2}$% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

**தொடர் கணக்கு:** தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128/50 | 201 | 278 | 362/50 | 452 | 548/50 |

குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி,
துணைத் தலைவர்.

# அண்ணலின் நினைவாற்றல்

**1920–ஆம் ஆண்டு !**

**காந்தியடிகள் ஒரிசா மாநிலத்தில்** முதன் முதலாகச் சுற்றுப் பயணம் செய்த போது, அங்கு மக்கள் வறுமையால் தொல்லையுறுவதைக் கண்டு மனம் நொந்தார். அந்தப் பகுதியில் நாட்டுப் பணிபுரிந்து வந்த சில பட்டம்பெற்ற இளைஞர் சிலர் அந்தச் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டார்கள்.

ஒரு சிற்றூரில் நிலக்கிழார் ஒருவர் காந்தியடிகளின் குழுவினருக்குக் கரும்புச் சாறு வழங்கினார். தொண்டர்களில் சிலர், கரும்புச் சாற்றுக்குப் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த அண்ணல், ஓர் இளைஞர் ஏதோ தகராறு செய்து கொண்டிருப்பதைக் கண்டார். உடனே, என்ன செய்தி'' என்று வினவினார். அருகிலிருந்த ஒரு தொண்டர் அண்ணலை நெருங்கி வந்து, ''அந்த இளைஞருக்கு ஒரு குவளை கரும்புச் சாறு கொடுக்கப்பட்டது; அவர் அதனை அருந்திவிட்டு, இன்னொரு குவளை கரும்புச் சாறு வேண்டும் என்று கேட்டார். கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதனால் அந்த இளைஞர் சண்டை போடுகிறார்''—என்று விளக்கம் செய்தார். காந்தியடிகள் ஒருவழியாக அனைவரையும் சமாதானம் செய்து—அனைவரையும் நல்ல விதத்தில் உபசரிக்கச் செய்துவிட்டுச் சென்றார்.

**சில ஆண்டுகள் கழிந்தன !**

ஒரிசாவில் காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்டது. அமைச்சரவையில் இடம் பெற்ற ஒருவர், ஒரிசாப் பிரச்சனைகளைப் பற்றிக் காந்தியடிகளிடம் கலந்து பேசுவதற்காக வார்தாவுக்கு வந்தார்.

ஆசிரமத்தில் உள்ள ஊழியர்களில் சிலர் அவரை வரவேற்றுவிட்டு, அவரது வருகையைக் காந்தியடிகளிடம் தெரிவிக்கச் சென்றார்கள்.

சில விநாடிகளில் ஆசிரமப்பெண்களில் ஒருத்தி, ஒரிசா அமைச்சரின் கரத்தில் ஒரு குவளை கரும்புச் சாறு தந்தாள்.

''இது எதற்கு?''—அமைச்சர் வியப்புடன் கேட்டார்.

''நீங்கள் கரும்புச் சாற்றை மிக விரும்பி அருந்துவீர்கள் என்றும் உங்களுக்கு ஒரு குவளை கரும்புச் சாறு அளிக்க வேண்டும் என்றும் காந்தியடிகள் தெரிவித்தார்கள்''—புன்னகையுடன் கூறினாள் அந்தப் பெண்.

அமைச்சர் வியப்படைந்தார். பிறகு சிறிது நேரம் சிந்தனை செய்தார். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரிசாவில் காந்தியடிகளின் முன்னிலையில் கரும்புச் சாறு குடிப்பதற்குப் போட்டியிட்டது நினைவுக்கு வந்தது. காந்தியடிகளின் நினைவாற்றலை வியந்தபடி, கரும்புச் சாற்றைப் பருகினார்.

காந்தியடிகளைச் சந்தித்து, தம் வியப்பையும், நன்றியையும் தெரிவித்து வணங்கிச் சென்றார் இளைஞராகவும்—ஒரிசா அமைச்சராகவும் திகழ்ந்த திரு நித்யானந்த கனுங்கோ !



# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை - 600007.

தொலைபேசி எண் : 30800 தந்தி : "ஹவுஸ்பாங்க்"

தபால் பெட்டி எண் : 486

தலைவர் : **திரு பழனிவேல் ராஜன்,** பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.
உபதலைவர் : **திரு பி. கஸ்தூரி பிள்ளை.**
பொருளாளர் : **திரு என். பழனிசாமி,** எம். ஏ.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ... | ரூ. | 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... | ரூ. | 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | ரூ. | 10,12,30,217 |

*இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதியவீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

**பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.**
*இணைப்பதிவாளர்—செயலாளர்.*



ESTD : 213-52. Govt. Regd. 3072.

## தபால் மூலம்
# இலவசக் கல்வி போதனை

"F குரூப்" வகுப்புகள் ஆரம்பம் : 11—10—1973

ஆண், பெண் இருபாலரும் கீழ்க்கண்ட வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்று 1973-74-ம் வருட சர்க்கார்—பல்கலைக்கழக தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S.V.B.A., B.Com., (P.U.C. தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 2. பீகார் B.A., B.Com., B.Sc., (S.S.L.C. (அ) மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்). 3. போபால்-டெல்லி—ஆக்ரா P.U.C. (S.S.L.C. தவறியவர்களும் — தேறியவர்களும், 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும் எழுத தகுதி உடையவர்கள்) 4. M.A., L.L.B. (Degree holders are eligible). 5. சென்னை, மதுரை, ஆந்திரா மெட்ரிகுலேஷன். 6. மதுரை-சென்னை P.U.C. 7. தமிழ் வித்துவான் - புலவர் வகுப்புகள். 8. கைத்தறி நெசவு. 9. விவசாயம். 10. ஓவர்சியர். 11. போஸ்டல் கிளார்க். 12. போஸ்ட்மேன். 13. கிராம மணியம்-கர்ணம். 14. ஹோமியோபதி டாக்டர். 15. பேசிக் ஆங்கிலம். 16. பிரி-மெட்ரிக். 17. சர்வீஸ் கமிஷன். 18. அக்கவுண்டன்ஸி. 19. S.S.L.C. (XI Std.) எட்டாம் வகுப்பு, III, IV, V படிவம் வாசித்துள்ள மாணவர்களும், மாணவியர்களும் S.S.L.C. தேர்வில் கலந்து கொள்ளலாம். 20. D.Com., B.Com., M.Com., (S.S.L.C. (அ) P.U.C. தேறியவர்களும், தவறியவர்களும் கலந்து கொள்ளலாம்). 21. கம்பாசிடர்.

மேற்கண்ட வகுப்புகளின் முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

—தமிழகத்தின் தனிப்பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்—

## ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்,

ரிஷிவந்தியம் S. O. தென்ஆற்காடு ஜில்லா, தென்இந்தியா.

கிளைகள்: சென்னை, சிலோன், மலேசியா, தென் ஆப்பிரிக்கா, மாரிஷஸ்.

# பொருளாதாரச் செழிப்புக்கு வழிவகுக்கும் திட்டம்

தமிழகம் செழிப்படைவதற்கு உதவும் நீண்ட காலத் தொலைநோக்குத் திட்டத்தின் ஓர் அங்கமாக ஐந்தாண்டுத் திட்டத்தைத் தமிழகம் அணுகுகிறது. மாநில திட்டக்குழு, 1984-ஆம் ஆண்டுடன் முடியக்கூடிய 12 ஆண்டுக் காலத்திற்கு வரைவுத் திட்ட அமைப்பைத் தயாரித்துள்ளது. இத் திட்டம் மற்றவைகளுடன் கூட, கீழ்கண்ட முக்கிய இலட்சியங்களை எய்திட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

(அ) நிலையான விலைவாசியில், மாநிலத்தின் தனி மனித வருவாயை இரட்டிபாக்குதல்.

(ஆ) ஏழ்மை மற்றும் சமுதாய-பொருளாதார ஏற்றத் தாழ்வை அகற்றுதல்.

(இ) வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே போக்குவதுடன், வேலைவாய்ப் பின்மையைக் குறைத்தல்.

(ஈ) மாநிலத்தின் சமுதாய - பொருளாதார அமைப்பைக் காலத்திற்கு ஏற்ற வகையில் நவீனப் படுத்தல்.

பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக-நீதியுடன் கூடிய நல் வாழ்விற்கும் வழி இலட்சியங்களின் அடிப்படையிலேயே, மைய அரசிடம் அளித்துள்ள வரைவு ஐந்தாவது திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மாநில திட்டக்குழு, 1972 முதல் 1984-ஆம் ஆண்டு வரையான காலத்திற்குக் தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரிக்க, தொழில் மற்றும் பல்வேறு வாழ்வுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பிரதிநிதிகள் அடங்கிய பல செயல் அணிகளை (Task Forces) அமைத்தது. அச்செயல் அணிகள் அளித்த அறிக்கையின் அடிப்படையில், தமிழ் நாட்டிற்குரிய நீண்டகால தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் மாநில திட்டக்குழு ஈடுபட்டுள்ளது. இப் பணியின் அடிப்படையில், ஐந்தாவது திட்ட காலத்துக்குரிய ஒரு வரைவுத் திட்டத்தையும் மாநில திட்ட குழு தயாரித்து அதை 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ் நாடு அரசுக்கு அனுப்பியது. மாநில திட்டக்குழுவின் செயல் அணிகளுடைய செயலாளர்களும் அடங்கிய பல்வேறு அலுவல் குழுக்களில் (Working Groups) அரசு மட்டத்தில் இத் திட்டம் கலந்து பேசப்பட்டது. மாநில திட்டக்குழு அளித்த திட்டம், அலுவல் குழுக்களின் பரிந்துரை ஆகியவற்றின் அடிப்படையில் தற்பொழுது அளிக்கப்பட்டுள்ள வரைவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

## மாவட்டத் திட்டங்கள்!

கீழ்மட்டத்திலிருந்து திட்டமிடவேண்டியது மிகவும் இன்றியமையாதது என்ற கருத்தைக் கொண்டுள்ள தமிழ் நாடு அரசு, மாநிலத்தில் உள்ள 23 வளர்ச்சி மாவட்டங்களுக்கும் உரிய மாவட்டத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான நிருவாக அமைப்புகளை ஏற்படுத்தியது. இப்பணியின் முழுப் பொறுப்பையும் மாநில திட்டக் குழு ஏற்றுள்ளது. இந்த மாவட்டத் திட்டங்களை, கிடைக்கக் கூடிய வருவாய் அமைப்பிற்குள்ளும், இறுதியாக அனுமதிக்கப்பட்ட மாநிலத் திட்டத்திற்குள்ளும் அடங்கச் செய்யும் பணி அண்மையில் துவக்கப்பட்டுள்ளது. மையத் திட்டக் குழுவுடன் கலந்து பேசி, மாநிலத் திட்டம் பற்றிய இறுதி முடிவு எடுக்கப்பட்ட பின், மாவட்டத் திட்ட அமைப்புக்களுடன் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் துவக்கப்படும். இதன் பயனாய், மாநிலத் திட்டத்துடனும், தேசியத் திட்டத்துடனும் ஒருங்கிணைந்த மாவட்டத் திட்டங்கள், ஐந்தாவது திட்ட காலத் துவக்கத்தில் நிறைவேற்றுவதற்குத் தயாரான நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நல்வாழ்வு அளிப்போம் !

தனி மனித வருவாய் என்ற அளவில் பொருளாதார வளர்ச்சியை அளவிடுதல் அவசியமாகும்; ஆனால் அது பொது மக்களின் நல்வாழ்வ

வளர்ச்சியை எடுத்துக்காட்டும் போதிய அறிகுறியாக அமையாது. பொது மக்களுக்கு அதிக அளவில் நல்வாழ்வு கிடைக்கச் செய்வதே நமது இறுதி இலட்சியமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கின்றோம். அதிக அளவு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்ற முக்கிய இலட்சியத்திற்கு உதவிடும் அளவிற்கே, தனி மனித வருவாய் வளர்ச்சி பயன் தரத்தக்கது.

ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்.
ஏழ்மையைப் போக்குதல்.
வேலையில்லாமையை அறவே நீக்குதல்.

ஆகியவையே நிகர பொருளாதார வளர்ச்சி, பொது மக்களின் சமூக நல்வாழ்வு ஆகியவைகளை அதிகப்படுத்தக் கூடிய முக்கிய கருவிகளாகும்.

### வேலை வாய்ப்பைப் பெருக்கிடுவோம்!

வேலை வாய்ப்பு அளிப்பதென்பது திட்டத்தின் முக்கிய இலட்சியங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று தமிழ் நாடு விரும்புகிறது. வேலை வாய்ப்பில்லாத கிராமபுற மக்கள், வேலை வாய்ப்பில்லாத படித்தவர்கள் ஆகியவர்களின் தொகை அதிகமாகி வருவது, சமூகப் பொருளாதார உறவின் அமைப்பையே உடைத்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது! சாலைகள், வீட்டு வசதிகள், குடிநீர் வழங்கல் ஆகிய இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை உருவாக்கிட வல்ல மாபெரும் வேலை வாய்ப்பு நல்கும் திட்டங்கள், நம்முடைய மேம்பாட்டு முயற்சிகளில் இணைக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டின் வருவாய் குறைந்த நிலையிலேயே இருப்பதால் சாலைகள், வீட்டு வசதிகள், குடி நீர் வழங்கல் ஆகியவற்றிற்காக ஓரளவிற்கே ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒதுக்கீடுகளை அதிகப்படுத்த மைய அரசு, அதிக வருவாய் அளித்திட வேண்டும்; இந் நோக்கத்தின் அடிப்படையில் மைய அரசு தன்னுடைய உற்பத்திக் கொள்கைகளைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.




### ஏழ்மையை அகற்றுவோம்!

ஏழ்மையை அகற்றுவது ஒரு முக்கிய இலட்சியமாகும்! இது தனி ஒரு திட்டத்தினால் இயலக் கூடியதல்ல! திட்டங்களின் முழுக் கட்டுக்கோப்பின் பயனாகவே இந் நிலை மலரும்! இந்நிலை மலருவதற்குப் பல்வேறு தன் முயற்சித் திட்டங்களைத் தமிழ் நாடே முதன் முதலாகத் துவக்கியுள்ளது! நகர்ப்புற ஏழைகளின் வருவாயைப் பெருக்கிடுவதற்கு மறைமுகமாக வழி செய்யும் மாபெரும் குடிசை மாற்றுத் திட்டத்தைத் தமிழ் நாடு துவக்கியுள்ளது. கிராமங்களில் வீடுகட்டிக் கொள்ள இடமில்லாவதர்களுக்கு 4·23 இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை அளித்துள்ளதும், சாகுபடி செய்து வரும் குத்தகைதாரர்களை நில உரிமை உடையவர்களாக ஆக்கியதும், 3·29 இலட்சம் நிலமற்ற ஏழைகளுக்கு 6·41 இலட்சம் ஏக்கர் நிலங்களைப் பட்டா செய்து கொடுத்ததும் நான்காவது திட்டக் காலத்தில் தமிழ் நாடு மேற்கொண்ட முன்னோடித் திட்டங்களாகும். இவ்வகையில் மேலும் தீவிரமாகச் செயல்பட ஐந்தாவது திட்டம் வழிவகுக்கும். ஏற்றத் தாழ்வைக் குறைத்தல், ஏழ்மையைப் போக்குதல் ஆகிய நோக்கத்தின் அடிப்படையில், பிற்பட்ட இனத்தவரின் நல்வாழ்விற்கு வழிசெய்யும் திட்டங்களுக்குத் தமிழ்நாடு முக்கியத்துவம் அளிக்கிறது. பிற்பட்ட இனத்தவரின் நல்வாழ்விற்கான திட்டங்களில் ஐந்தாவது திட்டத்தில் 91·56 கோடி ரூபாய் மொத்தத்தில் செலவிடப்படும். தமிழ் நாட்டின் ஏழைக் குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச் சத்துணவுப் பற்றாக்குறையைப் போக்கிட 5,000 குழந்தைகள் காப்பகம், 1,000 ஊட்டச் சத்துணவு மறுவாழ்வு நிலையங்களை ஏற்படுத்தி, தமிழ் நாடு ஊட்டச் சத்துணவு திட்டத்தை நிறைவேற்றும்.

### உணவு உற்பத்தியை உயர்த்திடுவோம்!

வரைவு ஐந்தாவது திட்டம் 67·00 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி, 3·50 இலட்சம் மெட்ரிக் டன் பருப்பு உட்பட மொத்தம் 90·50 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி என்னும் இலட்சியத்தை எய்திடுவதற்குத் தலை

யாய முக்கியத்துவம் அளிக்கிறது.

மின்விசைக்கு முதலிடம் !

வருவாய் ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் மின்விசை மற்றும் பாசனத்திற்கே மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பெற்றுள்ளது. மூலப்பொருள்களையும், இதர பகுதிகளிலிருந்து பெறப்படும் இடைநிலைப் பொருள்களையும் பதப்படுத்துவதற்கு மூலகம் மற்றும் இதர ஆதாரங்கள் மாநிலத்தில் குறைவாக இருப்பதால்—உள்ளூர்த் தொழிற்சாலைகளுக்கு உதவிடுவதற்குப் போதிய மின்வசதி அளித்திட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அது போலவே, ஏறத்தாழ மாநிலத்தின் பாசன ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டுவிட்டதால், நாம் பெருமளவில் நில நீரையும், அதை வெளியே கொண்டு வரும் பம்புசெட்டுகளுக்கு மின்சாரத்தையும் நம்பி இருக்க வேண்டியுள்ளது. மின்விசை உற்பத்திக்கும், அதை வழங்குவதற்கும் ஐந்தாவது திட்டத்தில் 440 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பாசனத்திற்காக 188 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதில், தற்பொழுதுள்ள பாசனத் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள உதவும் திட்டங்களுக்கும், பாசன நிருவாக மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் ஏறத்தாழ 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்கு 61 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டின் உள் அமைப்பு மேம்பாடு, வேலைவாய்ப்புஆகியகண்ணோட்டத்தின் அடிப்படையில் சாலைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறச் சாலைகளுக்கு-குறிபாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 5 ஆண்டுகளுக்கு 55கோடிரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற குடிநீர் திட்டம் 82 கோடி ரூபாய் செலவில் அமையும். கல்வி உட்பட இதர சமூகப் பணிகள், மொத்த ஒதுக்கீட்டில் 24 சதம் அளவைப் பெற்றுள்ளன.

## ஓவியரா? வைத்தியமா?

அண்மையில் காலமான உலகப் புகழ் பெற்ற மார்டன் ஓவியர் பிக்காசோவிடம் மூடப் பழக்க வழக்கங்கள் பல மண்டிக் கிடந்தன. அவற்றில் ஒன்று இது.

அவர் முடிவெட்டிக் கொள்ளாமலேயே பல ஆண்டுகளைக் கழித்தார். ஒருவர் முடிவெட்டிக்கொண்டால் அவரது வலுவேபோய்விடும், எதிரிகள் அவரை வெற்றி கொள்வார்கள் என்னும் மூடக் கொள்கை ஐரோப்பாவில் நிலவி வந்தது. தப்பித் தவறிச் சலூனுக்குச் சென்று முடிவெட்டிக் கொள்பவர்கள், தங்களது முடிகளைத் தாங்களே எடுத்துக் கொண்டு வந்து அழித்துவிடுவார்கள். ஏன் என்றால் எதிரிகளின் கையிலே அவை சிக்கினால் முடியின் சொந்தக்காரர்களுக்கு ஆபத்து நேரும் என்பது கருத்து. அதனால் பிகாசோ, சலூனுக்குச் செல்வதில்லை. முடியை வெட்டுமாறு தனது மனைவியிடம் சொல்வார்; அந்த அம்மையாரும் அவ்வாறே செய்வார்; மனைவி அவ்வாறு செய்யாவிட்டால் தாமே கத்தரிக்கோல் கொண்டு தமது முடியை வெட்டிக் கொள்வார்; வெட்டப்பட்ட உரோமங்களை எல்லாம் அவரே எடுத்துச் சென்று அழித்துவிடுவார். இந்த வழக்கத்தை, பிக்காசோ மிக நீண்ட காலத்திற்குக் கைக் கொண்டிருந்தார். பிறகு, ஸ்பானியரான ஒரு முடிவெட்டும் தொழிலாளி பிகாசோவின் நம்பிக்கைக்கு உரியவராகவே, அவரிடம் முடி வெட்டிக் கொள்ளுவார். அப்போது கூட அந்தத் தொழிலாளியின் கத்தரியைப் பயன்படுத்த அனுமதிப்பதில்லை. தாம் சொந்தமாக வைத்திருக்கும் கருவியையே கொடுத்துப் பயன்படுத்தினார். முடிவெட்டி முடிந்ததும், உரோமக் கற்றைகளை பிக்காசோ, மிகுந்த கவனத்துடன் எடுத்து அழித்து விடுவார். பிகாசோவின் இது போன்ற பல நடவடிக்கைகளைக் கவனித்த ஒரு விமரிசகர் "அவர் ஓர் அரைப் பைத்தியம்" என்று கூறினர்.

திட்டத்தின் பரிமாணம் !

மாநில ஐந்தாவது திட்டத்தின் பரிமாணம்.

(அ) மாநிலத்தேவைகள்.

(ஆ) திட்டங்களைச் செயல் படுத்தும்வேகம்.

(இ) கிடைக்கும் வருவாய் ஆதாரங்கள்.


ஆகிய மூன்றின் அடிப்படையில் அமைகிறது. கடந்த நான்கு திட்டங்களில், நாம் செயலாற்றிய வேகம் பின்கண்டுள்ளவாறு உள்ளது.

| | ரூபாய் கோடியில் |
|---|---|
| முதல் திட்டம்.. | 80 |
| இரண்டாவது திட்டம்.. | 188 |
| மூன்றாவது திட்டம்.. | 348 |
| மூன்று ஆண்டுத் திட்டங்கள்.. | 267 |
| நான்காவது திட்டம்— | |
| (1) திட்டமிட்டது | 624 |
| (2) அனுமதிக்கப் பட்டது | 519 |
| (3) எதிர்பார்க்கும் செலவு | 557 |
| 1973-74-ஆம் ஆண்டுத் திட்டத்தில் எதிர்பார்க்கும் செலவு | 134 |

திட்டத்தின் பௌதீக நிலை அடக்கம் வளர்ச்சியின் தேவைக்கு ஏற்ப அமைந்துள்ளது. பண முதலீட்டின் அளவினை வைத்து மட்டுமே திட்டத்தை அளவிடமுடியாது. உண்மையான உள்ளடக்கம் கணிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டால்தான், ஐந்தாவது திட்டத்திற்கு, திட்ட அளவை இருமடங்காக்குதல் என்ற சூத்திரம், (Formula) பொருள் உடையதாக இருக்கும். இக்கருத்தின் அடிப்படையில் பணவீக்கத்தை ஈடுகட்ட, நான்காவது திட்ட அளவை விட 100 சதம் அதிகமாக ஒதுக்குவது அவசியமாகும். இதன் அடிப்படையில்-தற்பொழுதுள்ள விலைவாசியில்—ஐந்தாவது திட்ட அளவை 1,500 முதல் 1,600 கோடி ரூபாய் எனக் கொள்ளுதல் பொருத்தமானதாக இருக்கும்.

### 1,500 கோடி கேட்பது நியாயமா?

திட்டங்களை 1973-74- ஆம் ஆண்டில் நிறைவேற்றும்வேகத்தின் அடிப்படையிலும், திட்டத்தின் அளவு பற்றிய பிரச்சினையை மறுவழியில் அணுக வேண்டும். கிராமப்புற சாலைகளுக்கான ஒதுக்கீடு, நேரடியாக மைய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுவதும்,—எதிர்காலத்தில் மாநிலத் திட்டத்தின் ஓர் அங்கமாகச் செயல்பட விருப்பதுமான—வேலைவாய்ப்புத்திட்டம், நமது மின்விசை, குடிநீர்த் திட்டங்களுக்காக நிறுவனங்கள் அளிக்கும் நிதி ஆகியவைகளைச் சேர்த்து, இந்த ஆண்டின்ஒதுக்கீடு 160 கோடி ரூபாயாக இருக்கும்.



நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டின் ஒதுக்கீடு 80 கோடி ரூபாயாக இருந்தது. ஒதுக்கீட்டில் ஆண்டு உயர்வு சராசரியாக 20 சத அளவில் இருந்துள்ளது. இதே அடிப்படையில், 1974—75-ஆம்ஆண்டிற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டியது இயலக் கூடியதும், தேவையானதுமாகும். இதே அடிப்படையில் திட்டத்தின் நடு ஆண்டிற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு தேவைப்படுகிறது. இது, மீண்டும் திட்டத்திற்கு 1,500 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்பதை நியாயமென நிரூபிக்கிறது.

மாநிலத் திட்டக் குழு, மூலதனச் செலவு உற்பத்தி விகிதம் பற்றியும், வேலை வாய்ப்புப் பெருக்கம் பற்றியும் விரிவாகக் கணக்கிட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது, தமிழ் நாட்டிற்கு 1974 முதல் 79 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு மொத்தம் 3,900 கோடி ரூபாய் மூலதனமிட வேண்டும் என்று மாநிலத் திட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. இதில் ஏறத்தாழ 1,600 கோடி ரூபாயைத் தற்பொழுது மாநில அரசுத்துறை திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ள திட்டங்களுக்காகச் செலவிட வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு கணித்துள்ளது. (மாநில திட்டக் குழுவின் சூத்திரப்படி இத்தகைய திட்டங்கள் பல, மைய அரசுத்துறைத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுமானால், மாநில அரசுத்துறை ஒதுக்கீட்டை 1,300 கோடி ரூபாய் எனக் காட்டலாம்). இவைகள் தற்பொழுது மாநில திட்டத்தில் காட்டப்பட்டுள்ளதால் திட்டத்தின் அளவு ஏறத்தாழ 1,500 கோடி ரூபாயை அடைகிறது. இக்கண்ணோட்டத்தின் அடிப்படையிலும், மாநிலத்தின் வளர்ச்சித் தேவைக்கு ஏற்பவும் நாங்கள் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 1,532 கோடி ரூபாய் ஒதுக்கீடும் 1974—75-ஆம் ஆண்டிற்குரிய ஆண்டுத் திட்டத்திற்கு 202 கோடி ரூபாய் ஒதுக்கீடும் கேட்டுள்ளோம்.

### மைய அரசின் உதவி கேட்கிறோம்!

பொதுத்துறையின் தேசியத் திட்டம் 34,800 கோடி ரூபாய் அளவில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 15,600 கோடி ரூபாய் மாநில அரசுத் துறையில் அமையும். மீதி19,200கோடிரூபாய் மைய அரசுத் துறையில் அமையும். மைய அரசு, முதலீடு செய்வதில் நியாயமான பங்கினை மாநிலத்தில் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு எதிர்பார்ப்பது நியாயமானதாகும். இவ்வாறு செய்யப்படாவிட்டால் மாநிலத்தில் மேலும் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு மிகவும் இடையூறு ஏற்படும். கீழ்க்கண்டவைகள் மைய அரசுத்துறையின்கீழ் உள்ள — துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய—முக்கிய திட்டங்களாகும்.

1. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டி, அதிலிருந்து கிடைக்கும் அதிகப்படியான பழுப்பு நிலக்கரியைக் கொண்டு 1,000 மெகாவாட் மின் சாரம் உற்பத்தி செய்யக் கூடிய அனல் மின் நிலையம் ஏற்படுத்துதல்.
2. கரையோரத் துறைமுகமாகக் கடலூரை மேம்படுத்துதல்.
3. சேலம் இரும்புத் தொழிற்சாலை அமைக்கும் பணிகளைத் தீவிரப்படுத்துதல்.
4. கல்பாக்கம் அணுமின்சார நிலையத்தை விரிவுபடுத்தல்.
5. தூத்துக்குடியில் மற்றுமொரு அணுமின் நிலையம் அமைத்தல்.
6. காவிரி கழிமுகப் பகுதியிலும், தமிழ் நாட்டின் கடற்கரை யோரப் பகுதிகளிலும் எண்ணெய் வள ஆய்வுப் பணிகளைத் தீவிரப்படுத்தல்.
7. சென்னை — திருச்சிராப்பள்ளி—மதுரை—தூத்துக்குடி இருப்புப் பாதையை அகன்ற வழிப் பாதையாக மாற்றுதல்.
8. கரூர் — திண்டுக்கல் இடையே புதிதாக ஒரு அகன்ற வழி இருப்புப் பாதை அமைத்தல்.
9. சென்னைப் பெருநகர் பகுதியில் நிலைமாற்று முறைகளைப் பெருமளவில் கட்டுதல்.
10. சேதுசமுத்திரம் திட்டத்தை நிறைவேற்றுதல்.
11. தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் அமைத்தல்.
12. தூத்துக்குடியில் தொழில் வள எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை ஏற்படுத்தல்.
13. காவிரி கழிமுகப் பகுதியில் ஓர் இராசயன உர ஆலை அமைத்தல்.
14. பாதுகாப்புத் தொழிற்சாலைகளை நிறுவுதல்.

(இந்திய அரசின் திட்டக்குழுவிடம் கொடுத்துள்ள தமிழ்நாட்டிற்கான ஐந்தாவது திட்டக் குறிப்பில் உள்ள முன்னுரையின் தமிழாக்கம்).

[தமிழாக்கம்: ஆர்.எம்.]

# விரைந்து முன்னேறும் வெள்ளி விழாச் சீரூர்



உலகின் அச்சாணி எது ?

உழவர் பெருங்குடி மக்களை ஒருங்கே பெற்ற கிராமம் தானே? கிராமமே இல்லை என்றால், நகரத்தின் நடப்புகள் கிரமமாக நடைபெற முடியுமா? உலகின் உயிர்நாடியாக விளங்கும் கிராமங்கள் வளமும் நலமும் பெற்றிடத் தமிழக அரசு பல வகையிலும் பெருந்துணை புரிந்து வருவதை தமிழகம் நன்குணரும்.


செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஒரு குக்கிராமம். பெயர்: திம்ம சமுத்திரம் (சமுத்திரத்துக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.) இரண்டாண்டுகளுக்கு முன் இந்தக் கிராமத்துக்குப் போய் வருவதே பெரும்பாடாயிருந்தது. ஆனால், இன்று? அந்த நிலை அப்படியே மாறி, அந்தக் கிராமம் மறுமலர்ச்சி பெற்று விளங்குகிறது!

குடி தண்ணீர் வசதியோ, நல்ல சாலைகளோ, தெரு விளக்குகளோ இல்லாத திம்ம சமுத்திரம் இன்று அனைத்தையும் பெற்று அழகாய்க் காட்சியளிக்கிறது.

கிராமத்துக்குள் எங்களை ஏற்றிச் சென்ற ஊர்தி, சாலையில் தங்கு தடையின்றிச் செல்வதைப் பார்க்கிறோம்; தெருக்களில் மின்விளக்குகளை ஏந்திய தூண்கள் நிற்பதைக் காண்கிறோம்; தண்ணீர் இல்லாமல் பெண்கள் கண்ணீர் வடிக்கத் தேவையில்லை' என்று சொல்வது போல, மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டிருப்பதையும், அதற்கருகே பெண்கள் குழாய்களில் உடனுக்குடன் தண்ணீர் பிடித்துச் செல்லும் காட்சியையும் பார்க்கிறோம்; மனம் நிறைகிறது; மகிழ்ச்சி பொங்குகிறது!

அழகிய தெருக்கள்—ஆடவர் மகளிர் ஏர்த்தொழிலுக்குச் செல்லும் காட்சி—சிறுவர் சிறுமியர் ஏடு தூக்கிப் பள்ளி செல்லும் பாங்கு அனைத்தும் பார்த்து மகிழ்தற்குரியது.

விடுதலை வெள்ளி விழாவினைக் கொண்டாடும் முறையில், 'வெள்ளி விழாச் சீரூர்' என்ற பெயரில் எல்லா வசதிகளும் நிறைந்த புதுமைக் கிராமங்கள், மாவட்டங்கள்



தோறும் தோற்றுவிக்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்துக்கு ஒன்று வீதம் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று, குடிநீர், சாலைகள் அரிசனங்களுக்கான வீட்டு மனைகள், தெரு விளக்குகள், வடிகால், பள்ளிக்கட்டடங்கள் முதலிய நிலையான வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

செங்கை மாவட்டத்தில் 27 ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 27 வெள்ளி விழாச் சீருர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றன. அவை இன்று புதுப் பொலிவு பெற்றுவரும் பாங்கினைப் பார்க்கிறோம்.

திம்ம சமுத்திரத்தில் கடந்த ஆண்டு விடுதலைநாள் விழாவில் தொடங்கப்பெற்ற இந்தச் சீரமைப்புப் பணிகள், இவ்வாண்டு விடுதலை நாள் விழாவில் முடிக்கப் பெற்று முழுமை பெற்றுள்ளன.

பழைய கிணறு ஒன்றில் ஆழத் துளை போட்டு மோட்டார் பொருத்தி குழாய் மூலம் கிராமத்திற்கும், காலனிக்கும் குடி தண்ணீர் வழங்க ரூ. 20,500 மதிப்பீட்டில் வசதி செய்யப் பெற்றுள்ளது; ரூ. 3,000 மதிப்பீட்டில் குழாய் மதகும் சீரணித் தொண்டர்களால் சாலையின் இருமருங்கிலும் 1,000 மீட்டர் நீள வடிகால் ஒன்றும் வெட்டப்பட்டுள்ளன. இவை மட்டுமா? இருளைக் கிழிக்கும் 20 தெரு விளக்குகள் கூடுதலாகப் போடப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளிக் கட்டடம் ஒன்று ரூ. 1,500 செலவில் பழுதுபார்க்கப் பட்டுப் புதுமை பெற்றுள்ளது. ஏழை எளிய அரிசன மக்களுக்கு 10 வீட்டு மனைகள் வழங்கிடவும் தக்க ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன.

திருபெரும்புதூர், காஞ்சிபுரம், பூவிருந்தவல்லி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் வெள்ளி விழாச் சீருர்ப் பணிகள் அண்மையில் உள்ளாட்சி அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றுள்ளது.

பூவிருந்தவல்லியில் வெள்ளி விழாச் சீருர் கிராமமாக நேமம் என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப் பெற்று, அங்கே ஒரு மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டியும், மேலும் ஒரு பள்ளியும் கட்ட வேலைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. அரிசனங்களுக்கான 45 வீட்டு மனைகள், 1.40 கி.மீ. சாலைகள் முதலான வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

இதேபோன்று திருபெருந்தூரிலும் மொலசூர் என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப் பெற்று அங்கு மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. தண்ணீர்க்குழாய்களை விரிவாக்கவும் சிறிய மேல் நிலை நீர்த் தொட்டியும், கழிவிடமும், பள்ளிக் கட்டடமும் கட்டவும் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் விடுதலை வெள்ளி விழாவினையொட்டி நினைவுக்கல் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நினைவுக் கல்லின் மதிப்பு ரூ. 1,500. இது உள்ளூர் மக்கள் நன்கொடையால் வழங்கப்படுகிறது. இத்தகைய நினைவுக்கற்கள் காஞ்சிபுரம், சோழவரம், திருபெரும்புதூர்,மாதவரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் நாட்டப்பட்டுள்ளன. இந்த நினைவுக்கற்களில் காந்தியடிகளின் பொன் மொழிகள் பொறிக்கப்பெற்றுள்ளன.

இப்படிப் படிப்படியாக, ஒவ்வொரு கிராமமும் வேளாண்மை, கல்வி, மருத்துவம், தொழில், சாலை, மின் வசதி போன்ற பல துறைகளில் முன்னேறிக் கொண்டு வருகின்றன. வெள்ளி விழாச் சீருர் என்ற இந்த அரிய திட்டம் கிராமங்கள் வளம் பெறவும், மக்கள் வாழ்வு நலம் பெறவும் துணை நிற்கும் என்று துணிந்து கூறலாம்.

ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் அமைந்திட ஏழை எளிய மக்கள் நிறைந்த கிராமங்கள் ஏற்றம் பெற்றிட—அண்ணல் காந்தியடிகள், பேரறிஞர் அண்ணா போன்றோர் கண்ட கனவுகள் இன்று நனவாகும் நன்னாள் நம்மை நெருங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த நல்ல செயல்களுக்குக் கைகொடுப்போம்; கரங்குவிப்போம்!

—பி.வி.ஜி.

# புன்னகை

சு. சந்திரசேகரன்

விவசாயப் பட்டப்படிப்பைக் கோவைக் கல்லூரியில் முடித்த நான், என் படிப்பின் பயனை எங்கள் சொந்தத் தோட்டத்திலேயே பயன்படுத்த முடிவு செய்தேன்.

நான் எங்கள் தோட்டத்து மின்சார மோட்டாரை இயக்கினேன். அருவிநீர் கொட்டியது போன்று வீழ்ந்த நீர், வாழ்க்கையில் பல்வேறு இடையூறுகளைக் காட்டுவதுபோல் குழியும், மேடுமாயுள்ள வாய்க்கால் வழியாகச் சென்று புதிதாகப் பயிரிடப்பட்டிருந்த 'கருணா' நெல் வயலை அடைந்தது.

முத்தி நீர்த்தொட்டி அருகே தண்ணீர்க் குடத்தை எடுத்து அசையும் வாழை இலைபோல ஒய்யாரமாக நின்றுகொண்டிருந்தாள். களிமண் பானையின் நிறத்திற்கும் அவளுடைய மையிருள் உடம்பிற்குந்தான் எத்துணைப் பொருத்தம்!

சென்ற வாரம் எங்கள் அப்பா வாங்கிவந்த கரம்பைப் பசுவிற்குத் தீவனம் போடச் சாலைக்குச் சென்றேன். வழியில் இரட்டைப் பானைகளைத் தூக்க முடியாதபடி முத்தி சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். வேலைக்குச் சென்றுகொண்டிருந்த பெண்களில் ஒருத்தியைப் பார்த்து, ''ஏய் முருகாயி, இந்து ராவே'' என்று தன் பானையைத் தூக்கிவிடத் தன் ஒய்யாரக் குரலை உயர்த்தினாள். ' ''நீக்கு ஏமி, பணி' என்று பதில் குரல் கொடுத்து விட்டு வழி நடந்தாள். மற்றவர்களும் அப்படியே சென்றனர். வேலைக்குப் போகும் அவசரம் அவர்களுக்கு.

நான் அவளிடம் சென்று ''என்ன முத்தி! நான் பானை



யைத் தூக்கி விடறேனே'' என்றேன்.

''சாமீ நீங்க தூக்க வேணும் சாமி. உங்க அப்பாரு கண்டாருன்னு ஏசுவாரு. நீங்க உயர்ந்த சாதி! நான் கீழ்ச் சாதி சாமி. நானு எங்க அம்மாவைக் கூட்டியாந்து ஆளுக்கொன்னு தூக்கிட்டுப் போறமுங்க''.

நான் விடவில்லை. ''தூக்கறியா இல்லையா?'' ஆத்திரம் என்னையறியாமல் பீறிட்டு வந்தது.

''சாதியாம், மண்ணுங்கட்டியாம், நாம் பிறக்கறப்ப சின்னச் சாதி பெரிய சாதின்னு போர்டு மாட்டிக்கிட்டா பிறந்தோம்? இல்லையே! பேசாம தூக்கு பிள்ளை'' என்று கூறியவாறு பானையைத் தூக்கி அவள் இடுப்பில் வைக்கும் அளவுக்கு வந்துவிட்டேன். அவள் சிரித்தவாறே அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டாள்; நான் பானையைத் தூக்கி எரிச்சலுடன் கீழே போட்டேன். பானை உடைந்து சிதறியது. இளம் உள்ளங்களின் கபடமற்ற வாழ்வைத் தடுக்கும் சமுதாய விதிச் சாக்கடையில் நான் உருளத்தான் வேண்டுமா? அலறித்துடித்தது எனது மனம்.

மற்றொரு நாள் எங்கள் ஊர்ப் பெரியவர் ஒருவர், தொட்டி நீரை மொண்டு குளித்துக் கொண்டிருந்தார். நான் அருகிலிருக்கும் மிளகாய் நாற்றுக்கு நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தேன். சேரிப் பெண்கள் என்று இழிதகையோர் கூறும் தமிழ்நங்கைகள் தொட்டியில் மண் பானைகளால் தண்ணீரை மொண்டு கொண்டிருந்தார்கள்.

''என்ன தம்பி... அக்கிரமமாப் போச்சு! நான் இங்கே குளிச்சிக்கிட்டு இருக்கேன். அவ அம்சம் தெரியாம தண்ணீரைத் தொட்டியில் மோக்கரு. இந்த நாய்களைத் தோட்டத்துக்குள்ள விடறதே தப்பு'' என்று பொரிந்து தள்ளினார் கிழவர்.

''என்னங்கய்யா, நீங்க ஒரு ஆள் குளிக்கறதுக்காக அவங்களை நாய் பேய்னு திட்ட நீங்களே! உங்களுக்கு எத்தனைதரம் சொல்றது?''

அவர் என் வாயை அடைக்கப்பார்த்தார். ''நீ சும்மா இரு தம்பி! உலகம் தெரியாத புள்ளை! அதெல்லாம் உங்க காலத்திலே வைச்சுக்க! இவளுகளை இனிமேல் நம்ம தோட்டத்தண்டையே விடப்புடாது'' என்றார்.

நான் அவருக்கு நிதானமாக விளக்கினேன். ''ஐயா அவங்க பானையைத்தானே தொட்டியில் விட்டாங்க! அந்தத் தண்ணி உங்க உயிரையா போக்கிடும்? நீங்க குளிக்கற அழுக்கையெல்லாம், சாதி பேதம் பாராமே துரோகிகளான மனித உசிரைக் காக்கும் பயிர் பச்சை கூட பேசாம ஏத்துக்குது. அது என்ன விளையவா மாட்டேங்குது? சாதி பேதமெல்லாம் வச்சிக்கக் கூடாது ஐயா!''

''அட சும்மா இரு சின்னத் தம்பி...நீயும் உன் அறிவுரையும்'' என்றவாறே துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு செருப்பை நீரில் கழுவினார். நான் தொடர்ந்தேன். ''ஐயா நீங்க கழுவுற செருப்பு அவ மாமன் ரங்கன் தைச்சது தானே! அதை எதுக்குப் போடறீங்க'' என்றேன்.

''விதண்டாவாதம் பேசாதே தம்பி...'' என்று இழுத்தவாறு அவர் நடையைக் கட்டினார்.

''அம்மா! அம்மா! என்று ஒருபக்கம் கரம்பைக் கன்றின் ஒலி. பால் கரக்கும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்தேன். வீட்டிற்குள் நுழைந்ததும் நுழையாததுமாக எனது 10 வயதுத் தங்கை ''அம்மா !அண்ணன் வந்திருச்சும்மா..முத்திப் பிள்ளைக்குப் பானையைத் தூக்கறேன்னு சொல்லி அவங்க பானையையெல்லாம் தொடுதும்மா'' என்றாள். என்னதான் அவள் ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்ற பாரதியின் பாடலை பள்ளிக்கூட வாத்தியார் தன்னுடைய இரட்டை நாடியில் எழுவது தரம் திரும்பத் திரும்பச் சொல்லிப் படித்திருந்தாலும் அது அவளுடைய இளம் உள்ளத்தில் ஏனோ பதியவில்லை! நானே இந்தத் தரங்கெட்ட சமுதாயத்தில் சிக்கிக் கொண்டு திணறும் பொழுது, அவள் என்ன செய்வாள் பாவம்!

அம்மா ஒரே ஒரு வார்த்தைதான் சொன்னாள். ''ஏண்டாப்பா சேகர், ஊருலே நாலு பேர் நாலு விதமாகப் பேசுவாங்க! இந்த வம்பெல்லாம் உனக்கு எதுக்கடா? அதான் ரேடியோவிலும், மேடையிலும், சாதியை ஒழிக்கணும், ஒழிக்கணும்னு எல்லோரும் பேசறுங்களேடா, அது போதாதா?'' என்ற தன் வழக்கமான பல்லவியை ஆரம்பித்து விட்டாள்.

என்னதான் இருந்தாலும் மகனின் உள்ள உணர்ச்சிகளைப் புரிந்து கொள்பவளல்லவா தாய்?

எங்கள் தோட்டத்திற்கு வேலைக்குவரும் ஏழைத்தாய்மார்களின் குழந்தைகளுக்கு என் அன்னை அவ்வப்போது, பால், சோறு முதலியவை கொடுத்து உதவுவது வழக்கம். ஏழைக் குழந்தைகளைக் கண்டால் என் அன்னைக்கு அவர்கள் மேல் ஓர் இனம் தெரியாத பற்று. அந்தக் கள்ளங்கபடமற்ற குழந்தைகளை எடுத்து முத்தமிடுவாள்.

இதைக் கண்டு ''எனக்கேற்ற என் தங்க அம்மா'' என்று நான் பாராட்டி வருவேன்.

ஒருநாள் மாலை ஏரை அவிழ்த்துவிட்டு வீட்டுக்கு வந்தபொழுது அம்மாவின் குரல் அப்பாவின் குரலோடு மெதுவாக மோதியது.

''என்னங்க...நம்ம சின்னத் தம்பிக்கு வயசு ஆகுது. வெறசா ஒரு பொண்ணைப் பாருங்க''

''ஆமாமா ... நான் பார்த்துத்தான் கிடக்கு! நீயே பாரு! அம்மா ஆச்சு, பிள்ளை ஆச்சு.

''நம்ம பிரசிடெண்டு முனிசாமி தலைமையிலே நடந்த ஒரு கூட்டத்திலே கூட வரதட்சிணைக் கொடுமையைப் பத்திப் போடுபோடுன்னு போட்டானே உன் மவன். நம்ம பய சாதியிலே அதானே முக்கியம். என்னமோம்மா, உன் பயல் காலேஜுக்குப் போனதிலே இருந்து புத்தி வேற பக்கம் போயிருச்சு. உலகத்தோட ஒட்டமாட்டேன்னு குதிச்சிக்கிட்டு இருக்கான். என்னமோ—எனக்குப் பிடிக்கலை! நீயே அவனைக் கேட்டு முடிவு செய்'' என்று தப்பித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வருவதைப் போல் இருந்தது. நான் அப்பொழுதுதான் வீட்டிற்குள்

நுழைவதைப் போலே நுழைந்தேன்.

அன்று இரவு முழுவதும் 'திருமணம்' பற்றிய பேச்சுத்தான் எனக்கும் அம்மாவுக்கும். ''அம்மா! என்னைப்பத்தித் தான் உனக்குத்தெரியுமே? நான் கலப்பு மணந்தான் செய்யப் போறேன். எப்படியோ நீ தான் உதவி செய்யனும்'' என்றேன்.

''தம்பீ.... சீர்திருத்தம், கலப்பு மணம்னு ஆச்சுன்னு நம்ம குடும்ப கதி என்ன ? ஊருக்குள்ளே தலை காட்ட முடியுமா? சொந்த பந்தம் அத்துப் போகுமே! அதுவும் நீ முத்தாளைக் கட்டப் போற தாச் சொல்றே''—அழுது புலம்பினாள் அன்னை.

என் காலில் விழுவதற்கு வேண்டுமானாலும் தயாராயிருந்தாள் என் அன்னை. அவளைச் சொல்லி என்ன செய்ய?

இந்தத் திருமணப் பேச்சு இன்று நேற்று நடப்பதல்ல! தந்தைக்குத் தெரியாமல் அம்மாவிடம் கடந்த ஒரு வருடமாகவே என்னுடைய பிரச்சினைக்காக வாதாடிய வண்ணமே இருக்கின்றேன்.

காலம் வந்தது. ஆயிரம் இருந்தாலும் மகனின் ஆசையை எந்தத் தாய்தான் வேரறுப்பாள்? தந்தைக்குத் தெரியாமல் முடிவில் சம்மதமும் பெற்றுவிட்டேன்.

கடந்த ஈராண்டுகளாக முத்தாளுக்கு நான் செய்த உபதேசங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. கல்வி கற்றோர்கள் பல பேரிடமே இந்நாளில் சாதி உணர்வு இன்னும் தொத்திக் கொண்டிருக்கும் பொழுது, முத்தாளைப் போன்ற கல்வியறிவில்லா ஏழைப் பெண்ணின் உள்ளத்தில் பதிந்துபோன சாதி உணர்வை, ஏற்றத் தாழ்வு உணர்ச்சியைப் போக்குவதென்றால் எனக்கு எவ்வளவு சிரமம் ஏற்பட்டிருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

நான் வானத்தை நோக்கினேன். எங்கோ இரண்டு ஜோடிப் புறுக்கள் பறந்து சென்றன. நீலவானம் ஆழ்ந்த நீலமாகியது. மறுநாள் எனக்கும் தேன்மணி ரங்கன் மகள் முத்தாளுக்கும் பதிவாளர் அலுவலகத்தில் திருமணம். ''துன்பத்திலே தான் இன்பம் இருக்கின்றது'' என்ற வாக்குப்படி எனது மனம் துணிந்துவிட்டது.

''காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும்'' என்று சொன்ன அறிஞர் அண்ணாவின் ஆன்மா நிச்சயம் மகிழும் என்ற உறுதியோடு என் வீட்டை நோக்கி நடந்தேன்.

எங்களைக் கண்ட என் தந்தையின் முகம் முத்தாளின் முகத்திற்குப் பதில் சாய்ந்தது. ''உலகில் நிலையானது குணம்தான்'' என்ற மகாத்மாவின் அறிவுரையை அவர் நிச்சயம் ஏற்றுக் கொண்டு விட்டார் என்றே எண்ணுகின்றேன். இருப்பினும் சமுதாயச் சட்டங்களைக் கண்டு அவர் பயப்படாமல் எங்களை உடனே ஆதரித்தது எனக்கு ஆச்சரியத்தையே அளித்தது. அவர் என்னை நோக்கி ஒரு வெற்றிப் புன்னகை பூத்தது எனது இதயத்தைத் தொட்டது. ''காலத்திற்கேற்பக் கருத்தில் மாறுதல் வேண்டும்'' என்பதை அவரும் புரிந்து கொண்டார்.

**அனைத்து நாட்டுப் பேரவை**

**1945-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் நாள் 50 நாடுகள் ஒருங்கிணைந்து உருவாக்கிய ஓர் அமைப்புதான் அனைத்து நாட்டுப் பேரவை. இன்று, 131 நாடுகள் இந்தப் பேரவையில் அங்கம் வகிக்கின்றன.**

ஊராரின் ஏச்சுப் பேச்சுக்கள் முளைவிடத் தொடங்கின. அம்மாவின் உள்ளம் அதற்காகச் சில சமயங்களில் கண்ணீர் சிந்தத்தான் செய்தது! ஆனால் அவளுக்கு நான்தானே முக்கியம், ஊரல்லவே! ''அறிவுடையோர் உயர் குலம், அறிவிலிகள் இழி குலம்'' என்ற கருத்து இந்த நாட்டின் விழிப்பு உணர்ச்சிக்கு எத்துணை அவசியம்!

நாட்கள் மழை நீரென உருண்டு மறைந்து கொண்டிருந்தன. சாலையில் நடக்கும் பொழுதுகூட ஒருசிலர் என்னை நோக்கிக் கேலி பேசுவது என் காதில் விழத்தான் செய்தது. என்னைக் கண்டு ஒரு சிலர் ஒதுங்கிப் போனார்கள் என்ற வருந்தத் தக்க செய்தியையும் நான் கூறித்தான் ஆகவேண்டும். உலகின் மலிவான சரக்கான அன்பை சாதி, மத பேதமில்லாமல் பெற்று விட்டதால் எனது உள்ளத்தில் ஏற்பட்ட உவகைக்கு முன்னால் ஊராரின் செயல்கள் எம்மாத்திரம்?

என்றோ ஒருநாள் எனது உள்ளத்து உணர்ச்சிகளைத் தூண்டிவிட்ட எங்கள் ஊர்ப் பெரியவரை, திருமணம் முடிந்தபின் ஒருநாள் தற்செயலாகச் சந்தித்தேன். என்னைக் கண்ட அவர்,

''சின்னத் தம்பி ... படு அழுத்தக்காரன்தாம்ப்பா நீ'' என்று கூறிவிட்டு வினயமாகச் சிரித்தார்.

வீட்டிற்குச் சென்றதும என் மார்பில் முத்தாள் சாய்ந்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுப்பதைக் கண்ட நான் திடுக்கிட்டு ''என்ன நடந்தது முத்தி'' என்று அவளை வாஞ்சையுடன் கேட்டேன்.

அவள் தொடர்ந்தாள்; ''சேகர்சாமி ஊருக்காரக் குடியானவங்கள்ளாம், இந்த நாய்க்கு வந்த திமிரைப் பார்த்தியா? அப்படி இப்படின்னு பேசினாங்க!''

''முத்தி, அழாதே! யார் எப்படிப் பேசினாலும் நான் ஒருத்தன் உன்மேல் உசிரை வச்சிக்கிட்டிருக்கறதை மறந்திடாதே! மோட்டார் நிக்கறதுக்குள்ள போய்த் தண்ணி எடு'' என்று அவளுக்கு அன்போடு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தேன்.

''இனிமேல் சாமி சாமின்னு கூப்பிட்டே, உன்கூட டூ விட்டுடுவேன்'' என்று அன்போடு ஓர் ஆணையும் இட்டேன். அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டுத் தண்ணீர் எடுக்கச் சென்று விட்டாள்.

காலச்சக்கரம் உருண்டோடியது. என் அன்பு மனைவி முத்தாளின் கள்ளங் கபட மற்ற முகத்தில் இன்பப் புன்னகை பூத்துக் குலுங்கியது. அந்த இன்பமயமான புன்னகையில் சாதிமத வேறுபாடு தலை காட்டவே இல்லை!

# வெண்பாப் போட்டி

* பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு. தாஜூபால்,
11, மாரியம்மன் கோயில் தெரு,
வல்லம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

ஈற்றடி : இரந்துண்டு வாழோம் இனி

* தட்டேந்த வாகைகள்? தாவென்ப தற்காவாய்?
எட்டுத் திசையுமடி ஏந்துநிலை—விட்டுக்
கரந்துண்டு பட்டாலும் கல்லறை சென் றாலும்
இரந்துண்டு வாழோம் இனி.

—தாஜுபால், வல்லம்.

பெற்றவளே நொந்தாலும் பிள்ளைபசி என்றாலும்
உற்றதோர் இல்லாள் உழன்றாலும்—இற்றுக்
கரந்துவண்டு வீழக் கடிதுழைத்தே வாழ்வோம்
இரந்துண்டு வாழோம் இனி!

—அரு. கிருட்டிணன், வன்னியர் வலசு.

திருவோடு போக்கித் திருவோடு வாழ
உருவாகும் எம்விடுதி உய்ய—ஒருவாய்
இரந்துழலா வேண்டி நிதிகொடுத்தார் எங்கும்
இரந்துண்டு வாழோம் இனி.

—பாலகிருட்டிணன், எண்டப்புலி.

தாளாண்மை கொண்டு தமிழரசார் நல்குரவை
வேளாண்மை யாலின்று வென்றுவிட்டார்—காளாண்
தரைவிளைக்கும் தானியத்தால் தன்னிறைவைக் கண்டோம்
இரந்துண்டு வாழோம் இனி.

—பு. புனிதா, ஓலைப்பாடி.

நோயற்ற வாழ்வின்றி நொந்தோம்! உடல்அழுகித்
தாயற்ற சேய்போல் தவித்திட்டோம்—நோயர்
இருந்துண்டு வாழ எழில்விடுதி கண்டோம்!
இரந்துண்டு வாழோம் இனி.

—மலை. மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

பிச்சை யெடுத்துப் பொருளைத் தொகுத்தேனும்
பிச்சை யெடுப்பவர் பேர்வாழ்வை—நச்சிப்
புரக்கத் தமிழரசு புக்கதால் நெஞ்சே
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் வெ. வா. நடராசன், பி.ஏ., சென்னை-5.

மண்ணொளிரக் கண்ணொளிர, மக்கள் நலம்ஒளிர
எண்ணரிய திட்டங்கள் ஈங்கிருக்க,—மண்ணில்
கரந்துண்டு வாழுங் கயவர்பால் நாடி,
இரந்துண்டு வாழோம் இனி.

—சு. கிருஷ்ணகுமார், ஞாயிறு கிராமம்.

இரந்துழன்ற எம்மை இரந்துகுறை கேட்டு
இருந்துண் ணும் நன்மறுவாழ் வீந்து—புரந்தார்
இருந்தமிழ் நாட்டில் இருந்தரசு ஆள,
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர்.

கல்லைக் குடைந்து கலைகள் வடித்திடுவோம்
சொல்லாற் கவிதைச் சுவைவளர்ப்போம்—நெல்லின்
வரப்பைப் பெருக்கியே வாழ்வோம் பிறரை
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். தி. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-6.

எளியோர் நலங்காக்கும் இத்தமிழர் நாட்டில்
வழியா நமக்கில்லை வாழ—அழியா
உரங்கொண்டு நாளும் உழைப்போமே யன்றி
இரந்துண்டு வாழோம் இனி.

—வைகுண்டமணி, பி.எஸ்.ஸி., ஈரோடு.

தன்மானம் நம்குறிக்கோள்; தன்னாட்சி நம்மாட்சி;
கன்னல் தமிழ்நம் கருவூலம்—அன்புக்
கரம்தருவோம் ஒற்றுமைக்குக் காசினியில்; முன்போல்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

இல்லாமை இல்லாமல் எல்லார்க்கும் எல்லாமாய்
வல்லாண்மை கொண்டு வகுத்தாயும்—நல்லோன்
புரக்கும் தமிழரசு; பொற்கால ஆட்சி!
இரந்துண்டு வாழோம் இனி.

—தமி. எழும்பூர், குளமங்கலம்.

## வெண்பாப் போட்டி

அரசின் முயற்சியால் அன்புடன் யாங்கள்
உரைசெய் திறத்தால் உயர்ந்து—விரைந்து
பரந்துழைத்துச் சொந்தப் பசிதீர்த்துக் கொள்வோம்
இரந்துண்டு வாழோம் இனி.

—முருகுபாரதி, உதகை-2.

செப்பும் பசுமைப் புரட்சிச் செயற்றிறத்தால்
கப்பும் பசிநோய் களைந்திட்டோம்—ஒப்பும்
பரந்த புகழ்நாட்டிப் பாரளிப்போம், என்றும்
இரந்துண்டு வாழோம் இனி.

—தாரைவில்லவன், தாராபுரம்.

கரத்தை வலுப்படுத்திக் கண்ணீர் துடைக்க
உரமும் இதயத்தில் உண்டாம்—சிறப்பாய்
நரம்பில் முறுக்கேற நாமுழைப்ப தாலே
இரந்துண்டு வாழோம் இனி.

—சு. அசோகன், புளியம்பட்டி,

உழைக்கக் கரமிருந்தும் உண்டுடுத்தி நாளும்
பிழைக்க மனமிருந்த பின்னும்—தழையால்
உரம்சேர்க்கும் காவிரிநீர் ஓடிடும்தாய் நாட்டில்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் சேறைநேசன், சோலூர்.

சோற்றுக் கலைவாரும், சொந்தமென வீடின்றி,
நாற்றமிகு நோயால் நலிவாரும்—கூற்றுக்
கிரையாகிப் போகாமல் எம்மரசு காக்கும்!
இரந்துண்டு வாழோம் இனி,

—புலவர். சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

''மறுவாழ்வு பெற்றோம்! மகிழ்வுடனே என்றும்
உறுதியொடு வாழ்வோம்! உயர்வோம்—வறுமைக்
கரமேந்திக் கால்வயிற்றுக்குக் கஞ்சிக்கு நாளும்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் சு. விசுவநாதன், நெற்குப்பை.

உண்ண உணவின்றி ஊரெல்லாம் சென்றநிலை
மண்ணில் மறைந்ததே மாயமாய்!—எண்ணி
அரசாற்றும் ஏற்றமிகு திட்டத்தால், என்றும்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனு.

கண்ணகி நன்செய்க் கதிராம் மணியுடைப்ப
எண்ணி வறுமை இறந்தொழிய—மண்ணில்
கருணை நிறைநெற் கனமெடுக்க வாழ்ந்தோம்;
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். இரசைஅதன், தெற்குத்தெரு அஞ்சல்.

உழுதுண்டு வாழும் உயர்கொள்கை கொண்டே
பழுதின்றி நெல்விளைத்த பாங்கால்—செழுமை
செறிந்தெங்கள் நாடு திகழுதலால் யாங்கள்
இரந்துண்டு வாழோம் இனி.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

மன்னுமெம தாட்சி மறுவாழ்வுத் திட்டத்தால்
என்னபயன் பெற்றோம்? எடுத்துரைப்பேன்—இன்றே
நிரந்தர நல்வாழ்வு பெற்றோம் நீதிக்குவெற்றி;
இரந்துண்டு வாழோம் இனி.

—பகவதிஅப்பன், சென்னை-5.

வேளாண்மை நுண்தொழில்கள் வெற்றிபெறு வீரமொடு
தாளாண்மை கொண்ட தமிழர்யாம்—நாளும்
புரந்துண்டு வாழ்ந்தோம் புவியில்; மறந்தும்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் டி. ஆர். சண்முகம், பண்ணைக்காடு.

எங்கிருந்த போதும் எமதிரண்டு கையிருக்க
அங்குழைத்து வாழ்வோமே அல்லாது—மங்கித்
தரங்கெட்டே எங்களது தன்மானம் கெட்டு
இரந்துண்டு வாழோம் இனி.

—சு. கிருஷ்ணன், திருப்பூர்.

கங்கையும் காவிரியும் கைகோத்தே ஒன்றாகப்
பொங்கி வழிந்தோடப் பூமியிலே—எங்கும்
சரஞ்சரமாய் நெல்விளையும் தானியமும் மல்கும்
இரந்துண்டு வாழோம் இனி.

—எஸ். டி. சின்னசாமி, ஆலாம்பாளையம்.

அங்கம் குறைந்தே அழுகிப்போய் ஆதரிப்பார்
எங்குமே இன்றிதுயர் ஏற்றோமே—மங்கா
மறத்தமிழர் ஆட்சி மறுவாழ்வீந் தார்நாம்
இரந்துண்டு வாழோம் இனி.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

அச்சங்கள் ஏதுமின்றி அன்றாடம் வாழ்ந்திடவே
பிச்சைக்கா ரர்க்குப்பே ரில்லங்கள்—இச்சை
சுரந்திடவே செய்தார் செகத்தில் எவரும்
இரந்துண்டு வாழோம் இனி.

—இராம. மறைமுதல்வன், வடபாதிமங்கலம்.

வண்ணப் புரட்சியால் வாழ்வளிக்கும் நல்லரசு
எண்ணற்ற நற்றெண்டால் இந்நாட்டின்—பண்ணை
பெருக்கெடுக்கும் பல்பயனும் பெற்றுவிட்டோம் நன்றே!
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். கோமுகி, ஆதமங்கலம்.

# வெண்பாப் போட்டி

உழவும் உயர்தொழிலும் ஓங்கி நம்நாடு
நலமுறவே சேர்ந்துழைப்போம் நாளும்—இலையென்று
பிறநாட்டார் கைபார்த்துப் பேதையர்போல் வாடி
இரந்துண்டு வாழோம் இனி.

—மா. சா. குருசாமி, அபிராமம்.

'சிரம்' கொடுத்து வாழென்ற செங்கைக் 'குமணன்'
பரம்பரையில் வந்துதித்த பண்பால்—உரைப்போம்!
நிரந்துண்டு வாழ்வதே யல்லாமல் நாங்கள்
இரந்துண்டு வாழோம் இனி!

—மலர்விழிமணாளன், விராமதி.

அச்சத்துள் அச்சம் இரவச்சம் அவ்வச்சம்
மெச்சப் படுமச்சம் என்றறிக—துச்ச
உயிரினும் மான முயர்ந்தது;நாங்கள்
இரந்துண்டு வாழோம் இனி.

—மா. சே. இராசு, திருப்பூர்.

பாடுபட நம்மரசு பன்முறையில் ஊக்குவதால்
நாடு வியந்திட நாமுயர்வோம்—வாடிக்
கரமேந்தி நிற்கின்ற காலமும் போச்சே!
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

எங்கும் பயிர்செழித்தே ஏற்றம் பலபெருகும்
தங்கத் தமிழரசின் சாதனையை—நங்காய்!
மறந்துண்டு வாழோம்நம் மண்ணின் பெருமை!
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். ச. மருதமுத்து, உடுமலை.

கூனுய்க் குருடாய்க் குறைந்தழுகும் மேனியராய்,
ஊனுருகி நாளும் உருக்குலைந்தோம்;—மானே!
அருளால் மறுவாழ்வு இல்லம் திறந்தார்;
இரந்துண்டு வாழோம் இனி.

—சம்பு இசைகொண்டான் போச்சம்பள்ளி.

பாரிலுள்ளோர் போற்றப் பணிசெய் தமிழரசால்
சாரமுள்ள வாழ்வதனைச் சார்ந்திட்டோம்—ஈரம்
சுரந்திடும் உள்ளத்தால் சோம்பலாய் என்றும்
இரந்துண்டு வாழோம் இனி.

—பெ. கௌசல்யா, புதுப்பேட்டை.

செய்யென்னும் நன்மடந்தை சிந்தை குளிர அவள்
மெய்யில் விளையுள்பூண் மின்னிடவே—செய்து
பரந்த புகழோங்கும் பைந்தமிழ நாட்டில்
இரந்துண்டு வாழோம் இனி.

—ஜி.வி. அர்த்தநாரி, வேலூர் (சேலம்).

சாலையிற் கையேந்தச் சற்றும் சளைக்காதார்
வேலைகள் பெற்றுர்; விளம்புகிருர்—ஏழை
கரையேறக் காரியங்கள் செய்யும் அரசில்
இரந்துண்டு வாழோம் இனி!

—ம. சக்குபாய், உடுமலை.

நாடா வளத்ததுவாய் நாடுயரத் திட்டமிட்டு
மாடாய் உழைத்தேனும் மாநிதிச்சீர்—வாடா
வரம்புகண்டு; வாழ்வாங்கு வாழ்வோமே யன்றி
இரந்துண்டு வாழோம் இனி.

—பாசி, ரெட்டியாரூர்.

உண்ண உணவில்லை உடுத்த உடையில்லை
என்னும் இழிநிலையோ இங்கில்லை—இன்னல்
மறந்தோடச் செய்கின்ற மாண்புடையார் ஆட்சியிலே
இரந்துண்டு வாழோம் இனி.

—சரோஜா சுந்தரம், வெண்பாவூர்.

கார்மாரி பொய்த்தாலும் கல்லைக் கிணருக்கிச்
சீர்சேர் பசும்புரட்சி செய்விக்க—நேராய்
அரசிருக்கும் நேரமிதில் அண்டையரை வேண்டி
இரந்துண்டு வாழோம் இனி!

—மு. ஜெய்லானி தம்பி, சின்னதாராபுரம்.

முப்போகம் இங்கே முழுநெல் விளைவதால்
எப்போதும் பஞ்சமில்லை எம்நாட்டில்;—ஒப்பி
மருந்திற்கும் யாங்கள் மடிபசி தீர்க்க
இரந்துண்டு வாழோம் இனி

—ப. குப்புசாமி, திருச்சி-4.

# காந்தியடிகளும் குடும்ப நலமும்

எஸ்.முத்துராமலிங்கம்

உலகநாடுகளில்பல இரத்தக் கறை படிந்த பின்னர்தான் விடுதலை பெற்றிருக்கின்றன—உரிமை யடைந்திருக்கின்றன. ஆனால் இந்தியப் பெருநாடு அன்றைய ஆங்கில ஏகாதிபத்தியத்தை அறப்போராட்டங்களினாலேயே வென்றது என்றால் அதற்கு முழு முதற் காரணம் காந்தியடிகளே ஆவார். கத்தியின்றி இரத்தமின்றி மிகப் பெரிய புரட்சியை நடத்திக் காட்டியவர் — தன்னைத் தானே வருத்திக் கொண்டுதான் இருந்த உண்ணாவிரதங்களின் மூலம் அரசுக்கும் மக்களுக்கும் பற்பலவற்றை வலியுறுத்திக் கூறியவர்—சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம், தண்டி யாத்திரை போன்றவற்றின் மூலம் கொள்கைகளுக்காகப் போராடியவர் அடிகளாவார்! நாட்டு விடுதலையோடு கூட காந்தியடிகள் சமுதாயப் புரட்சியும் எற்பட வேண்டுமென எண்ணினார். அவர், எவை எவை இந்த நாட்டில் மலர வேண்டுமென விரும்பினார் எனக் கூறவந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், தமது 'உலகப் பெரியார் காந்தி', என்னும் நூலில்,

அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும்

மக்களாட்சி மலரவேண்டும்

இந்து-முஸ்லீம் ஒற்றுமை வேண்டும்

தொழில்கள் பெருக வேண்டும்

கல்வி பரவ வேண்டும்

ஜாதி பேதம் ஒழியவேண்டும்

தீண்டாமை போக வேண்டும்

கிராமம் சீர்படவேண்டும்

வறுமை நீங்க வேண்டும்

சுரண்டல் முறை ஒழிய வேண்டும்

ஏழை ஈடேற வேண்டும்

ஏழை உரிமை பெற வேண்டும்

ஒற்றுமை மலர வேண்டும்

எனக் காந்தியடிகள் கருதினார் என்றும், 'இத்தகைய இந்தியா உருவாக வேண்டும். அதுவே என் இலட்சியம், அதற்கே நான் பாடுபடுகிறேன்' எனக் கூறினார் என்றும் குறிப்பிட்டு, காந்தியடிகளின் உளப்பாங்கை நமக்குத் தெளிவுபடுத்தி எளிதாக்கிக் காட்டியுள்ளார்கள். அப்படிப்பட்ட காந்தியடிகள் விடுதலை இயக்கத்தோடு தம்மைக் கட்டுப் படுத்திக் கொள்ளாது, வார்தா கல்வித் திட்டம் போன்றவற்றை அளித்தது போல், மனித சமுதாய உய்விற்கான பல்வேறுவழிகள் அல்லது துறைகள் ஆகியவற்றில் தனக்கெனத் தனிக் கருத்துக் கொண்டு வலியுறுத்தியதோடு ஒழுகியும் காட்டினார்! உலகிற்கே அகிம்சை நெறியை—திருவள்ளுவர் சொன்ன கொல்லாமை நெறியைத் தந்தவர்! இறுதியில் கயவன் ஒருவனின் குண்டுகளுக்குப் பழியாகி அண்ணல் மறைந்த நேரத்தில், இந்த நாட்டிற்குக் ''காந்தி நாடு'' என்று பெயரிட வேண்டும்—கி.மு. அல்லது கி.பி எனக் கூறிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக 'காந்தி ஆண்டு' எனக் குறிப்பிட்டுக் கூறவேண்டும், காந்தி மதம் எனப் பெயரிட வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை வலியுறுத்தித் தந்தை பெரியார் அவர்கள் எழுதினார் என்றால், காந்தியடிகள் இந்நாட்டு மக்களிடையே எந்தளவுக்கு இரண்டறக் கலந்திருந்தார் என்பது புலப்படும். அப்படிப் பட்ட உத்தமர் குடும்ப நலத் திட்டம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் என்ன ?

காந்தியடிகள் கருத்தடைத் திட்டம் பற்றித் தனக்கெனத் தனியொரு கருத்துக் கொண்டவராக வாழ்ந்தார் என்பதை நாடறியும். ஆனால் குடும்பம் சிறியதாகி இருக்க வேண்டுமென்பதில் அவர் கருத்து வேறுபாடு கொண்டவராக இருக்கவில்லை. வழி முறைகள் பற்றித்தான் கருத்துவேறுபாடு கொண்டிருந்தார். கருத்தடை முறையாகச் சுயக்கட்டுப்பாட்டை—புலனடக்கத்தை—ஆன்மீக ஒழுக்க நெறியை வற்புறுத்தினார். செயற்கை முறையில் கருத்தடை செய்து கொள்வது என்பதை ஏற்காதவர். 'சுயக்கட்டுப்பாடு' என்பது காந்தியடிகள் போன்றோராலேயே நிறைவேற்றப் படக் கூடியது என்பதை எவரும் ஒப்புவர். 'அப்பல்லோ' வேகத்தில் சென்று கொண்டிருக்கும் இன்றைய மனிதவாழ்க்கையில் 'சுயக்கட்டுப்பாடு'—உள்ளத் துறவு—புலனடக்கம் என்பவற்றையெல்லாம் சர்வ சாதாரண சாமான்ய மனிதனின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவது என்பது இயலாத ஒன்று என்பது தெளிவு.

இந்நாட்டு மண்ணடிமை போக்கிய காந்தியடிகள் கருத்தடைத் திட்டம்பற்றி முடிந்த முடிவான கருத்துக்களைக் கொண்டிருந்தார் என்ற போதிலும் கருத்தடைத் திட்ட வெற்றிக்காக உழைத்தவர்களிடத்திலே மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். அவர்களோடு மனம் விட்டு விவாதித்தார். கருத்தடை பற்றிக் காந்தியடிகளோடு திருமதி. நாயரும், திரு



மதி. மார்க்கரட் சாங்கரும் அப்படிக் கலந்துரையாடியவர்களாவர்.

திருமதி. மார்க்கரட் சாங்கர் இன்றைய குடும்ப நலத் திட்டத்திற்கு அடிகோலியவர் ஆவார். 1883-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாள் நியூயார்க்கில் பிறந்த இவர், செவிலியர் பயிற்சிப் பள்ளியில் பட்டம்பெற்று பின் மான்காட்டனில், கண், காது மருத்துவத்திலும் அவர் பட்டம் பெற்றார். பெண்ணடிமை தீரவேண்டுமானால் கருத்தடைத் திட்டம் அவசியம் என உளமார நம்பினார். 1916-ஆம் ஆண்டில் நியூயார்க்கைச் சேர்ந்த புருக்லினில் உலகத்தின் முதல் கருத்தடை நிலையத்தைத் துவக்கியதற்காக அவரை அரசு கைது செய்தது. சிறைவாசமேற்றார். கருத்தடை பற்றிப் பேசினாலே குற்றம் என அன்றைய அமெரிக்க அரசு அறிவித்தது. அந்தக் குற்றத்தைத் தொடர்ந்து, மிகத் துணிவோடு உலக நன்மைக்காக திருமதி. சாங்கர் செய்து கொண்டு வந்தார். 1935—36-ல் இந்தியாவிற்கு வந்து கருத்தடை இயக்கத்தை நடத்தினார். கொண்ட கொள்கையை விட்டுப் பிறழாது—ஏசல், இழித்துரை இவற்றைக் கண்டு துவளாது தன் பணியைத் திறம்பட ஆற்றினார். இன்றைக்கு உலகம் முழுவதிலுமுள்ள பல அரசுகள் அவரது கொள்கையின் இன்றியமையாமையைக் கருதிக் கருத்தடைத் திட்டத்தை அரசுத் திட்டமாகவே செயல்படுத்தி வருகின்றன. தன் கொள்கை பெற்றவெற்றியைக் கண்கூடாகக் கண்டு களித்த திருமதி. சாங்கர் 1966-ஆம் ஆண்டு மறைவெய்தினார். கருத்தடைத் திட்டத்தின் முன்னோடி திருமதி. சாங்கரிடமும், திருமதி. நாயரிடமும் காந்தியடிகள் குடும்ப நலத் திட்டம் குறித்து, அதாவது கருத்தடைத் திட்டம் பற்றி என்ன கருத்தறிவித்தார் என்பதை அவர்களது உரையாடல் வாயிலாக நாம் அறியலாம்.

**திருமதி. நாயர் :** மகாத்மா அவர்களே! ஒரு பெண் தன்மேல் தாய்மைதிணிக்கப் படுவதை அனுமதிக்கக் கூடாது என்றும், தன் கணவனின் விருப்பத்திற்கு இணங்காது, 'முடியாது' எனக் கூறித்தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறீர்கள். இந்தியப் பெண்ணுக்குப் பொருளாதார அடிப்படையில் எந்தஒருதனித்தகுதியும் அல்லது நிலையும் அல்லது தகுதியும் இல்லை என்பதையும், வேறுவிதமாக அவள் நடக்க முற்பட்டால்—அதாவது 'மேல் கீழ்' என்ற நிலை (Lord and Master) ஏற்பட்டால் குடும்பத்தில் வேண்டாத விளைவுகள் ஏற்படுமென்பதையும், அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய குறைந்த அளவிலான வசதிகள் கூட மறுக்கப்படுமென்பதையும் தாங்கள் எண்ணிப் பார்க்கவில்லையா?

**காந்தியடிகள் :** பொருளாதார அடிப்படையில் பெண்களுக்குத் தனித் தகுதி இல்லை என்பது மிகமிகச் சொற்பமானவர்களுக்கே பொருந்தும் என்பதைப் புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நீங்கள் அறிந்து கொள்ள முடியும். சாதாரணமாக இந்தியக் குடும்பங்களில் பெண்கள் தான் இல்லத்தரசிகளாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா?

**திருமதி. நாயர் :** 'சுயக் கட்டுப்பாடு' பற்றிய தங்கள் ஆய்வுகள் 'சபர்மதி' ஆசிரமத்தைப் பொறுத்த மட்டில் எந்த அளவு நிறைவேற்றப்படுகிறது என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?

**காந்தியடிகள் :** அதைப் பற்றிச் சொல்வது மிகக் கடினமான செயலாகும். தனிப்பட்டவர்களைப் பொறுத்தமட்டில் மிகப் பயங்கரமான பெருந் தோல்வியைத் தான் சபர்மதி ஆசிரமத்தில் நாங்கள் கண்டோம். மற்றபடி ஆசிரமத்திற்கு வருகை தந்தவர்கள், 'பால்' உணர்வு நோக்கின்றி அனைவரும் சுதந்தரமாய் இருப்பதைப் பார்த்துப் பாராட்டவே செய்தனர்.

உரையாடியபோது திருமதி. மார்க்கரட் சாங்கரிடம் காந்தியடிகள் தெரிவித்த கருத்துக்களைப் பார்ப்போம்.

**காந்தியடிகள் :** கணவன், மனைவி ஆகியோர் தங்கள் நடவடிக்கையின் தொடர்பாக ஏற்படும் பின்விளைவுகளை நினைத்துப் பாராமல், இருவரும் தங்கள் மிருக இச்சையைத் தீர்த்துக் கொள்ள விரும்பினால், அது காதலால் கனிவதல்ல; கழிகாமத்தால் பிறப்பதாகும். ஆனால் தூய்மையான அன்பு, மிருக இச்சையை வரம்புக்குட்படுத்தி முறைப்படுத்தும். இது பற்றி நமக்குப் போதுமான கல்வி அறிவு கிடையாது. ஒரு கணவன், 'நமக்குக் குழந்தை வேண்டாம், ஆனால் கூடி இன்புறுவோம்' என்று சொன்னால் அது மிருக இச்சைதானே? அதிகக் குழந்தைகள் வேண்டாமென்றால், உடலின்பம் துய்க்காமல் ஒதுங்கியிருக்க வேண்டும். மிருகத்தனமான உணர்வுகளைத் தணித்து நிறைவடைய முற்படும் அந்தக் கணமே காதல் அழிந்து காம வேட்கையாகிவிடுகிறது. உணவைப் பொறுத்த மட்டிலும் அதேநிலைதான். 'ருசி'க்காகப் புசித்தால் அதுவும் கழிகாமத்திற்கு ஒப்பான செயலேயாகும். பசியைத் தீர்த்துக் கொள்ள யாரும் 'சாக்கலேட்' மிட்டாய்களைச் சாப்பிடுவதில்லை. இனிப்பு என்பதால் சாப்பிட்டுவிட்டு, பின் மருத்துவரிடம் சென்று மாற்று மருந்து வாங்கிச் சாப்பிடுகிறோம். 'விஸ்கி' சாப்பிட்டால் மூளைக்கு ஒரு கிறக்கம் ஏற்பட்டு, மாற்று மருந்தாக அமைகிறது என்று கூட நீங்கள் மருத்துவரிடம் சொல்லக்கூடும். மிட்டாய்களையோ, 'விஸ்கி'யையோ சாப்பிடாமலேயே இருந்துவிடுவது நல்லதல்லவா?

அரசிதழ்

இந்தியாவில் அரசிதழ் (Gazette) முதன் முதலாக வெளியிடப்பட்டது 1835-ஆம் ஆண்டுதான்.



தெரிந்த, என் மதிப்பிக்கும் மரியாதைக்குமுரிய பல 'பிராட்டஸ்டண்டு' கிருத்துவ இறைமையில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், கற்றறிந்த பெரியோர்கள் டாக்டர்கள் ஆகியோரின் ஆதரவு கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தும் கருத்தடை முறைகளுக்கு உண்டு என்பதும் எனக்குத் தெரியும்,'' எனக் கூறியுள்ளார்.

ஆக தன் கருத்துக்குப் புறம்பாக, செயற்கை முறையிலான கருத்தடை முறைகளை வலியுறுத்தியவர்களைப் பற்றியும், அதற்கு ஆதரவு காட்டியவர்களையும், காந்தியடிகள் நன்கு உணர்ந்திருந்தார் என்பதும், நாட்டில் அப்படிப்பட்ட செயற்கை முறை கருத்தடை முறைகள் பரவி வருவதைத் தெரிந்திருந்தார் என்பதும் தெளிவு. அவரது நேரடிப்பார்வையில் இருந்த சபர்மதி ஆசிரமத்தில் தனிப் பட்டோரிடையே 'சுயக் கட்டுப்பாடு' முறையைச் செயல் படுத்துவதில் பெருந் தோல்வி கண்டதாக அவரே குறிப்பிட்டிருப்பதிலிருந்து, புலனடக்கத்தின்மூலம் கருத்தடைத்திட்டத்தை ஏற்பது என்பது எவ்வளவு சிரமமான ஒன்று என்பதை அனைவரும் உணரவேண்டும். 'புலனடக்கம்' என்ற அவரது கருத்தடைத் தத்துவம் தவறானது என்று யாரும் சொல்லவில்லை— சொல்ல முடியாது! நடைமுறையில் அதைத் செயல் படுத்த இன்றைய சமுதாயப் பின்னணியில் இயலாது — தனிப்பட்டவர்களாலேயே முடியாது!

இதை உணர்ந்த காரணத்தினாலேதானோ என்னவோ, நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் 'காந்திய நோக்கில் அல்லது காந்தியக் கண்ணோட்டத்தில் மக்கள் தொகைப் பிரச்சினை என்றதொரு கருத்தரங்கம் வாரணசியில் நடந்தேறி நல்ல பல முடிவுகளை நாட்டுக்கு அறிவித்துள்ளது. இந்தக் கருத்தரங்கம் வாரணசியில் இயங்கிவரும் ''காந்தீயக் கருத்தாய்வு நிலையத்தின்'', ( Gandhian Institute of Studies, Varanasi ) சார்பில் நடத்தப்பட்டதாகும். இந்தக் கருத்தரங்கில் காந்தீயக் கொள்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பல அறிஞர்கள் கலந்து கொண்டார்கள். காந்தியடிகளோடு உடன் இருந்தவர்—அவரோடு பழகியவர்—அவரை அறிந்தவர்—இந்திய அரசின் முன்னாள் மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார்அவர்கள் இக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கியுள்ளார்கள். ''காந்திய நோக்கில் மக்கள் தொகைப் பிரச்சினை'' என்ற அந்தக் கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய டாக்டர் சுசீலா நய்யார் ''நம் தேவைகள் நிறைவேற்றத்திற்கேற்றவாறு காந்தீயக் கருத்துகளுக்குப் பொருள் சொல்லக்கூடாது. காந்தியடிகளிடமிருந்து நாம் எந்த இடத்தில் அல்லது கட்டடத்தில் வேறுபடுகிறோம் என்பதைச் சொல்லுவதற்கும், இந்த அளவுதான் அவரோடு இணைந்து செல்ல முடியும், இதற்குமேல் இயலாது என்று சொல்லுவதற்குமுரிய மனப் பக்குவத்தை — திடத்தை— உறுதியை நாம் பெறவேண்டும்,'' எனக் கூறியுள்ளார். மேலும் படிக்காத, கல்வி, அறிவு இல்லாத மக்களிடையேதான் அதிகக் குழந்தைகள் இருக்கின்றன என்றும், அந்தச் சமுதாய மக்களிடம் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட காந்தியக் கருத்துச் செறிவு மிக்கவர்கள், கருத்தடைபற்றி ஏற்கெனவே இருக்கின்ற காந்தியடிகளின் கருத்துக்களில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை என்றாலும் காந்தீயத்தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு இந்தியாவை நோக்கியுள்ள மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய முடிவுகளை அறிவித்துள்ளனர்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட காந்திய அறிஞர்கள் சுதந்தரமாகக் கருத்தடை முறைகளைப் பின்பற்ற விரும்புவோருக்குச் செயற்கைக் கருத்தடைக் கருவிகள் எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், புலனடக்கத்தின் அல்லது சுயக் கட்டுப்பாட்டின் சிறப்பை வலியுறுத்தும் அதே நேரத்தில், அதை நடைமுறைப் படுத்த முனையும் தம்பதிகள் செயற்கை முறையான கருத்தடை முறைகளைப் பின்பற்றினால் கண்டிக்க வேண்டிய அவசியமில்லையென்றும் கருத்தறிவித்துள்ள அவர்கள், பகுத்தறிவுக்கொப்பும்வகையில் (Rational approach) இந்திய மக்கள் தொகைப் பிரச்சினை அணுகப் பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்கள்.

மேலும், இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும், இரு பாலாரின் (ஆண், பெண்) பொறுப்பை உணர்த்தும் வகையில் 'பால் உணர்வுக் கல்வி' (Sex Education) அளிக்க வேண்டுமென்றும், பால் உணர்வு, காதல் பற்றி சமுதாயக் கருத்துக்களையும் போதிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

குடும்ப நல விளக்கத் திட்டம் குறித்துப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ள இக் கருத்தரங்கம், பெண்ணடிமை போக்கப்பட வேண்டுமென்றும், பெண்ணை ஆண் ஆதிக்கம் செலுத்தும் நிலை மாற வேண்டுமென்றும், பெண்களிடையே விழிப்பு உணர்ச்சி ஏற்படுவதை ஏற்றுச் சமுதாயத்தில் அவர்களுக்குச் சரிசமமான இடம் அளிக்க வேண்டுமென்றும், பெண் குழந்தைகளைவிட ஆண்குழந்தைகளுக்குச் சலுகைகள் காட்டக் கூடாது என்றும், பெண் கல்விச் சிறப்படைய ஆவன செய்ய வேண்டுமென்றும், பெண்களும் மனித குலத்தின் அங்கமெனக்கருதிப் பாராட்ட வேண்டுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே, இந்தக் கருத்துக்களையெல்லாம் மனத்தில் நிறுத்தி, காந்தியடிகள் கூறிய சுயக்கட்டுப்பாடு முறை மூலம் இன்றையச் சூழ்நிலையில் குடும்ப நலத்திட்டம் ஏற்றுச் செயல் படுவது மிகச்

**திருமதி. சாங்கர் :** நான் இந்த வாதத்தை—ஒப்புவமையை ஒப்புக் கொள்ளவில்லை.

**காந்தியடிகள் :** நான் கூறியவற்றை ஏற்கமாட்டீர்கள் என்பது உறுதி. ஏனென்றால் பிள்ளைப் பேற்றிற்காக உடலுறவு கொள்ளாமல் சிற்றின்ப நுகர்ச்சிக்காக மட்டும் உடலுறவு கொள்வது, மனித வாழ்வுக்குத் தேவையானது எனக்கருதுகிறீர்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

# தொலைவு பேசிகள்

இந்தியா விடுதலையடைவதற்கு முன்பு 1947 ஆகஸ்டுக்கு முன்பு, இங்கு ஒரு இலட்சம் தொலைவு பேசிகள்கூட இருக்கவில்லை ; இன்று 1973-ல் 14 இலட்சம் தொலைவு பேசிகள் உள்ளன. எனினும், 500 பேருக்கு ஒரு தொலைவு பேசி என்னும் கணக்கில்தான் உள்ளது. அமெரிக்காவிலோ இரண்டு பேருக்கு ஒரு தொலைவுபேசி என்ற கணக்கில் இருக்கிறது.




**திருமதி. சாங்கர் :** ஆம்! பால் உணர்வு என்பது ஒரு நுண்ணுணர்வுத் தேவையாகும். ஏற்படும் விளைவைவிட, இவ்வுணர்வை முறையாக — தரமாகவெளிப்படுத்துவதே முக்கியம் என நான் கருதுகிறேன். விளைவுகளைப் பற்றிக் கவலையுருமல் கூடுவதின் தரம் எப்படிப்பட்டது என்பது வெளிப்படையானது. 'கரு' உருவாக வேண்டும்-குழந்தை பிறக்க வேண்டும் என்ற எண்ணம் ஏதும் பெற்றோர்களுக்கு ஏற்படாத சமயத்தில்— எதிர்பாராத நேரத்தில், விபத்து ஏற்படுவது போலத் தான் பெரும்பாலானகுழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். குழந்தை வேண்டும் என்றபோது மட்டும் கணவனும் மனைவியும் உடலுறவு கொள்வது என்பது அபூர்வமானதாகும். காதலால் கட்டுண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கும் கணவனும் மனைவியும், தங்களுக்குக் குழந்தை தேவை என விரும்பும் போது மட்டும்—அதாவது இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை மட்டும் உடலுறவு கொள்வது என வகைப்படுத்தி அல்லது முறைப்படுத்தி வாழ முடியும் என்கிறீர்களா ?

**காந்தியடிகள் :** என்னாலே அதைச் செய்ய முடியுமென்றாலும், என் ஒருவனாலேயே மட்டுந்தான் என்று பொருளல்ல.

**திருமதி. சாங்கர் :** வாழ்நாள் முழுவதிலும் மூன்று அல்லது நான்கு முறைதான் உடலுறவு கொள்ள வேண்டுமோ ?

**காந்தியடிகள் :** மூன்று அல்லது நான்கு குழந்தைகளுக்கு மேல் பெறுவது நன்னெறிக்குப் புறம்பான கொடிய செயலென்றும், அப்படி மூன்று நான்கு குழந்தைகள் பெற்றுக் கொண்ட பின்பு கணவனும் மனைவியும் தனித்தனியே உறங்க வேண்டுமென்றும் மக்களுக்கு ஏன் நாம் கற்றுக் கொடுக்கக் கூடாது ? அப்படிச் செய்தால் அது ஒரு வழக்கமாக —மரபாக உருவாகிவிடும். சமுதாய சீர்திருத்தப் பணிகளில் அல்லது தொண்டுகளில் இக்கருத்தை வலியுறுத்தி ஏற்கச் செய்ய முடியாது போனால் ஏன் சட்டமியற்றக் கூடாது ? நான்கு குழந்தைகளையுடைய கணவன் மனைவி உடலுறவு கொண்டிருப்பார்கள். அதன்பின் அவர்களது காதல் ஒரு மேலான நிலையை அடைந்திருக்கும். போதுமானவரை உடலுறவு கொண்டார்கள். விரும்பிய அளவு குழந்தைகளைப் பெற்ற பின்பு, அவர்களது காதல் தெய்விகத் தன்மையான ஒரு உறவாக மாறுகிறது, பிறந்த குழந்தைகள் இறந்து, இன்னும் குழந்தைகள் வேண்டுமென அவர்கள் விரும்பினால் மீண்டும் உடலுறவு கொள்ளட்டும். சிற்றின்ப நுகர்வுக்கு மக்கள் ஏன் அடிமையாக வேண்டும்? கருத்தடை பற்றி அவர்களுக்குச் சொல்லும்போது அது கடமை என வலியுருத்துகிறீர்கள். அதைக் கடைப்பிடித்து ஒழுகாவிட்டால் படிப்படியான தெய்விக அல்லது ஆன்மீக வளர்ச்சியைத் தடைப்படுத்தும் என்கிறீர்கள். அதை வகைப் படுத்துவது பற்றி நீங்கள் கூறுவதே இல்லை. கருத்தடை பற்றிக் கல்வி அளித்த பின், 'இருப்பது போதும், இனி வேண்டாம்' என நீங்கள் சொல்லுவதில்லை. குறைவாகக்குடியுங்கள், மிதமாக இருக்கலாம் என மக்களிடம் சொல்லுவீர்களா? இப்படிப்பட்ட ''மிதவாதிகளைப்'' பற்றி நான் அறிவேன்.

இப்படிக் கருத்தடை பற்றி தனக்கென்று உள்ள கருத்துக்களை விட்டுக் கொடுக்காமல் திட்டவட்டமாகப் பேசிய காந்தியடிகள் திருமதி. சாங்கரைப் பற்றி உயர்ந்த கருத்துக் கொண்டிருந்தார். காந்தியடிகள், ''......திருமதி. மார்க்கரெட் சாங்கரிடமும் அவரைப் பின்பற்றுபவர்களிடமும் எனக்குப் பெருமதிப்பும் மரியாதையும் உண்டு. தன் கொள்கையில் கொண்டுள்ள நம்பிக்கை, பிடிப்பு ஆகியவற்றின்மூலம் திருமதி. சாங்கர் என் உள்ளத்தில் தனக்கெனத் தனியொரு இடத்தை ஏற்படுத்திக்கொண்டார். விரும்பாத தருணத்தில் விளைந்து விடும் 'கரு'வால், வயிற்றில் வளரும் குழந்தைகளைப்பத்து மாதம் சுமந்து, பெற்றபின் முறையாக வளர்த்து அவர்களை ஆளாக்குவதற்குத் துன்புறும் பெண்களிடத்தில் திருமதி. சாங்கருக்கு உண்மையிலேயே மிகுந்த பரிவுண்டு. எனக்கு நேரிடையாகத்

தெரிந்த, என் மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய பல 'பிராட்டஸ்டண்டு' கிருத்துவ இறைமையில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், கற்றறிந்த பெரியோர்கள் டாக்டர்கள் ஆகியோரின் ஆதரவு கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தும் கருத்தடை முறைகளுக்கு உண்டு என்பதும் எனக்குத் தெரியும்,'' எனக் கூறியுள்ளார்.

ஆக தன் கருத்துக்குப் புறம்பாக, செயற்கை முறையிலான கருத்தடை முறைகளை வலியுறுத்தியவர்களைப் பற்றியும், அதற்கு ஆதரவு காட்டியவர்களையும், காந்தியடிகள் நன்கு உணர்ந்திருந்தார் என்பதும், நாட்டில் அப்படிப்பட்ட செயற்கை முறை கருத்தடை முறைகள் பரவி வருவதைத் தெரிந்திருந்தார் என்பதும் தெளிவு. அவரது நேரடிப்பார்வையில் இருந்த சபர்மதி ஆசிரமத்தில் தனிப் பட்டோரிடையே 'சுயக் கட்டுப்பாடு' முறையைச் செயல் படுத்துவதில் பெருந் தோல்வி கண்டதாக அவரே குறிப்பிட்டிருப்பதிலிருந்து, புலனடக்கத்தின்மூலம் கருத்தடைத்திட்டத்தை ஏற்பது என்பது எவ்வளவு சிரமமான ஒன்று என்பதை அனைவரும் உணரவேண்டும். 'புலனடக்கம்' என்ற அவரது கருத்தடைத் தத்துவம் தவறானது என்று யாரும் சொல்லவில்லை— சொல்ல முடியாது! நடைமுறையில் அதைத் செயல் படுத்த இன்றைய சமுதாயப் பின்னணியில் இயலாது — தனிப்பட்டவர்களாலேயே முடியாது!

இதை உணர்ந்த காரணத்தினாலேதானோ என்னவோ, நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் 'காந்தீய நோக்கில் அல்லது காந்தீயக் கண்ணோட்டத்தில் மக்கள் தொகைப் பிரச்சினை என்றதொரு கருத்தரங்கம் வாரணசியில் நடந்தேறி நல்ல பல முடிவுகளை நாட்டுக்கு அறிவித்துள்ளது. இந்தக் கருத்தரங்கம் வாரணசியில் இயங்கிவரும் ''காந்தீயக் கருத்தாய்வு நிலையத்தின்'', ( Gandhian Institute of Studies, Varanasi ) சார்பில் நடத்தப்பட்டதாகும். இந்தக் கருத்தரங்கில் காந்தியக் கொள்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பல அறிஞர்கள் கலந்து கொண்டார்கள். காந்தியடிகளோடு உடன் இருந்தவர்—அவரோடு பழகியவர்—அவரை அறிந்தவர்—இந்திய அரசின் முன்னாள் மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார்அவர்கள் இக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கியுள்ளார்கள். ''காந்திய நோக்கில் மக்கள் தொகைப் பிரச்சினை'' என்ற அந்தக் கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய டாக்டர் சுசீலா நய்யார் ''நம் தேவைகள் நிறைவேற்றத்திற் கேற்றவாறு காந்தியக் கருத்துக்களுக்குப் பொருள் சொல்லக்கூடாது. காந்தியடிகளிடமிருந்து நாம் எந்த இடத்தில் அல்லது கட்டத்தில் வேறுபடுகிறோம் என்பதைச் சொல்லுவதற்கும், இந்த அளவுதான் அவரோடு இணைந்து செல்ல முடியும், இதற்குமேல் இயலாது என்று சொல்லுவதற்குமுரிய மனப் பக்குவத்தை — திடத்தை— உறுதியை நாம் பெறவேண்டும்,'' எனக் கூறியுள்ளார். மேலும், படிக்காத, கல்வி, அறிவு இல்லாத மக்களிடையேதான் அதிகக் குழந்தைகள் இருக்கின்றன என்றும், அந்தச் சமுதாய மக்களிடம் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

✻ மனிதர்களின் செயல்கள், ஒரு நூலின் உள்ளுறை போல; மனிதர்களின் செயலில் குறிப்பிடத் தக்கவற்றை அது சுட்டிக் காட்டுகிறது.
—தாமஸ்

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட காந்தியக் கருத்துச் செறிவு மிக்கவர்கள், கருத்தடைபற்றி ஏற்கெனவே இருக்கின்ற காந்தியடிகளின் கருத்துக்களில் அவ்வளவாக அக்கரை காட்டவில்லை என்றாலும் காந்தியத்தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு இந்தியாவை நோக்கியுள்ள மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய முடிவுகளை அறிவித்துள்ளனர்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட காந்தீய அறிஞர்கள் சுதந்தரமாகக் கருத்தடை முறைகளைப் பின்பற்ற விரும்புவோருக்குச் செயற்கைக் கருத்தடைக் கருவிகள் எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், புலனடக்கத்தின் அல்லது சுயக் கட்டுப்பாட்டின் சிறப்பை வலியுறுத்தும் அதே நேரத்தில், அதை நடைமுறைப் படுத்த முனையும் தம்பதிகள் செயற்கை முறையான கருத்தடை முறைகளைப் பின்பற்றினால் கண்டிக்க வேண்டிய அவசியமில்லை யென்றும் கருத்தறிவித்துள்ள அவர்கள், பகுத்தறிவுக்கொப் பும்வகையில் (Rational approach) இந்திய மக்கள் தொகைப் பிரச்சினை அணுகப் பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்கள்.

மேலும், இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும், இரு பாலாரின் (ஆண், பெண்) பொறுப்பை உணர்த்தும் வகையில் 'பால் உணர்வுக் கல்வி' (Sex Education) அளிக்க வேண்டு மென்றும், பால் உணர்வு, காதல் பற்றி சமுதாயக் கருத்துக்களையும் போதிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

குடும்ப நல விளக்கத் திட்டம் குறித்துப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ள இக் கருத்தரங்கம், பெண்ணடிமை போக்கப்பட வேண்டுமென்றும், பெண்ணை ஆண் ஆதிக்கம் செலுத்தும் நிலை மாற வேண்டுமென்றும், பெண்களிடையே விழிப்பு உணர்ச்சி ஏற்படுவதை ஏற்றுச் சமுதாயத்தில் அவர்களுக்குச் சரிசமமான இடம் அளிக்க வேண்டுமென்றும், பெண் குழந்தைகளை விட ஆண்குழந்தைகளுக்குச் சலுகைகள் காட்டக் கூடாது என்றும், பெண் கல்விச் சிறப்படைய ஆவன செய்ய வேண்டுமென்றும், பெண்களும் மனித குலத்தின் அங்கமெனக்கருதிப் பாராட்ட வேண்டுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே, இந்தக் கருத்துக்களை யெல்லாம் மனத்தில் நிறுத்தி, காந்தியடிகள் கூறிய சுயக்கட்டுப்பாடு முறை மூலம் இன்றையச் சூழ்நிலையில் குடும்ப நலத்திட்டம் ஏற்றுச் செயல் படுவது மிகச்



## திருமதி. மார்க்கரட் சாங்கர்

சிரமமான இயலாத ஒன்று என்பதை உணர வேண்டும்.

இன்றைக்கு உலக மக்கள் தொகை வரலாறு கண்டறியாத முறையில் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. 1650-ஆம் ஆண்டில் 50.8 கோடியாக இருந்த மக்கள் தொகை, 1750-ஆம் ஆண்டில் 71.1 கோடியாக வளர்ந்து, 1850-ஆம் ஆண்டில் 113.1 கோடி என்றாகி, 1950-ஆம் ஆண்டில் 251.6 கோடியானது. 1970-ம் ஆண்டு 363.5 கோடியாகியுள்ளது. 1950-ஆம் ஆண்டிற்கும் 1970-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் மட்டும் பெருகியுள்ள மக்கள் தொகை 111.9 கோடி என்றால் அதன் வேகம் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். 1980-ஆம் ஆண்டு 446.8 கோடியாகவும் 1990-ஆம் ஆண்டு 545.7 கோடியாகவும், கி.பி. 2000-ல் 651.4 கோடியாகவும் உயரும் என உலக வங்கி கணித்துக் கூறியுள்ளது. இந்த வேகத்திற்கேற்ப உலக வளங்கள் அனைத்தும் உயருமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. உணவு உற்பத்தியை நினைத்தால் அச்சமே பிறக்கிறது.

கோதுமை, நெல் ஆகியவற்றில் மிக அதிக விளைச்சலைத் தரக்கூடியவற்றை உருவாக்கித் தந்து மெக்சிக்கோ, இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் தீவுகள் போன்ற நாடுகளில் பசுமைப் புரட்சி ஏற்பட உதவியதற்காக டாக்டர் நார்மன்பர் லோக் 1970-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு பெற்றார். மக்கள் தொகை வளர்ச்சி இன்றைய விகிதத்திலேயே, வேகத்திலேயே சென்று கொண்டிருக்குமானால் எந்தப் பசுமைப் புரட்சியும் அதற்கு ஈடுகொடுக்க முடியாது போகும் என அவர் அறிவித்துள்ளார். காற்று, நீர், நிலம் அனைத்திலும் பற்றாக்குறை ஏற்படக்கூடும். இன்றைக்கே காற்று நச்சுக் காற்றாக (Air Pollution) மாறிக் கொண்டு வருகிறது. இந்த நிலை நீடித்தால் எதிர்காலம் இருண்டதாகத்தான் இருக்கும் என அஞ்சப்படுகிறது.

அறிஞர்கள் எல்லாம் மக்கள் தொகையை அதன் வழியில் வளர விடாமல் கட்டுக்குள் நிலை நிறுத்த வேண்டும். உடனடியாகச் செயல்பட்டாக வேண்டும்—மாணவப் பருவத்திலேயே, பிஞ்சு உள்ளங்களில் மக்கள் தொகை இயல் கல்வியின்மூலம், மக்கள் தொகை வேகமாகவளர்வதால் உருவாகும் பிரச்சினைகளைப் பற்றி எடுத்து விளக்கிப் பதியச் செய்ய வேண்டும்—இப்போதிருக்கும் கருத்தடைக் கருவிகளைவிட எளிதான, சுலபத்தில் பலனளிக்கக்கூடியவற்றைக் கண்டுபிடித்து உதவ வேண்டுமெனக் கூறிவருகின்றனர்.

எனவே பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து, 'குடும்பத்தைப் பெருக்கிக்கொள்வது நன்னெறிக்குப் புறம்பான செயல்' என்ற அண்ணலின் வாக்கிற்கேற்ப சிறு குடும்ப நெறி ஏற்றிட வேண்டும்—காந்தியக் கருத்துக்களைக் காட்டி, குடும்ப நலத் திட்டதிலிருந்து நழுவாமல், விலகாமல், அரசு இலவசமாக அளித்து வரும் பல்வேறு விதமான சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு, கருத்தடை முறைகளைப் பின்பற்றி,

''நாம் இருவர்
நாம் பெறுவதும் இருவர்''

''பிறந்ததைக் காப்போம்—
இனி பிறப்பதைத்தடுப்போம்''

என்ற வகையில் வாழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் உதவிட அனைவரும் முனைந்து செயல்பட வேண்டும்.

# தமிழ்நாடு வாரி வழங்கிடும் வற்றாத செல்வங்கள்



இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

# ரூ.1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**60-வது குலுக்கல் நாள்: 12-10-1973**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்




கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

# தேர் மகாலைத் தெரியுமா?

திம்மராசன்கோட்டையைத் தெரியுமா உங்களுக்கு? அப்படியானல் தேர் மகாலையும் தெரியும்!

செங்கற்பட்டிலுள்ள 'அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி' இருக்கும் இடம் தான் திம்மராசன் கோட்டை!

இப்பொழுது இந்தக் கோட்டை சிதைந்த நிலையில் உள்ளது. சுற்றிலும் தூர்ந்து போன அகழியும் காணப்படுகிறது. கோட்டைக்கு நடுவே 'தேர் மகால்' என்ற பழைய கட்டடம் இருக்கிறது. ஐந்து அடுக்குகள் உள்ள இந்தக் கட்டடத்தின் படிகள் சுற்றிச் சுற்றிப் போகும் வகையில் அமைந்துள்ளன.

இந்தக் கோட்டையில் இருந்த மன்னன் பெயர் திம்மராசன் என்றும், அவனும் அவன் மனைவியும் இதன் உச்சிக்குச் சென்று, அங்கிருந்து தெரியும் காஞ்சி வரதராசப் பெருமாள் கோவில் கோபுரத்தைக் கண்டு வணங்குவார்கள் என்றும் கூறுகிருர்கள்.

இந்த மகாலின் மேலேறிப் பார்த்தால் காஞ்சிக் கோவில் கோபுரங்களும், திருக்கழுக்குன்ற மலைக் கோவிலும், பிற இயற்கைக் காட்சிகளும் தென்படுகின்றன.

இந்த மகாலில் சுரங்கப் பாதை ஒன்று இருக்கிறது என்றும், அதன் வாயில் அடைக்கப்பட்டு விட்டது என்றும் கூறி, அடைபட்ட வாயிலைக் காட்டுகிருர்கள். மகாலிலிருந்து 120 அடி தூரத்தில் ஒரு பெரிய கிணறு இருக்கிறது. அந்தக் கிணற்றுத் தண்ணீருக்குள் ஒரு கதவும், கதவோடு இணைந்த பெரிய பூட்டும் தென்படுகிறது. மகாலுக்கும் கிணற்றுக்கும் சுரங்கப்பாதை இருப்பதாகக் கருதுகிருர்கள். கிணற்று நீரைச் சீர்திருத்தப்பள்ளியினர் பயன்படுத்தி வருகிருர்கள்.

கோட்டையின் சில இடங்களில் தோண்டியபோது கிடைத்த சிதைந்த சிலைகள், கற்றூண்கள் முதலியன கிடைத்துள்ளன. இவற்றுள் ஒன்று கல்வெட்டு.


இந்தக் கல்வெட்டில் என்னென்ன பொறிக்கப்பட்டிருக்கின்றன?

ஒரு பூந்தொட்டி; அதற்குக் கீழே ஒருபுறம் மண்டை ஓடு; தொட்டியின் மேற்புறம் எழுத்துக்கள். இந்த எழுத்துக்கள் எதைக் குறிக்கின்றன என்று இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்தக் கல்வெட்டானது மகாலை ஒட்டிப் பொருத்தப்பட்டு, இப்பொழுது அங்கே ஒரு கொடிமரத்தையும் நாட்டியிருக்கிருர்கள்.

காஞ்சியின் சுற்றுப்புறங்களில் திம்மசமுத்திரம், திம்மராசன் பேட்டை, திம்மாவரம் என்ற ஊர்களெல்லாம் மன்னன் திம்மராசன் பெயரில் அமைந்தன போலும்! செங்கை மாவட்டம் ஊத்துக்கோட்டைக்கருகே கூடத்திம்ம பூபாலபுரம் என்ற ஓர் ஊர் இருப்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆராய்ச்சியாளர்கள் முயன்ருல், இந்தத் திம்மராசன் யார், எந்த நூற்றுண்டைச் சேர்ந்தவன், இந்தக் கல்வெட்டுக் கூறும் கதை என்ன, என்பன போன்ற விவரங்கள் கிடைக்கலாம்.



# உடல் நலத்திற்கு உகந்த சஃபோலா எண்ணெய்

'சஃபோலா' எண்ணெய் சமையலுக்கு உகந்தது மட்டுமல்ல, உடல் நலத்திற்கும் உகந்த அருமருந்தாகவும் பயன்படுகிறது! இதய நோய், இரத்த அழுத்தம் போன்ற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான உணவினைத் தயாரிப்பதற்கு மிகவும் ஏற்றது 'சஃபோலா' எண்ணெய். இரத்தத்தில் 'கொலஸ்டிரால்' எனப்படும் கொழுப்புப் பொருள் அதிகமாகும்பொழுதுதான் இதய நோய், இரத்த அழுத்தம் முதலியன ஏற்படுகின்றன. 'சஃபோலா' எண்ணெய் இரத்தத்திலுள்ள 'கொலஸ்டிரால்' என்னும் கொழுப்புப்பொருளைக் குறைக்கிறது. இதனால் இதயநோயும், இரத்த அழுத்தமும் குறைந்து விடுகின்றன.

'சஃபோலா' எண்ணெய்யை ஆந்திரம், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் நெய்க்குப் பதிலாகப் பயன்படுத்துகிறார்கள் என்றால், அதன் சுவையும், மணமும், குணமுமே காரணமாகும். அண்மைக் காலத்தில் நல்லெண்ணெய், கடலை எண்ணெய் ஆகியவைகளை விட 'சஃபோலா' எண்ணெய் புகழ்பெற்று விளங்குகிறது.

சமையலுக்கும், உடல் நலத்திற்கும் உகந்த 'சஃபோலா' எண்ணெய் எளிதில் உலரும் தன்மை வாய்ந்ததாக இருப்பதால், 'வார்னிஷ்' 'பெயிண்டுகள்' ஆகியவை தயாரிக்கவும், 'சஃபோலா' எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. இந்த எண்ணெய்யைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட 'வார்னிஷ்' மரச் சாமான்களை நிறம் மாறாமல் பளபளப்பாக வைத்திருக்கவும், இயற்கையால் பாதிக்கபடாமல் பாதுகாக்கவும் உதவுகிறது.

இவ்வாறு புகழ்பெற்று விளங்கும் 'சஃபோலா' எண்ணெய், 'குசும்பா' (safflower) எனப்படும் ஒருவகை எண்ணெய் வித்துப் பயிரின் விதைகளிலிருந்து எடுக்கப்படுகிறது.

'குசும்பா' என்பது ஏறத்தாழ 3 அடி உயரம் வரை வளரக் கூடிய முட்செடியாகும் இச்செடியை ஆங்கிலத்தில் 'கார்த்தமஸ் டிங்டோரிஸ்' (Carthamus tinctoris) என்று கூறப்படுகிறது.

இதன் இலைகள் அகன்றும், இலை நுனி முள்ளைப் போல் கூர்மையாகவும் இருக்கும். குசும்பா செடியின் பூக்கள் பூத்தவுடன் மஞ்சள் நிறத்திலும், காய்ந்த பிறகு 'ஆரஞ்சு' நிறத்திலும் காணப்படும்.

ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களின் வறண்ட பகுதிகளில் எல்லாம் பல்லாண்டு காலமாகவே 'குசும்பா' பயிரிடப்பட்டு வருகிறது. முன்பெல்லாம் பூக்களில் இருந்து சாயம் தயாரிப்பதற்காகவே குசும்பா பயிரிடப்பட்டு வந்தது. செயற்கைச் சாயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, குசும்பாவிலிருந்து சாயம் தயாரிப்பது அறவே நிறுத்தப்பட்டு விட்டது.

ஆனால், அண்மைக் காலத்தில் எண்ணெய் உற்பத்தி செய்யவும், கால்நடைத் தீவனம் தயாரிக்கவுமே அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய நாடுகளில் 'குசும்பா' பயிரிடப்படுகிறது.

'குசும்பா' பின் கண்டவாறு பல பயன் தரும் செடியாக இருப்பதால், தற்பொழுது இந்தியாவில் மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகிறது.

**குசும்பாவின் பல்வேறு பயன்கள்**

1. விதையிலிருந்து சமையலுக்கும், உடல் நலத்திற்கும் உகந்த எண்ணெய் உற்பத்தி செய்ய உதவுகிறது.

2. 'வார்னிஷ்', 'பெயிண்டு' தயாரிக்கவும் குசும்பா எண்ணெய் பயன்படுகிறது.

3. நெய்யுடன் கலந்து சாப்பிடவும், குசும்பா எண்ணெய் பயன்படுகிறது.

4. 'ஆரஞ்சு' நிறச் சாயம் தயாரிக்கக் குசும்பாவின் பூக்கள்உதவுகின்றன.

5. உலர்ந்த பூவிதழ்களைக் குங்குமப் பூவுடன் கலந்து உண்ணலாம்.



சஃபோலா எண்ணெய் தரும் குசும்பாச் செடி

6. குசும்பா செடியின் இளம் துளிர்களைக் கீரைபோல் சமைத்துச் சாப்பிடலாம்.

7. குசும்பாவின் சிறு செடிகளை மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.

8. விதைத்த 50 நாட்களுக்குப் பிறகு குசும்பா செடியில் முட்கள் தோன்றுவதால், அதன்பின் அவைகளை ஆடு மாடுகள் தின்னாததாலின் வேறு பயிர்களைச் சுற்றி, வரப் போரம் மட்டும் குசும்பாவைப் பயிரிட்டால் ஆடுமாடுகளின் அழிவிலிருந்து பயிர்களைக் காப்பாற்ற இயலும்.

9. 'ஸ்வீட் ஆயில்' (Sweet oil) எனப்படும் எள்-நிலக்கடலை-குசும்பா ஆகிய மூன்றும் சம அளவில் கலந்த எண்ணெய் தயாரிக்கவும் பயன்படுகிறது.

10. குசும்பாவின் பிண்ணாக்கு, சிறந்த கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு வகையில் பயன்படும் குசும்பா, தற்பொழுது இந்தியாவில் ஆந்திர மாநிலம் (ராயலசீமைப் பகுதிகள்), மைசூர் ஆகிய மாநிலங்களின் கரிசல் மண் பகுதிகளில் மானாவாரியாகப் பயிரிடப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் தருமபுரி, சேலம், கோவை ஆகிய மாவட்டங்களில் மட்டும் சிறு அளவில் குசும்பா பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டின் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கவும், தமிழ்நாட்டு மக்களின் உடல் நலத்திற்கு உதவவும், தமிழ் நாட்டில் பெரும் அளவில் குசும்பாவைப் பயிரிட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள கரிசல் மண் பகுதிகளில் மானாவாரியாகக் குசும்பாவைப் பயிரிடப் பெரும் வாய்ப்பு உள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு 'குசும்பா' பயிரிட வேண்டியது தமிழக உழவர் பெருமக்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் செய்ய வேண்டிய நல்லதோர் தொண்டு ஆகும். எனவே, பின்கண்ட சாகுபடிக் குறிப்புகளைப் பயன்படுத்திக் கரிசல் மண் நிலங்களில் மானாவாரியாகக் 'குசும்பா' பயிரிடுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

சாகுபடிக் குறிப்புகள்

**ஏற்ற மண் :**

கரிசல் மண்.

**விதைக்கும் பருவம்:**

புரட்டாசி-ஐப்பசி மாதங்களில் மானாவாரியாக விதைக்க வேண்டும்.

**விதையளவு:**

ஏக்கருக்கு 6 முதல் 8 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

**நிலம் தயாரித்தல்:**

நிலத்தை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 5 வண்டி வீதம் தொழு எருவிட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுது விட வேண்டும்.

**அடியுரம் இடுதல்:**

விதைப்பதற்கு முன்பு ஏக்கருக்கு 40 கிலோ அமோனியம் சல்பேட் உரம் தூவி விட வேண்டும்.

**விதைத்தல்:**

நல்ல ஈரம் இருக்கும் பொழுது விதைப்பது சிறந்தது.

**களை எடுத்தல்:**

விதைத்த 25-வது நாளில் முதல் முறையும், 45-வது நாளில் இரண்டாம் முறையும் களை எடுக்க வேண்டும்.

**மேலுரமிடுதல்!**

தேவையில்லை.

**பயிர்ப் பாதுகாப்பு:**

பெரும்பாலும் குசும்பாவில் பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்குவதில்லை. இருப்பினும் முன் தடுப்பாக ஒவ்வொரு முறையும் களை எடுத்த பிறகு பாரத்தியான் அல்லது பாலிடாலுடன் டைத்தேன் கலந்து தெளிப்பது சிறந்தது.

**அறுவடை:**

விதைத்த 120 நாட்களில் குசும்பா அறுவடைக்கு வரும். குசும்பா செடிகளின் இலைகள் காய்ந்தவுடன், செடிகளை அறுத்து எடுத்து அல்லது பிடுங்கி வயலிலேயே கொத்துக் கொத்தாக வைத்துக் காயவிட வேண்டும். விதைகள் உள்ள பூங்கொண்டைகள் நன்கு காய்ந்த பிறகு அவைகளைத் தடியால் அடித்து விதைகளைப் பிரிக்க வேண்டும்.

**மகசூல்:**

ஏக்கருக்கு 300 முதல் 400 கிலோ விதை மகசூல் பெற முடியும். குசும்பாவின் வளர்ச்சிப் பருவத்தில் 2 தடவை போதிய மழை பெய்யுமானால், மேலும் அதிகமாக மகசூல் கிடைக்கக்கூடும்.

**எண்ணெய் எடுப்பது எப்படி?**

குசும்பா விதைகளைத் தனியாகவே செக்கில் இட்டு ஆட்டி எண்ணெய் எடுக்க முடியும். எள்ளுடன் கலந்து செக்கிலிட்டு ஆட்டியும் எண்ணெய் எடுக்கலாம்.

**ஆராய்ச்சி:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் குசும்பா பற்றிய விரிவான ஆராய்ச்சி கடந்த ஜூன் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சிகளின் பயனாய்க் குசும்பாவின் மகசூலைப் பெருக்கி, தமிழ் நாட்டில் உண்ணத்தக்க எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கிடவும் தமிழக மக்களை இதயநோய், இரத்த அழுத்தம் ஆகியவைகளிலிருந்து காப்பாற்றவும் இயலும்! எனவே, குசும்பா பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை அறிய ஆவலோடு காத்திருப்போம்!

## வெண்பாப் போட்டி: 65

ஈற்றடி: **எண்ணும் பெருமை இவை**

முடிவு நாள்: 16-10-73

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

# நெல் உழவியல் ஆராய்ச்சி



தமிழ்நாட்டின் முக்கியமான உணவுப் பொருள்களில் நெல் முதன்மையானதாகும். தற்போது நமது மாநிலத்தில், 23.47 இலட்சம் எக்டேரில் நெல், நன்செய்ப் பயிராகவும், 4.00 இலட்சம் எக்டேரில் புன்செய்ப் பயிராகவும் சாகுபடி செய்யப்படுகின்றது. நமது மாநில சராசரி மகசூல், எக்டேருக்கு 1,553 கிலோவாகும். இது, 'நம் நாட்டின் எல்லா மாநிலங்களையும் விட அதிகமானது. தற்போது ஆண்டுதோறும் 53 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்கிறோம். இந்த அதிக உற்பத்திக்கு அமோக விளைச்சல் ரகங்களும் சீரான கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளும்தான் காரணமாகும்.

நமது மாநிலத்தில் நெல் மூன்று முறைகளில் சாகுபடி செய்யப்படுகின்றது. பெரும்பாலும் நன்செய்ப்பயிராகவும், சில இடங்களில் புன்செய்ப் பயிராக ஆரம்பித்துப் பின்னர் பருவ மழையினால் பாசன வசதி அதிகரித்த பின்பு நன்செய்ப் பயிராக மாற்றியும், வசதி அதிகரித்த பின்பு நன்செய்ப் பயிராக மாற்றியும், இன்னும் சில இடங்களில் பருவ மழையைப் பயன்படுத்தி மானாவாரியாகவும் பயிர் செய்யப்படுகின்றது.

நெற்பயிர், தொன்றுதொட்டுப் பயிரிடப்பட்டு வந்த போதிலும், சமீப காலமாக நெல் உற்பத்தியில் அமோக விளைச்சல் ரகங்களின் அறிமுகத்தால் ஒரு புரட்சி ஏற்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அகில உலக நெல் ஆராய்ச்சி நிலையத்தாரால் வெளியிடப்பட்ட ஐ.ஆர். குட்டை நெல் ரகங்கள் அதிக உரமேற்று, அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளது. இந்த அமோக விளைச்சல் ரகங்களை இனக் கலப்புச் செய்து பல புதிய ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள, கோயம்புத்தூர் உழவியல் துறையில் நடுத்தர வயதுள்ள அமோக விளைச்சல் ரகங்களில் பல சோதனைகள் நடத்தப்பட்டன. 'ஜெயா', 'விஜயா', 'ஐ.ஆர். 20' என்ற நெல் ரகங்கள் கார்ப் பட்டத்தில் 150 கிலோ தழைச்சத்தை ஏற்று அமோக விளைச்சல் தர வல்லனவாக உள்ளன. 'ஜெயா' என்னும் நெல் ரகமும் 'கோ. 36' என்னும் நெல் ரகமும் எக்டேருக்கு 8,525 கிலோ மகசூல் கொடுத்துள்ளன.

'ஜெயா' நெல், நாள் ஒன்றுக்கு 58.8 கிலோ தானிய மகசூலும், 'கோ 36' எனும் நெல் 60.4 கிலோ தானிய மகசூலும் கொடுத்துள்ளன.

அதிக தழைச் சத்து உரத்தை ஏற்று அதிக விளைச்சல் தரும் குறுகிய கால நெல் ரகங்களில் 'காவேரி', 'கண்ணகி', 'ரத்னா' 'சி.ஆர். 44-35' (ஐ.ஆர். 8 டி.கே.எம். 6), 'கோ. 35' முதலிய நெல் ரகங்களை ஒப்பிட்டுப் பார்த்ததில், 'கோ. 36' எனும் நெல்ரகம் கார்ப்பட்டத்தில் 150 கிலோ தழைச்சத்து உரத்தை ஏற்று அதிக விளைச்சலையும், 'சி.ஆர். 44-35' கோடைப் பட்டத்தில் அதிக விளைச்சலையும் கொடுத்துள்ளன. இந்த இரு நெல் ரகங்களையும் இரு போக சாகுபடியாகச் செய்யுங்கால் அதிக நிகர லாபம் கிடைக்கின்றது. இந்த இரண்டு நெல்ரகங்களும் சன்ன ரக அரிசியைக் கொடுக்க வல்லன. ஓரளவு நோயும், பூச்சிகளும் அதிகமாகத் தாக்குவதில்லை. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை இந்த நெல் ரகங்களின் அதிக விளைச்சல் திறனைக் காட்டுகின்றது.

| நெல் ரகம் | | தழைச் சத்து எக்டேருக்கு 150 கிலோ இடும்போது மகசூல் | |
|---|---|---|---|
| | | கார் 1971 | ராபி 1972 |
| கோ. 36 | ... | 6,418 | 5,073 |
| கிருஷ்ணா | ... | 6,250 | 4,785 |
| ரத்னா | ... | 5,645 | 5,332 |
| பூசா-2-21 | ... | 5,610 | 5,111 |
| சி. ஆர். 44-35 | ... | 5,074 | 5,911 |
| காவேரி | ... | 4,871 | 4,518 |

**விதையுடன் மருந்து கலத்தல் :**

விதைக்கும் முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கரிம, பாதரச மருந்துகளான 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'டி.எம்.டீ.டி.' கலந்து விதைக்கவும்.

**நாற்றங்கால் தயாரிப்பு :**

ஒரு ஏக்கர் நடுவதற்கு 18 கிலோ விதையை 12 சென்ட் நாற்றங்காலில் விதைக்க வேண்டும். இவ்வாறு குறைந்த அளவு விதையை அதிகப் பரப்பில் விதைப்பதால், விதைகள் நன்கு முளைப்பதுடன், விரைவாக வளரும் திடமான நாற்றுகள் கிடைக்கும். இதனல் பூச்சி பூஞ்சாளத் தாக்குதல் குறையும். நாற்றின் வளர்ச்சி குன்றி இருந்தால், நாற்றுப் பறிப்பதற்குப் பத்து நாட்கள் முன்பாக ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 1-2 கிலோ அமோனியம் சல்பேட் வீதம் மேலுரமாக இடுவது நாற்றுகளின் வளர்ச்சியைத் தூண்டிவிடும். நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 0.05 சத பாரத்தியான் தெளித்து பூச்சிகளின் தாக்குதலைக்கட்டுப்படுத்த வேண்டும்.

**நாற்றின் வயது :**

நாற்றின் வயது அந்த நெல் ரகத்தின் வயதைப் பொறுத்து மாறுபடும். உதாரணமாக நான்கு மாத வயதுடைய நெல்லானல் நான்கு வாரங்கள் நாற்றங்காலில் இருக்கலாம். ஒரு மாதத்திற்கு ஒரு வாரம் என்ற விகிதத்தில் நாற்றங்காலில் இருத்தல் வேண்டும். நாற்றை உரிய பருவத்தில் பறித்து நடுவதால் நல்ல மகசூல் கிடைக்கின்றது.

**நாற்றின் அளவு :**

நாற்றுப் பறித்து நடும்போது 2, 4, 6, 8, 10 என்று நாற்றுக்களை வைத்து நடுகின்றோம். இது தேவை இல்லை! மேற்கூறிய முறையில் நாற்றங்கால் தயாரித்திருந்தால் குழிக்கு 2 நாற்றுக்கள் வீதம் வைத்து நட்டால் போதுமானது. அதிக நாற்றுக்கள் தேவையில்லை. செழித்து வளர்ந்த நோய் நொடியில்லாத திடமான நாற்றுக்களை நடுவதால், கால தாமதமின்றிப் பச்சை பிடித்துப் பயிர் சீராக வளரும்.

**இடைவெளி :**

நெல் ரகத்திற்கேற்ப இடைவெளி விட்டு நடவேண்டும். பொதுவாக 20×10 செ.மீ. இடைவெளி விட்டு நட்டால் போதுமானது. முந்திய கார்ப் பருவத்தில் குறுகிய இடைவெளியான 15×10 செ.மீ. போதுமானது. நாற்றுக்களை 2 செ.மீ. ஆழத்திற்கு மேல் நட வேண்டியதில்லை. 'காஞ்சி', 'கண்ணகி' போன்ற குறுகிய கால ரகங்களுக்கு 10×10 செ. மீ. இடைவெளியும், ஒரு சதுர மீட்டர் பரப்பில் 100 குத்துகளும் (தூர்கள்) இருக்குமாறு நடவு செய்தால், எக்டேருக்கு 7,000 கிலோ மகசூல் எளிதில் கிடைக்கிறது.

**உரமிடல் :**

நெற் பயிருக்குத் தழைச் சத்து, தானியச் சத்து, சாம்பற்சத்து ஆகிய மூன்று சத்துக்களும் அவசியம் தேவை. சில இடங்களில் துத்தநாகச் சத்துக் குறைவாகக் காணப்படுகிறது. அந்த இடங்களில் 'துத்தநாக சல்பேட்' எக்டேருக்கு 20 கிலோ வீதம் இடுதல் நல்லது. மேற்கூறிய மூன்று வகைச் சத்துக்களும் பயிருக்கு ஒவ்வொரு விதத்தில் பயன்படுவதால் அவற்றைப் பயிருக்குத் தேவையான அளவு, தேவையான பருவத்தில் இட வேண்டும். குறிப்பாகத் தழைச்சத்து, பயிரின் வளர்ச்சியை அதிகரித்துப் பயிர் செழித்து வளர்ந்து தூர்கட்டி வளர ஏதுவாகின்றது. மணிச்சத்து, பயிர் நன்றாகத் தூர்கட்டி வளரவும், வேர்கள் நன்றாக வளரவும், தானிய மணிகள் திரட்சியாகவும் உதவுகின்றது. தழைச்சத்து, உரங்களை நல்ல முறையில் பயன்படுத்தவும், மணிச்சத்து உதவுகின்றது. சாம்பல் சத்து அதிக தழைச் சத்தினுல் ஏற்படும் கேடுகளைத் தவிர்க்கவும், தானியத்தின் தரத்தை அதிகரிப்பதற்கும் பயன்படுகிறது.

வளர்ச்சிக் காலம் முழுதும் உரச் சத்து, பயிருக்குக் கிடைக்குமாறு உரமிடல் வேண்டும். நெற் பயிருக்குக் கீழ்க்கண்டவாறு உரமிடலாம்.

கார்ப் பருவத்தில் இயற்கை எரு உரங்கள் இடாத பயிருக்கு 200 கிலோ தழைச் சத்தும், 60 கிலோ மணிச் சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும், இட வேண்டும் ; இயற்கை எரு இட்ட பயிருக்கு 180 கிலோ தழைச் சத்தும், 60 கிலோ மணிச்சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும் இட வேண்டும்.

தாளடிப் (ராபி) பயிருக்கு இயற்கை எரு இடாவிட்டால் 150 கிலோ தழைச் சத்தும், 80 கிலோ மணிச் சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும் இட வேண்டும்; பாக்டீரியல் பிளைட் போன்ற நோய்களினுல் பாதிக்கப்படும் பயிருக்கு எக்டேருக்கு 120 கிலோ தழைச் சத்தும், 60 கிலோ மணிச் சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும் இடுதல் நல்லது.

இந்த அளவு உரங்களை இடும்போது, இடும் காலத்தையும் அறிந்து இடவேண்டும். மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களைக் கடைசி உழவின் போது இடவேண்டும். தழைச் சத்து உரத்தைக் குறுகிய காலப் பயிரானல் 2/3 பாகத்தை நடவின் போதும், மீதியில் 1/3

## இரகசியத் தின்பண்டம்

சாக்கலேட்டு, கோக்கோ விதையிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு தின்பண்டவகை. துவக்கத்தில் மெக்சிகோ நாட்டினர் கோக்கோ விதையிலிருந்து ஒரு வித பானத்தைத் தயாரித்துக் குடித்து வந்தனர். அவர்களிடமிருந்து ஸ்பெயின் நாட்டினர் கோக்கோ பானம் தயாரிக்கக் கற்றனர். பின், சாக்கலேட்டு தயாரித்தனர். சுமார் நூறுண்டுக்காலம் ஸ்பானியர் இதை இரகசியமாகவே வைத்திருந்தனர்; பின்னர் இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி முதலிய நாடுகளுக்கும் சாக்கலேட்டு தயாரிக்கும் முறை பரவியது. 1657-ல் இலண்டனில் சாக்கலேட்டு ஒரு பிரஞ்சுக்காரரால் முதன் முதல் விற்கப்பட்டது. அது முதல் அங்கும் பரவியது. 1700-ல் பால் கலந்து சாக்கலேட்டு செய்யும் முறையை ஆங்கிலேயர் கண்டுபிடித்தனர். 18-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஐரோப்பா முழுவதும் சாக்கலேட்டு பரவியது.

பாகத்தை நட்ட 21 நாட்கள் கழித்தும் இட வேண்டும். நடுத்தர காலப் பயிரானால் பாதி உரத்தை நடவின் போதும், மீதியில் பாதியை நட்ட 21 நாட்கள் கழித்தும், மீதியைக் கதிர் பிடிக்கும் ([illegible]) பருவத்திலும் இட்டால் நல்ல பலன்கிட்டும்.

நடுத்தர வயதுடைய நெல் வகைகளாகிய 'ஜெயா', 'விஜயா', 'ஐ.ஆர். 20', ஐ.இ.டி. 1039', 'வளர்ப்பு (கல்ச்சர்) 14503' ஆகிய 5 நெல் ரகங்களின் தழைச் சத்து உரத் தேவையைக் கண்டறிய நடத்திய ஆராய்ச்சியின் முடிவுகள் கீழே தரப் பட்டுள்ளன :

| நெல்ரகத்தின் பெயர் | மகசூல் (எக்டேருக்கு) தழைச்சத்து எக்டேருக்கு (கிலோவில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 0 | 50 | 100 | 150 | 200 |
| ஜெயா ... ... | 4,406 | 4,956 | 6,288 | 6,519 | 6,379 |
| விஜயா ... ... ... | 3,663 | 4,278 | 5,418 | 6,033 | 6,033 |
| கல்சர் (1039) ... ... | 3,893 | 4,470 | 5,085 | 5,738 | 6,058 |
| கல்சர் (14503) ... ... | 3,458 | 4,771 | 5,405 | 5,686 | 5,840 |
| ஐ.ஆர். 20 ... ... | 3,701 | 4,342 | 5,182 | 5,546 | 5,738 |

மேற்கண்ட அட்டவணையில், உரத்தின் அளவு அதிகரிக்க அதிகரிக்க உயர் விளைச்சல் ரகங்கள் அதிக மகசூலைத் தரவல்ல தன்மையுடையதாக இருப்பது நன்கு தெளிவாகக் காணப்படுகிறது. அதே போல், நம் நாட்டு நெல் ரகங்களான டி. கே. எம். 6, கோ. 33 (கருணா) மற்றும் ஏ.டி.டி. 27 போன்ற நெல் ரகங்கள் 0 முதல் 200கிலோ வரை தழைச் சத்து உரங்கள் இடும் போது ஏற்படும் அதிக மகசூலையும் கீழே கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம் :

| ரகத்தின் பெயர் | மகசூல் தழைச்சத்து எக்டேருக்கு (கிலோவில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 0 | 40 | 80 | 120 | 160 | 200 |
| டி.கே.எம். 6 ... | 2,351 | 2,881 | 2,967 | 2,593 | 2,413 | 2,054 |
| ஏ.டி.டி. 27... ... | 2,268 | 3,043 | 3,378 | 3,824 | 3,820 | 3,447 |
| கருணா (கோ. 33) ... | 1,727 | 2,902 | 3,458 | 3,927 | 4,196 | 4,416 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து பின்கண்டவை தெளிவாகின்றன.

உள்ளூர் ரகமான 'டி.கே. எம். 6' எக்டேருக்கு 80 கிலோ தழைச்சத்து வரை இடும் போது அதிக மகசூல் தருகின்றது; உர அளவை மேலும் அதிகரிக்கும் போது மகசூல் குறைகின்றது.

'ஏ.டி.டி. 27' என்னும் நெல் 120 கிலோ தழைச் சத்து வரை இடும்போது மகசூல் அதிகரிப்பு ஏற்படுகின்றது.

'கருணா' என்னும் நெல் 200 கிலோ தழைச் சத்து வரை அதிக மகசூல் அளிக்கிறது.

மேற்கண்ட ஆராய்ச்சி முடிவுகள் நமக்கு எந்தெந்த நெல் ரகங்களுக்கு எந்தெந்த அளவுவரை உரத்தை அதிகரித்துப் போட்டு அதிக மகசூல் பெறலாம் என்பதையும், அதிக உரம் ஏற்காத நெல் ரகங்களுக்கு உரத்தை அதிகமாகப் போடுவதால் உரத்தை வீணாக்குவதோடு செலவை அதிகரித்து மகசூலையும் குறைத்து விடுகின்றோம் என்ற உண்மையையும் நன்கு புலப்படுத்துகின்றன.

**பின்செய் நேர்த்தி :—**

தற்போது சாகுபடியிலுள்ள அமோக விளைச்சல் ரகங்களுக்கு அதிக உரமிடுவதாலும், பயிர் குட்டையாக இருப்பதாலும் களைகள் அதிகமாக வளர வாய்ப்பிருக்கின்றது. தற்போதைய சமுதாயச் சூழ்நிலையில், விவசாய வேலையாட்களை வைத்துக் களை எடுப்பது செலவு அதிகரிப்பதோடு, நல்ல முறையில் முழுமையாகக் களைத் தடுப்புச் செய்ய ஏதுவானதாக இல்லை.

எனவே களைக் கொல்லிகள் மூலம் சிறந்த முறையில் களை தடுப்புச் செய்யத் தற்போது வழி பிறந்துள்ளது.

இந்த இரசாயனக் களைத் தடுப்பை இரண்டு முறைகளில் செய்யலாம். ஒன்று 'முளைக்கும் முன் களை தடுப்பு' (Pre-emergence weed control) என்ற உத்தியின்படி 'மாசேடி' (Machete) குருணையை எக்டேர் ஒன்றுக்கு 2.00 கிலோ வீரிய மருந்து வீதம் விதைத்த பின் அல்லது நடவு நட்ட பின் ஆறாவது நாளில் தூவ வேண்டும். குருணை மருந்துடன் தேவையான அளவு மணலையோ அல்லது உரத்தையோ கலந்து கொள்வதால் சீரான அளவு தூவுவதற்கு இயலும். குருணையைத் தூவுவதற்கு முன் வயலில் தண்ணீரை நன்ருக வடித்துவிட வேண்டும். தூவிய பின் 36 மணி நேரம்கழித்துத் தண்ணீர் விடுவது நல்லது.

'முளைத்த பின் களைத்தடுப்பு' (Post-emergence weed control) உத்தியின்படி நேரடியாகத் தூவி விதைக்கப்பட்ட நெற் பயிரிலும், 'ஸ்டாம் எப். 34' என்ற திரவ மருந்தை நட்ட அல்லது விதைத்த மூன்ருவது வாரத்தில் வயலில் உள்ள தண்ணீரை நன்ருக வடித்த பின் களைகளின் மீது படியும் விதமாக விசைத் தெளிப்பாளுல் எக்டேருக்கு 3.5 லிட்டர் வீரிய மருந்து வீதம் தெளிக்க வேண்டும்.

இந்தக் களைக் கொல்லிகளை உபயோகிப்பதனுல் செலவும் குறைவு; களை தடுப்பும் நல்ல முறையில் இருக்கின்றது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை வெவ்வேறு களை தடுப்பு முறைகளில் கிடைத்த விளைச்சல் மற்றும் பொருளாதார மதிப்பீட்டைக் காட்டுகின்றது.

| செய்முறை | களை தடுப்புக்கு எக்டேருக்கு ஆகும் செலவு (ரூபாய்). | உழவர் செய்முறைக்கும், களைக்கொல்லி தெளிப்பதற்கு ஆகும் செலவுக்கும் உள்ள வேறுபாடு (ரூபாய்). | எக்டேர் விளைச்சல் (கிலோ). | உழவர் முறையைவிட விளைச்சல் வேறுபாடு (கிலோ). | உழவர் முறையைவிட நிகரலாபம் (ரூபாய்). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அ. விதைக்கப்பட்ட பயிர்: | | | | | |
| 1. களையெடுக்காத பயிர் | ... | ... | 1,330 | ... | ... |
| 2. மாசேடி குருணை 2.00 கிலோ (வி.ம.) தூவிய பயிர் ... | 123 | ---111 | 5,000 | 670 | 546 |
| 3. கைக்களை மும்முறை எடுத்தது (உழவர் முறை) ... | 234 | ... | 4,330 | ... | ... |
| ஆ. நாற்று விட்டு நட்ட பயிர் : | | | | | |
| 1. களை எடுக்காத பயிர் | ... | ... | 3,330 | ... | ... |
| 2. மாசேடி குருணை 2.0 கிலோ (வி.ம.) இறைத்த பயிர் ... | 123 | ---33 | 5,200 | 700 | 587 |
| 3. ஸ்டாம் எப். 34 மருந்து 3.5 லி. (வி.ம.) தெளித்த பயிர் ... | 255 | ---99 | 4,500 | ... | ---100 |
| 4. கைக்களை இருமுறை எடுத்த பயிர் ... | 156 | ... | 4,500 | ... | ... |

**நெல்லின் நீர்த் தேவையும், நீர்ப் பாசன நிருவாகமும்.**

அதிகமாகப் பாசன வசதியுள்ள இடங்களிலேயே நெல் பயிரிடப்படுகின்றது. நெல் சாகுபடிக்குத் தண்ணீர் எப்போதும் வயலில் இருந்து கொண்டேயிருக்க வேண்டியுள்ளது. இதன் நீர்த் தேவையைப் பற்றி ஆராயும் போது ஐ. ஆர். 20 போன்ற நெல் ரகங்களுக்கு 5 செ.மீ. ஆழத்திற்குத் தண்ணீரை மூன்று நாட்களுக்கு ஒரு தடவை விடுவதும், நாள் தோறும் 5 செ. மீ. ஆழத்திற்குத் தண்ணீர் விடுவதும் முந்திய கார்ப் பருவத்தில் ஒரே மாதிரியான விளைச்சலைக் கொடுத்ததாகக் கண்டறியப் பட்டது.

உயர் விளைச்சல் நெல் ரகமான ஐ. ஆர். 20 போன்றவைகள் உள்ளூர் ரகத்தை விட அதிக நீர்த் தேவை கொண்டதா என்று கண்டறிய கோ. 32 என்னும் நெல் ரகத்தின் நீர்த் தேவையுடன் ஒப்பிடப் பட்டது. இதில் கோ. 32 நெல் ரகம் 936.00 மி. மீ. தண்ணீரும், ஐ.ஆர். 20 நெல் 923.00 மி.மீ. தண்ணீரும் வளர்ச்சிக் காலத்தில் எடுத்துக் கொள்வதாகத் தெரிந்துள்ளது. எனவே உயர் விளைச்சல் ரகங்கள், அளவிற்கு அதிகமான தண்ணீரை எடுத்துக் கொள்ளும் என்று ஐயப்பாடு வேண்டுவதில்லை. மேலும் இந்த நெல் ரகங்கள் அதிக உரத்தை ஏற்று, எடுக்கும் நீரை முழுமையாகப் பயன்படுத்தி அதிக மகசூலையும் அளிக்கின்றன.

தகவல் : உழவியல் துறை, வேளாண்மைக் கல்லூரி; கோவை.

தொகுப்பு :

தகவல் தொடர்பு நிலையம்;
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

# சர்க்கஸ் வரலாறு



சர்க்கஸ் நடத்தும் வழக்கம் சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே ரோமானியரிடம் இருந்தது. 'சர்க்கஸ்' என்ற சொல்லுக்குக் கிரேக்க, லத்தீன் மொழிகளில் 'வட்டம்' அல்லது 'வளையம்' என்று பொருள். குதிரைப் பந்தயம் முதலான பந்தயங்களை வட்டமான இடத்தில் நடத்துவர். அவ்வட்டத்தைச் சுற்றிலும் மக்கள் உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பர். முதலில் சர்க்கஸ் திறந்த வெளியில் நடந்தது. பின்னர்க் கட்டடங்களில் நடத்தினர். இக்காலத்தில் சர்க்கஸ் பெரும்பாலும் கூடாரங்களிலேயே நடைபெறுகிறது.

சர்க்கஸ் மாக்சிமஸ் என்ற சர்க்கஸ் பண்டைய ரோமானிய சர்க்கஸ்களுள் மிகவும் புகழ் பெற்றது; பெரியது. 3,85,000 பேர் வீற்றிருக்கக் கூடிய வகையில் சர்க்கஸ் கட்டடத்தை அக்காலத்திலே அமைத்திருந்தனர். குதிரைப் பந்தயம், குதிரை வண்டிப் பந்தயம், குட்டிக்கரணமடித்தல், கயிற்றின்மீது நடனம் செய்தல் முதலான காட்சிகளை அக்காலத்திலே ரோமானியர் சர்க்கஸில் காட்டினர். ஆசியா மைனர், வட ஆப்பிரிக்கா, ஸ்பெயின், பிரான்சு முதலான நாடுகளின் மீது ரோமானியர் படையெடுத்து, அவற்றைக் கைப்பற்றியபின் அந்நாடுகளிலும் சர்க்கஸ் நடத்தினர். அவ்வாறு ரோமானியர் கட்டி நடத்திய சர்க்கஸ் கட்டடங்களின் சிதைந்த சின்னங்களை இன்றும் அந்நாடுகளில் காணலாம்.

ரோமானிய வீழ்ச்சியினால் சர்க்கஸின் வளர்ச்சியும் குன்றியது. பிச்சைக்காரரும் கூத்தாடிகளும் தம் வயிறு வளர்க்க ஆங்காங்கே கடைவீதிகளிலும் சந்தைகளிலும் தமக்குத் தெரிந்த வித்தைகளைச் செய்து பிழைத்தனர். சிற்சில இடங்களில் நாய், பன்றி, கரடி போன்ற விலங்குகளையும் பழக்கி, அவற்றைக் கொண்டு சில வித்தைகளையும் பழக்கிச் செய்வித்து வந்தனர். 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சார்ஜண்ட் மேஜர் பிலிப் ஆஸ்ட்லி என்ற ஆங்கிலக் குதிரை வீரர் லண்டனில் புதிய முறையில் சர்க்கஸ் தொடங்கினார். இதுவே நவீன சர்க்கஸின் தொடக்கம் ஆகும். ஆஸ்ட்லியைப் பின்பற்றிப் பலரும் சர்க்கஸ் நடத்தத் தொடங்கினர். இவருடைய சர்க்கஸில் முதலில் குதிரையேற்றமே முக்கியமான இடம் பெற்றது. பிறகு, கழைக்கூத்து, கோமாளியின் கேளிக்கைகள் முதலியவற்றையும் சர்க்கஸில் முதலில் காட்டியவர் இவரே!



# பார்த்தோம்

# படித்தோம்

சிங்கப்பூர் பா. கேசவன் படைத்துள்ள கட்டுரை—நாலும் இரண்டும் சிறப்பாக அமைந்திருக்கிறது. நீண்ட நெடுங் காலமாகத் தமிழ் மக்கள் கொண்டிருக்கின்ற கருத்தை மாற்ற முனைவது—ஆராய்ச்சியின் அருந்தொண்டாக இருக்கலாம். ஆனால், ஆய்வாளரின் கருத்து ஆணித்தரமாக அமையவில்லை; வலிந்து கூறுவதாகவே தோன்றுகிறது.

—சிவ. சிதம்பரம்,
திருச்சி.

அடேயப்பா! அண்மையில்தான் அரசு செய்திப்படம் எடுக்கும் பணியில் ஈடுபட்டதுபோல் தோன்றுகிறது. அதற்குள் நூறு படங்கள் முடிந்துவிட்டன என்றால், வியப்பாக இருக்கிறதே!

—ஜி. கோவிந்தராஜ்,
சென்னை-17.

'ஒரு நூறு பல நூறு ஆகட்டும்' என்ற கட்டுரையைப் படித்தேன். தமிழ் மக்களுக்குள்ள கஞ்சத்தனம் கட்டுரையாளரைப் பிடித்துக் கொண்டு விட்டது போலும்; 'ஒரு நூறு பல ஆயிரம் ஆகட்டும்'என்று வாழ்த்தினால் என்ன?

—ஏ. சுப்பிரமணி,
திருத்தணி.

பேரறிஞர் அண்ணாவின் புகழ்பாடும் கவிதைகள் அனைத்தும் படிக்கப் படிக்க ஆனந்தம் தருகின்றன.

—கே. சொக்கலிங்கம்,
இராமனாதபுரம்.

சென்னையின் மெரினா—நாள்தோறும் வளர்ச்சியுற்று வருவதைப் புகைப்படங்களின் வாயிலாகவும் சுவையான கட்டுரையின் வடிவிலும் எடுத்துரைத்துள்ள 'தமிழரசு' ஏட்டுக்கு நன்றி.

எஸ். ஆர். சந்திரன்,
கோவை-1.



''பிறந்த நாள் விழா''-தமிழகத்தில் தோன்றுதொட்டு நடைபெற்ற விழா—நடைபெறுகின்ற விழா என்னும் உண்மையை ஆய்வு செய்து நிறுவியிருக்கும் கோவை இளஞ்சேரன் பாராட்டுக்குரியவர். பல்கலைக் கழக மாணவர்களுக்குரிய பாடப் புத்தகத்தில் இடம் பெறும் தகுதி இந்த இலக்கிய—ஆய்வுக் கட்டுரைக்கு உண்டு என்று துணிந்து கூறலாம்.

—ஆர். ஏ. வி. பதி,
சேலம்.

விடுதலைத் தியாகிகளிடம் அண்ணா வைத்திருந்த பாசத்தைத் தெளிவாகக் கூறியுள்ளது 'அண்ணாவின் வாழ்விலே' என்ற கட்டுரை. தமிழக மக்களுக்கு மட்டுமல்ல—கோவா மக்களுக்கும் மனமகிழ்வு தரும் பணியினை அண்ணா செய்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

—அன்புவேந்தன்,
மதுரை-1.

காஞ்சி நகராட்சிக்கு 105 வயதாகிவிட்டதா? வியப்பாக இருக்கிறதே! இதைப்போல, நூற்றாண்டு கொண்டாடிய வேறு நகராட்சிகளையும் 'தமிழரசு' ஏட்டில் அறிமுகம் செய்யலாமே!

—இரா. வேலன்,
சென்னை-5.

தூத்துக்குடியில் உருவாகவிருக்கும் அனல் மின் திட்டம் குறித்து மிக விளக்கமான கட்டுரையொன்றினை வெளியிட்டுச் சிறப்புச் செய்திருக்கிறீர்கள். தமிழகத்து மின் வளர்ச்சியில் தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஒரு மைல் கல்லாக அமையும் என்பது உறுதி என்று கட்டுரையின் முத்தாய்ப்பாகக் கூறியிருப்பது பொருத்தமானதாகும்.

—எஸ். காந்திமதி,
திருநெல்வேலி-1.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர். சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.




Criterion CO 2883

பதிவு எண். M. 8676




நாம்
என்பது....
நாம்
இந்நாட்டு மன்னர்கள்
இன்றைய சமுதாயம்
எதிர்காலத்தை
உருவாக்குபவர்கள்
வருங்காலத்தின் வாழ்வும் வளமும் நம் கையில்!
எதிர் காலத்தைப்
பொன்னொளியாக்க
நமது அரசுத்
திட்டங்களின் பட்டியல் இதோ!
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
மாநிலத் திட்டக்குழுப் பணிகள்!
ஏழையர்க்கு வீட்டுமனை, நிலப்பட்டா!
குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!
குடிசை மாற்றுவாரியப் பணிகள்!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை
தொழில் வளர்ச்சிக்குப் புதிய அமைப்புகள்!
நமது அரசின் இத்திட்டங்களும், முயற்சிகளும்
முழு வெற்றி ஈட்டிட நாம் ஆற்றும் கடமையே
அளவான குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!
தமிழரசு
குடும்ப நலத் துறை தமிழ்நாடு அரசு